# பச்சிலை

## இதழ் - 07




## தேசிய வாசிப்பு மாத
## சிறப்பு மலர்









வெளியீடு:
பச்சிலை மலர்க்குழு,
புலோப்பளை பொதுநூலகம்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலை

## இதழ் - 07

## தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர்

வெளியீடு:
பச்சிலை மலர்க்குழு
புலோப்பளை பொதுநூலகம்
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | பச்சிலை |
| இதழ் | - | 7 |
| பக்கங்கள் | - | XIV - 64 |
| அச்சுப்பதிப்பு | - | சக்தி பதிப்பகம்<br>A9வீதி, மீசாலை. |
| மலராசிரியர் | - | திரு. செ. கஜானன் |
| வெளியீடு | - | "பச்சிலை மலர்க்குழு"<br>புலோப்பளை பொதுநூலகம்,<br>பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,<br>பளை. |
| தொலைபேசி இல | - | 024 324 3544 |
| மின்னஞ்சல் | - | pallaips@gmail.com |
| கடதாசி | - | 70gsm |
| பக்க அளவு | - | B5 |
| விலை | - | 1800/= |
| ISSN | - | 2806 - 5298 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சிலை மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச சபை உறுப்பினர்கள்



## தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலோப்பளை உபஅலுவலக உத்தியோகத்தர்கள்



## முள்ளிப்பற்று உபஅலுவலக உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகமாலை உபஅலுவலக உத்தியோகத்தர்கள்



## வட்டார உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலை மலர்க்குழு

தலைவர் - **திரு. வி.எஸ். புவனராசா**
(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர், பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகம்)

செயலாளர் - **திருமதி. சி. பபிதா**
(நூலகர், புலோப்பளை பொதுநூலகம்)

பொருளாளர் - **திருமதி. அ. தர்மகுலசிங்கம்**
(ஓய்வுநிலை நூலகர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

மலராசிரியர் - **திரு. செ. கஜானன்**
(நிறுவுனர் அகரம் கவின்கலைக் கலாமன்றம்)

## செயற்குழு உறுப்பினர்கள்

**கௌரவ சு. சுரேன்** (தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

**கௌரவ மு.கஜன்** (உபதவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

**கௌரவ அ.அருட்செல்வி** (உறுப்பினர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

**திருமதி. த. தர்சினி** (செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

**திருமதி. உ. கிருஷ்ணதீபா** (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உ.உ.ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி)

**திரு.அ.கேதீஸ்வரன்** (திட்டமிடல் பணிப்பாளர் மாவட்ட செயலகம், கிளிநொச்சி)

**திரு.சி. கோகுலதர்சன்** (ஆசிரியர், கிளி/ தர்மக்கேணி அ.த.க பாடசாலை)

**திரு.ஆ.பாலசிங்கம்** (உபதலைவர் - இத்தாவில் கமக்கார அமைப்பு)

**திரு. வே. தங்கராசா** (பொருளாளர், வளர்மதி சனசமூக நிலையம், மாசார்)

**திருமதி. இ. சிறிஸ்கந்தராசா** (ஆசிரியர், கிளி/ தர்மக்கேணி அ.த.க.பாடசாலை)

**திருமதி. சு. ரேவதி** (முகாமைத்துவ உதவியாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள் விபரம்

| பெயர் | பதவி | தொலைபேசி இல. |
|---|---|---|
| 01. கௌரவ சுப்பிரமணியம் சுரேன் | தவிசாளர் | 0773932980 |
| 02. கௌரவ முத்துக்குமார் கஜன் | உபதவிசாளர் | 0774561879 |
| 03. கௌரவ யோகேஸ்வரி பிரதாபன் | உறுப்பினர் | 0772881848 |
| 04. கௌரவ கணபதிப்பிள்ளை துர்சோதனன் | உறுப்பினர் | 0775537696 |
| 05. கௌரவ வரதராசா டிசாந்தன் | உறுப்பினர் | 0766543582 |
| 06. கௌரவ வேல்முருகு கோகுலறாஜ் | உறுப்பினர் | 0775301865 |
| 07. கௌரவ அருட்செல்வி கனகராசா | உறுப்பினர் | 0774423703 |
| 08. கௌரவ தவராசா றமேஸ் | உறுப்பினர் | 0777722761 |
| 09. கௌரவ ஈஸ்வரன் டயாளினி | உறுப்பினர் | 0770599040 |
| 10. கௌரவ தயானந்தகுமார் சுகந்தி | உறுப்பினர் | 0776999101 |
| 11. கௌரவ தியோப்பிள்ளை பிரமிளா | உறுப்பினர் | 0773810260 |
| 12. கௌரவ வேலுப்பிள்ளை வசந்தரூபன் | உறுப்பினர் | 0772487618 |
| 13. கௌரவ நாகராசா நகுலேஸ்வரன் | உறுப்பினர் | 0770670456 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ **பச்சிலைப் பதிவுகள்** **பக்கங்கள்**


| | |
|---|---|
| 1) வாழ்த்துச் செய்திகள் | VI - XIII |
| 2) இதழாசிரியரின் உரை | XIV |
| 3) இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் அதனை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளும் | 01 - 07 |
| 4) வாசிப்பின் முக்கியத்துவம் | 08 - 09 |
| 5) கொரோனா வைரஸ் பரவலும் இலங்கைப் பொருளாதாரமும் | 10 - 12 |
| 6) Romance with Trees | 13 - 13 |
| 7) மாதவிலக்கெனும் மங்கையர் புனிதம் | 14 - 17 |
| 8) கல்கியின் பொன்னியின் செல்வனும் மணிரத்தினத்தின் பொன்னியின் செல்வனும் (விமர்சன விரிப்பு) | 17 - 18 |
| 9) இருத்தல்கள் | 19 - 19 |
| 10. சக்தியவள் | 20 - 20 |
| 11. அகராதியில் அகழ்ந்தவை | 21 - 21 |
| 12. சுகி சிவன் அவர்களின் வாழ்வுப் பார்வை | 22 - 25 |
| 13. ஒரு பிரதேசத்தில் மக்களின் இருப்பை நிலைநிறுத்த அப்பிரதேச வளங்களை அழிவில் இருந்து பாதுகாப்பதற்கான அவசியம் | 26 - 29 |
| 14. நாடும் நாகரிகமும் | 30 - 30 |
| 15. வாழ்வின் பாடம் - சிறுகதை | 31 - 36 |
| 16. ஞாபகப்படுத்தல் | 37 - 38 |
| 17. வீதி விபத்துக்களும் அண்மைக்கால போக்குகளும் | 39 - 41 |
| 18. இவ்வாழ்வு எப்ப வரும் | 42 - 43 |
| 19. சமய மறுமலர்ச்சி | 44 - 44 |
| 20. கற்றது தமிழ் பெற்றதும் தமிழே | 45 - 45 |
| 21. நிஜம் | 46 - 46 |
| 22. கலாச்சார பண்பாடு கலைந்து விட்டது இன்று | 47 - 47 |
| 23. மனித இன வரலாற்றில் போரும் கலைவெளிப்பாடுகளும் | 48 - 54 |
| 24. கலியுக வேதங்கள் | 55 - 55 |
| 25. குற்றங்களும் தண்டிக்கப்படும் தண்டனை சட்டக் கோவையின் பிரிவுகளும் | 56 - 58 |
| 26. இயற்கை தரும் நோயற்ற வாழ்வு | 59 - 64 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



### "பச்சிலை" சஞ்சிகை வெளியீடு காலத்தின் தேவை கருதிய கனதியான பணி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட புலோப்பளை பொதுநூலகம் தனது பணிகளின் தாக்கத்தை படைப்புக்களாக்கி அதற்கு நூலுருக் கொடுத்து ஏழாவது தடவையாக வெளியீடு செய்யும் 'பச்சிலை' சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விப்பண்பாட்டில் தனக்கென தனியிடம் பிடித்து நிற்கும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அமையப்பெற்ற புலோப்பளை பொதுநூலகம், இந்த மாவட்டத்தின் கல்வித்துறைக்கு ஆற்றிவரும் பணி கனதியானது! எமது மாவட்டத்தின் கனதிமிகு வரலாற்றில் எத்தனையோ இடர்களையும், துயர்களையும், இழப்புக்களையும், இடப்பெயர்வுகளையும் கடந்து விட்ட பின்னரும் தன்னால் மட்டுமே உருவாக்கம் பெறும் கல்விச் சமூகத்தின் வளர்ச்சியையும், உயர்ச்சியையும் மனதிற் கொண்டு செயற்பட்டு வருவதன் ஓர் அங்கமாக தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கும், வாசகர்களுக்கும் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்களைத் தொகுத்து 'பச்சிலை' என்னும் மண்மணம் கமழும் ஓர் சஞ்சிகையை வடிவமைத்து வருடா வருடம் வெளியீடு செய்வது வரவேற்கத்தக்கது.

அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்து, மாணவர்களுக்கும், வாசகர்களுக்கும் வாசிப்பின் மீதான நாட்டத்தை ஏற்படுத்தும் நோக்கோடு பல்வேறுபட்ட போட்டிகளை நடாத்தி அவர்களின் அறிவையும், ஆற்றலையும், ஆளுமையையும் வெளிக்கொணர்ந்து அவர்களையும் இந்த சமூகத்திற்கு தரமான கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும், படைப்பிலக்கியவாதிகளாகவும் அடையாளப்படுத்துவதை நோக்காகக் கொண்டு இச்சஞ்சிகை வெளியிடப்படுவது காலத்தின் பதிவேயாகும்.

எமது மாவட்டத்தின் படைப்பாளர்கள் இலைமறை காய்களாக தமக்குள் புதைந்திருக்கும் திறமைகளை இனங்காண்பதற்கு முடியாமலும், தமக்கு ஏற்ற களங்கள் எதுவுமற்ற சூழலிலும் வெறும் சாமான்ய மனிதர்களாகவே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள சூழலில், அத்தகையவர்களின் படைப்பாற்றல்களை வெளிக்கொணர்வதற்கான ஆரம்பக் கலைக்களமாகவும், அடுத்த கட்ட நகர்வுக்கான உந்துதலாகவுமே இச்சஞ்சிகை வெளியீட்டை என்னால் உணர முடிகின்றது.

காலத்தின் பதிவாய், கனதியான பதிப்பாய் பச்சிலைப்பள்ளி மண் பெற்றெடுத்த மைந்தர்களின் பல்துறைசார் ஆக்கங்களோடு தனது ஏழாவது குழந்தையை பிரசவிக்கும் 'பச்சிலை' சஞ்சிகையின் வெளியீடு சிறக்கவும், காலத்தின் தேவையுணர்ந்து செயலாற்றும் நூலகர்கள், பணியாளர்கள், பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் கௌரவ தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் உன்னதமான பணிக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்களை வழங்கிநிற்கும் அதே வேளை இச்சஞ்சிகை வருடாவருடம் தொடர் வெளியீடு காண இறையாசிகளையும் வேண்டிநிற்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பளைப் பிரதேசத்தில் பச்சிலைப்பள்ளி பிரதே சபையினால் வருடாவருடம் பச்சிலை மலரினை வெளியீடு செய்வதில் நான் புளகாங்கிதமடைகின்றேன். பச்சிலை மலர் வெளியீடானது பளைப் பிரதேசத்தினைச் சேர்ந்த எழுத்துத் துறையில் ஆர்வமுள்ளவர்களை மேலும் மேலும் மிளிச்சியடையச் செய்கின்றது.

இது தவிர பாடசாலை மாணவர்களின் எழுத்தாற்றலையும் ஊக்குவிக்கும் ஒரு கருவியாகவும் இம்மலர் விளங்குகின்றது. இது பச்சிலைப்பள்ளி வாழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். தனித்து ஏட்டுக்கல்வி என்கின்ற நிலைக்கு அப்பால் வருங்காலத்தில் புகழ் பூத்த கலைஞர்களாக மிளிர இந்நூல் உந்து சக்தியாக விளங்குகின்றது.

இத்தகைய சிறப்பியல் விடயங்களை உள்ளடக்கிய பச்சிலை - 07 எனும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் நான் பெருமைகொள்கின்றேன்.

“வாழ்க தமிழ்மொழி
வளர்க தமிழ் இனம்”

**சு. சுரேன்**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை பொது நூலகத்தால் வெளியிடப்படும் "பச்சிலை இதழ் - 07" என்னும் பிரதேச மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடியாக மட்டுமல்லாது சமகாலப் பிரச்சனைகளை அறிந்து இனங்காட்டி அப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் மருந்தாகவும், மனித குலத்தின் நிலைமையை உணர்ந்து அதனோடு கலந்து படைக்கப்படுவதாகவும் அமைதல் சாலச்சிறந்தது. இந்த வகையில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வாழும் இலக்கியவாதிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் படைப்பாளிகளின் ஆக்கங்களை தாங்கி பிரதேச மணங்கமழ்வதாக இம்மலர் வெளிவருவதனையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய சமூகத்தவர்கள் பொருளாதார நெருக்கடி, சமூகப்பிறழ்வுகள், போதைப்பொருள் பாவனை என பல்வேறு நெருக்கடிகள் மத்தியில் வாழுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இன்றைய இளம் தலைமுறையினர்களை பிறழ்வுகளில் இருந்து விடுபடச்செய்து கையடக்கத்தொலைபேசியில் மூழ்கியிருக்கும் வழக்கத்தை சிறிது சிறிதாக மாற்றி அவர்களின் ஆர்வ மட்டத்தை கலை, இலக்கியம், விளையாட்டு முதலான துறைகளின் பால் செலுத்த வேண்டிய செயற்பாடுகளை முன்னெடுப்பது காலத்தின் கட்டாயமாகவே அமைகின்றது. அதில் அனைவரும் கரம் கோர்த்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

"பச்சிலை இதழ் - 07" முதலான நூல் வெளியீடுகள் தொடர்ச்சியான கலைவிழாக்கள் இளையோர் மத்தியில் இம்மாற்றத்தை ஏற்படுத்த தூண்டுதலாக அமையும் என நம்புகின்றேன். பிரதேச சபையினர் இம்மலரை பிரதேசம் சார்ந்து தொடர்ச்சியாக வெளியிடுகின்ற பணி பாராட்டுக்குரியது. இம்மலரின் பயணம் தொடர வேண்டும். இம்மலராக்கத்தில் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சி.ச.கிருஷ்ணேந்திரன்,**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**பச்சிலைப்பள்ளி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



வாசிப்பு வெறும் பொழுது போக்கல்ல அது ஒரு தவம். ஒருமுறை வாசிப்பின் சுவையை உணர்ந்து விட்டால் அது நம்மை விடாது.

நூல்கள் என்றாலும் சரி, சஞ்சிகைகள் என்றாலும் சரி மனிதர்களின் உள்ளத்தைச் செழுமைப்படுத்த வல்லவை. அறிவைத் தூண்டக் கூடியவை. அடிக்காமல் ஏசாமல் அறிவைப் புகட்டும் நல் ஆசானாக விளங்குபவை. இத்தகு அறிவுப் பொக்கிசங்கள் காலத்துக்குக் காலம் புதிய நல்ல கருத்துக்களைத் தாங்கிக் காலத்தின் வெளிப்படுத்துகையாக அமைவதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

அந்த வகையிலே வருடந்தோறும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை பொது நூலகத்தினால் வெளியிடப்படும் பச்சிலை வாசகர்களின் வாசிப்புப் தேடலுக்கான விடயங்களைப் புதிது புதிதாகத் தாங்கி வெளிவருவதும் அதன் காத்திரப் தன்மையும் போற்றுதற்குரியது. உள்ளீட்டுப் பொருட்களின் விலையேற்றத்திலும் சவாலாக இப்பணியைத் தொடர்வது பாராட்டுதற்குரியது.

உலகம் வேகமாக உருண்டோடும் இக்காலத்தில் விரைவாகவும் குறுகிய நேரத்தில் வாசிக்கக் கூடியதுமான சஞ்சிகைகள் அதிகம் வெளிவருவதென்பது அவசரமும் அவசியமானதுமான ஒன்றாகக் காணப்படுகின்றது. வாசிப்பு மனிதனைப் பூரணத்துவமடைய வைப்பதனால் புத்திஜீவிகளனைவரும் ஒன்று சேர்ந்து புதிது புதிதாக சஞ்சிகைகளை உருவாக்குவது காலத்தின் தேவையாக உள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் முக்கியமான சேவைகளில் ஒன்றான நூலக சேவையில் இப் பொது நூலகம் முன்னெடுத்து வரும் சஞ்சிகை உருவாக்கப்பணி சிறக்க வாழ்த்துவதுடன், இதனைச் செயற்படுத்தும் தவிசாளர், சபை உறுப்பினர்கள், செயலாளர், நூலகர், நூலக உதவியாளர்கள் உத்தியோகத்தர்கள், நூலாக்கக் குழுவினர் அனைவருக்கும் மனம் நிறைந்த பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். வாசிப்புத் தூண்டலை சிறுவயதிலிருந்தே தூண்டக்கூடிய செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்து வாசகர்களின் தேவையை நிறைவு செய்து நல்லதொரு புதிய சமுதாயம் உருவாக உழைப்போமாக.

**ப. சத்தியராகவன்**
**உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழாக எமது சபையின் கீழ் இயங்கும் புலோப்பளை பொதுநூலகத்தினால் வெளியிடப்படுகின்ற "பச்சிலை" சஞ்சிகையின் இதழ் - 7 மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது இனத்தின் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களைத் தாங்கி நிற்கும் இவ் இதழ் பலரது ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டு புத்துயிர் பெற்று விளங்குகின்றது. அத்துடன் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களை கட்டுரை, கவிதை, கதையாக தொகுத்து மலராக வெளியிடுவது சிறப்பிற்குரியது.

இன்றைய தடைகளற்ற போதைவஸ்து, சிமாட்போன் பாவனைகள் காரணமாக வாசிப்பு பழக்கம் குறைவடைந்தும் செல்கின்றது. இந் நிலை மாற்றம் பெறுவதற்கு நல்ல புத்தகங்கள், சஞ்சிகைகள் வெளிவருவது காலத்தின் கட்டாயம் ஆகும். அந்த வகையில் பச்சிலை இதழ் - 7 சிறப்புற வெளிவர உழைத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதோடு இம் மலரானது ஒவ்வொரு வருடமும் தடைகள் இன்றி சிறப்புற வெளிவர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திருமதி. த.தர்சினி**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு தலைவரின் வாழ்த்துச்செய்தி



பச்சிலை என்ற வருடாந்த மலரின் ஏழாவது இதழை வெளியிடும் எமது முயற்சியில் மலர்க்குழுவினர் ஒருங்கிணைந்து செயற்பட்டு இம்முயற்சியை தளர்ச்சியின்றி ஆண்டுதோறும் வெளிவருவதற்கு ஆக்கபூர்வமாக முயற்சிக்கின்றது. பச்சிலைப்பள்ளியின் கிராம படைப்பாளிகளின் படைப்புக்கள் வெளிவரும் களமாக இம்மலர் இருப்பதும் பல ஆக்கங்களை தாங்கி வருவதும் மகிழ்ச்சியளிக்கின்றது.

இந்த வெற்றியின் பின்னால் பலரின் உழைப்பும் பண உதவியும் பங்களிக்கின்றது. கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் நிதியளிப்பும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்பும் ஒத்தாசையும் நினைவு கூறத்தக்கது. இம்மலர் வெளிவர பச்சிலை மலர்க்குழுவின் அனைத்து அங்கத்தவரும் வழங்கிய ஒத்துழைப்புகளும் அளப்பரியவை. மலர்க்குழு செயலாளர் அவர் தம் குழுவினர் வழங்கிய ஒத்துழைப்பு ஊக்கமளிப்பவை. இம்மலர் வெளிவர ஒன்றிணைந்த அனைவருக்கும் எனது நன்றிகள். பச்சிலை தொடர்ந்தும் வெளிவர இறை அருள் கிடைக்கட்டும். தொடர்ந்தும் இம்மலர் வெளிவரும் என்ற நம்பிக்கையுடன் இம்மலர் வெளிவருகின்றது.

**சின்னப்பு புவனராசா**
**தலைவர்,**
**பச்சிலை மலர்க்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு செயலாளரின் வாழ்த்துச்செய்தி



பச்சைப் பசேலென துளிர்விட்டு அழகிய பிரதேசமாக காட்சியளிக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் வளர்ந்து வரும் எழுத்தாளர்களின் எண்ணங்களின் ஆக்கங்களை ஒன்றாக்கி அழகுற வெளிவரும் பச்சிலை மலர் இந்த வருடமும் இதழ் 7 ஆக வெளிவருவது பெருமைக்குரிய விடயமாகும். பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை பொதுநூலகமானது தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினால் வழங்கப்படும் தேசிய மட்டத்தினாலான விருதினை பெற காரணமான மலர்.

இம் மலரின் வெற்றிக்காக உழைத்த பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், வாழ்த்துச் செய்தி வழங்கியவர்கள், பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், தமது எண்ணங்களை ஆக்கங்களாக்கி தந்த இலக்கிய கர்த்தாக்கள், வர்த்தக சமூகத்தினர், மலர்க்குழு உறுப்பினர்கள் மற்றும் நூலக வாசகர்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

பச்சிலை மலரானது இனிவரும் காலங்களிலும் சிறப்பாக மலரட்டும்.

**திருமதி.சி.பபிதா**
**செயலாளர்,**
**பச்சிலை மலர்க்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் உரை



நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு என்ற ஔவையாரின் கூற்றிற்கிணங்க நூல்கள் பலதை தேடி வாசித்து ஒரு சமுதாயம் அறிவு நிலையில் மேம்படும் போது அங்குள்ள தனிநபர்களின் வளர்ச்சியும் உயர்வடைகிறது. அந்தத் தனிமனித வளர்ச்சி மூலம் நாடு அதன் பேண்தகு அபிவிருத்தியை எய்துகிறது. சிறுவயது முதலே பிள்ளைகளிடத்து இந்த வாசிப்பு பழக்கமானது பெற்றோர்களுக்கு ஊடு கடத்தப்பட வேண்டும். அப்போதுதான் அறிவு ரீதியான தேடல் அதிகரிக்கும். எமது அறிவை விருத்தி செய்யக்கூடிய நிறுவனமாக நூலகம் திகழ்கின்றது. சமத்துவம், ஒழுக்கம், அறிவு விருத்தி என்று வாழ்விற்கு அவசியமான விடயங்களை போதித்து நிற்கிறது. அந்த வகையிலே பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் புலோப்பளை பொது நூலகத்தின் அதிசிரத்தையின் மூலம் பச்சிலை இதழ் 7 என்ற சஞ்சிகையை வெளியீடு செய்வதையிட்டு பெரும் மகிழ்வடைகிறேன்.

இளைய தலைமுறையினரின் கலையார்வத்தைத் தூண்டவும் எமது கலை பண்பாட்டு விழுமியங்களை அடுத்த சந்ததியினக்கு காவிச் செல்லவும் துறைசார் வளர்ச்சியைத் தூண்டி விடவும், எமது இருப்பின் உயிரோட்டத்தை தக்க வைப்பதற்குமாக இந்த பச்சிலை சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியீடு செய்து வருகிறோம். எமது சமூகத்தினர் தமக்கான உயர் கௌரவமாகவும், பொருளாதார நிலையை மேம்படுத்தி சமூக அந்தஸ்த்தை தக்கவைப்பதற்காக தற்கால இளையவர்களை அவர்களின் கலைசார்ந்த துறைகள் ரீதியாக வளப்படுத்த முனையாத துர்ப்பாக்கிய நிலை இங்கு இளையோடி வருகின்றது. அது புதிய படைப்பாளிகள் உருவாவதில் பின்தங்கிய நிலையை ஏற்படுத்தி விடுகின்றது. அந்த வகையிலே இச் சஞ்சிகைக்கான ஆக்கங்களைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டி இருந்தது.

கட்டுரைகள், கவிதைகள், சிந்தனைகள் மற்றும் பல்வேறு ஆக்கங்களென்று எழுத்தாளர்கள், படைப்பாளிகள் முதல் சமூக ஆர்வலர்கள், மாணவர்கள் வரை அத்தனை பேரின் வெளிப்பாடுகளின் தொகுப்பாகவும் பச்சிலை அமைகிறது. ஒரு வெளியீட்டை நாம் வருடா வருடம் அதன் தொடர்ச்சி நிலையை பேணி வெளியிட்டு வருகின்ற போது இடர்பாடுகள் பல ஏற்படுவதுண்டு. அந்த இடர்பாடுகள் எல்லாவற்றையும் தாண்டி இப்பச்சிலை இதழ் 07 வெளியீடு காண்பதில் மலர்க்குழுவினரது ஒத்துழைப்பு மிக முக்கியமானதொன்றாகும். இதழ் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ரீதியில் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு உரிய நேரத்தில் ஆக்கங்களைத் தந்துதவிய உங்கள் அத்தனை பேருக்கும், வாழ்த்துரைகளை வழங்கிய பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கிய நிறுவனங்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகளுக்கும் இதழினை வடிவமைப்புச் செய்து அச்சிட்டு உரிய நேரத்தில் வெளியீடு காண உதவிய பதிப்பகத்தினருக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இவ்விதழ் தனது தொடர்ச்சி நிலைவிட்டு நீங்காது வெளிவருவதற்கு அனைவரினதும் ஆர்வத்தினையும் ஒத்துழைப்பினையும் தொடர்ந்தும் எதிர்பார்த்து நிற்கின்றேன்.

**பளையூர் – செ.கஜானன்**
**இதழ் ஆசிரியர்**
**[நிறுவுனர் – அகரம் கவின்கலை கலாமன்றம்]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் அதனை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளும்



**அமரசிங்கம் கேதீஸ்வரன்**
**BA(Hons) MPhil (ECN) Dipin Planing**
**பிரதி திட்டமிடல் பணிப்பாளர்,**
**மாவட்ட செயலகம் கிளிநொச்சி.**

திறந்த சந்தை பொருளாதாரத்தை கடைப்பிடித்துவரும் இலங்கையின் பொருளாதாரத்தில் 2020 வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 16.3 சதவீதமாகவும் மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதம் நேர்கணியமாக 6.4 % சராசரி வளர்ச்சி கொண்டதுமான ஒரு சுறுசுறுப்பான பொருளாதாரமாக வளர்ச்சியடைந்து வந்தது.. இதன் வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் எமது நாட்டை ஐக்கிய நாடுகள் சபை நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் பட்டியலிலும் இணைத்துக் கொண்டது. எனினும் 2021ல் ஏற்பட்ட பொருளாதார அதிர்ச்சி காரணமாக இலங்கை பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதமானது எதிர்க்கணியமாக 1.5% மறை வளர்ச்சியை பதிவு செய்ததுடன் 2022 இது இன்னமும் மோசமடையும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வீழ்ச்சிப் போக்கின் விளைவாக வேலையின்மை வீதம் 15 சதவீதத்தை எட்டியுள்ளதுடன் வறுமை சுட்டியும் 2020 ல் 4.1% த்திலிருந்து 2022 ல் இது 8 சதவீதமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 21.9 மில்லியன் மக்களை கொண்ட இலங்கை பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தப்பட்ட இந்த மோசமான அதிர்ச்சி என்பது உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொவிட் பெரும் தொற்று காரணமாக மட்டுமன்றி பல்வேறு உள்நாட்டு காரணிகளாலும் நிர்ணயிக்கப்பட்டதாக காணப்படுகின்றது. அவ்வகையில் பொருளாதார அதிர்ச்சி (Economic shocks) நிர்ணயித்த பிரதான காரணிகளாக பின்வருவனவற்றை நாம் அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

(அ) உலகளாவிய நிலையில் 2021 ல் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக இலங்கை பொருளாதாரத்தில் நேரடியாக நான்கு பிரதான காரணிகள் தோற்றம் பெற்றன.

i. கொவிட் தொற்று காரணமாக மத்திய கிழக்காசிய நாடுகளில் பணிபுரிந்த 20 இலட்சம் பணிப்பெண்கள் அதாவது மொத்த சனத்தொகையில் 10 சதவீதமானவர்கள் வேலையிழந்து நாடு திரும்பியமை.

ii. பணிப்பெண்கள், தொழிலாளர்கள் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்தோர் மூலம் உள்நாட்டுக்கு அனுப்பப்பட்டு வந்த பெருமளவிலான வெளிநாட்டு அனுப்புதல்கள் முழுமையாக வீழ்ச்சியடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. இலங்கைக்கு வெளிநாட்டு வருவாயை உழைத்து தரும் 3வது துறையாக விருந்த சுற்றுலாத்துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டமை வருடாந்தம் 12 லட்சம் உல்லாசப் பிரயாணிகள் சுற்றுலாவிகளாக வந்து கொண்டதன் மூலம் 7.5 பில்லியனுக்கு மேற்பட்ட டொலரை உழைத்து வந்த துறையானது இப்போது வருடத்திற்கு 2 லட்சத்தை தானும் எட்டிப்பார்க்க முடியாது முடங்கிப் போயுள்ளது. இலங்கைக்கு அதிகளவில் பயணம் செய்யும் சுற்றுலா பயணிகள் இந்தியா, இங்கிலாந்து, ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்ரேலியா, உக்ரேன், கனடா, போலந்து ஆகிய நாடுகளிலிருந்தே வருகை தருகின்றனர். ரஷ்யா மற்றும் உக்ரேன் இடையில் ஏற்பட்ட பாரிய மோதல்கள் காரணமாக இந்த நாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வருவது பெருமளவு தடைப்பட்டதுடன் உலக கொவிட் நெருக்கடியாலும் இந்த தொழில்துறை பாரிய வீழ்ச்சியைப் பெற்றுக் கொண்டது.

iv. உள்ளூரிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களை ஏற்றுமதி செய்வதில் ஏற்பட்ட தடை காரணமாக உள்ளூருக்கான அன்னிய செலாவணி தடைப்பட்டுள்ளது. இலங்கையின் தைத்த ஆடைகள் 52 சதவீதமான வருமானமும் தேயிலை ஏற்றுமதி மூலம் 17 சதவீதமான வருமானமும் கிடைத்து வந்தது கொவிட் காரணமாக அதிகம் ஆள்கள் கூடும் உற்பத்தி சாலைகள் தமது செயல்பாட்டை செய்ய முடியாதுபோனதால் வெளிநாட்டு வளவருவாய் கிடைப்பனவு கடுமையாக பாதிக்கப்பட்டது இவ்வகையில் இலங்கையின் கொவிட் நெருக்கடியின் விளைவாக பாரிய டொலர் நெருக்கடியே பெறுபேறாக பெற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பாக ஒரு நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு என்பது 6 - 8Billion US ஆக இருபது சிறப்பானதாக கருதப்படும் இலங்கையின் தற்போதய கையிருப்பு 1.6 Billion US டொலராக 2022ன் ஆரம்பத்தில் காணப்பட்டது. தற்போது இது மேலும் குறைவடைந்து மாதாந்தம் நிலமைகள் மோசமடைந்து வருகிறது.

இதே நேரம் கொவிட் நிலமைக்கு புறம்பாக இலங்கை பொருளாதாரத்தில் உள்வாரியாக காணப்படும் பல காரணிகள் இன்றைய பொருளாதார நெருக்கடியை உருவாக்குவதில் பங்கு கொண்டுள்ளன குறிப்பாக

I. அதிகரித்த சுமை நிறைந்த இறக்குமதிகள்.

உண்மையில் இலங்கையின் வெளிநாட்டு வளவருவாயில் பெரும்பங்கை செலவளித்து எரிபொருள், எரிவாயு, இரசாயனஉரம் மற்றும் கிருமிநாசினிகள் மருந்து பொருள்கள், கோதுமைமா போன்ற முக்கிய பொருள்களை நாம் தொடர்ந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலையிலேயே உள்ளோம் மொத்த வருமானத்தில் 20 சதவீதமான வருமானம் எரிபொருள்களின் இறக்குமதிக்கே செலவு செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. வெளிநாட்டு படுகடன்களும் அவற்றுக்கான மீளச்செலுத்துதல்களும்

கடந்த 3 தசாப்தங்களாக உள்ளூரில் இடம்பெற்ற பாரிய மோதல்கள் காரணமாக போருக்கு செலவிடப்பட்ட ஆக்கமற்ற நிதிகள் வெளிநாட்டு படுகடன்கள் மூலமே பெறப்பட்டதும் உள்நாட்டு அபிவிருத்திக்கென பயன்பெறுபேறு அற்ற பல முதலீடுகளுக்கென பெற்றுக் கொள்ளப்பட்ட பல பில்லியன் ரூபாவுக்கான கடன்கள் என்பன எமது படுகடன் நெருக்கடியை தோற்றுவிக்க காரணங்களாயின இலங்கையின் மொத்தகடன் மதிப்பிடு என்பது 3500 கோடி US கடன் மீள செலுத்தப்பட வேண்டுமென்று குறிப்பிடுகின்றது. 2019ம் ஆண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 42.9 சதவீதமாக காணப்பட்ட படுகடன் 2021ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 101 சதவீதமாக மாறியிருக்கிறது. நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 21.9 சதவீதமான வருவாய் கடன் மீளளிப்புக்கே பயன்படுத்தப்படுகிறது. 2020ம் ஆண்டில் 4.4 BUS கடனுக்காக மீள் செலுத்துகையாக அமைந்திருந்ததுடன் சர்வதேச கடன் பெறும் தகுதியை நிர்ணயிக்கும் FITCH RATING ல் இலங்கையின் தரத்தை CCC தரத்திலிருந்து CC தரத்துக்கு குறைக்கப்பட்டதானது இலங்கையின் படுகடனின் மோசமான நிலையை வெளிக்காட்டுவதுடன் கடனால் இயங்கும் பொருளாதாரமாகவே அது இயங்கி வருகிறது.

III. அதிகரித்துள்ள உள்நாட்டு அரச சேவை

செலவீனங்கள் இலங்கையில் 15 பேருக்கு ஒரு அரச அலுவலர் வாழும் நாடாக இருப்பதுடன் ஆசியாவிலேயே அதிகூடிய அரச சேவையாளர்கள் கொண்ட நாடாக இலங்கை இருந்து வருகிறது இலங்கையின் மொத்த அரச வருமானத்தில் 75% அரச சேவையாளர்களுக்கான செலவீனங்களாக பயன்படுத்தப்படுகிறது. 16 லட்சத்துக்கு மேற்பட்ட அரச பணியாளர்களையும் 672196 ஓய்வூதியர்களையும் கொண்ட அரச பணியாளர் செலவீனமானது உள்நாட்டு வருமானத்தின் செயல்திறனற்ற முதலீடாகவே கருதப்படுகிறது. இந்த வகையில் இலங்கையை பாதித்த கொவிட் தொற்று வெளிநாட்டு காரணியாகவும் படுகடன் மற்றும் அரசசெலவீன அதிகரிப்பு காரணமாக உள்நாட்டு காரணிகளாலும் சிக்குண்டு ஒரு நலிவடைந்த நாடாக இது மாறியுள்ளது. இந்த நிலமை மேலும் மேலும் மோசமடைந்து இப்போது இந்திய பொருளாதாரத்தினால் போசிக்கப்படும் ஒரு துர்பாக்கிய நிலையை இலங்கை பெற்றுள்ளது.

இந்த வகையில் நெருக்கடிகளை சவால்களாக கொண்டு எமது பொருளாதாரத்தை செம்மைப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பத்தை நாம் அனைவரும் இணைந்து சிந்திக்க வேண்டிய ஒரு சூழலிலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதற்கென சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை சென்று சேருவதனூடாக அனைத்து இடர்களில் இருந்தும் விடுபட முடியுமென எண்ணமுடியாது அது ஒரு நிலைமாறு கால கட்டம் வரையிலுமான தற்காப்பை மட்டுமே பெற்றுத் தரக்கூடியதாகும். இலங்கையின் வெளிநாட்டு சொத்துகள் முழுமையாக கரைந்து எதின் நிலைக்கு செல்லும் வரை காத்திராது முன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் இன் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டிருக்குமாயின் உள்வாரியாக பல நல்ல மாற்றங்களை பெற்றிருக்க முடியும். எனினும் காலம் தாழ்த்தியேனும் இம் முடிவு நோக்கி இலங்கை சார்ந்திருப்பது வரவேற்கதக்கது இவ்வகையில் சர்வதேச நாணயநிதியம் (IMF) சில காத்திரமாக செயல்பாடுகளை முன்கொண்டு செல்லுமாறு கோரி நிற்கிறது அவையாவன.

I. அரச செலவீனங்களை குறைத்தலும் முழுமானியங்களாக வழங்கப்படும் நிவாரணங்களை நிறுத்துதல்.
II. உள்நாட்டு வருவாயை கூட்டுவதற்கான பொறிமுறைகளை அறிமுகம் செய்தல்.
III. ஊழல் மற்றும் வீன்விரயம் என்பவற்றை குறைத்தல்.
IV. சந்தை நிர்ணயிருக்கும் மிதக்கவிடப்பட்ட நாணய பெறுமதி நிர்ணயம்
V. இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தல்.
VI. வரவு செலவுப் பற்றாக்குறையை குறைத்தல்.
VII. பொது படுகடனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல்.
VIII. நட்டமடையும் அரச தொழில் முயற்சி நிறுவனங்கள் (Goverment Enter Prise) மீள் கட்டமைப்புக்கு கொண்டு வருதல் குறிப்பாக இலங்கையில் 55 முக்கிய நிறுவனங்கள் நட்டத்திலேயே இயங்கி வருகின்றன அதிலும் குறிப்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 244 மில்லியன் ரூபாயும், மின்சாரசபை 172 பில்லியன் ரூபாயும், மின் எயார் விமானசேவை 128 பில்லியன் ரூபாயும் நட்டத்தில் உள்ளன. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% நட்டமாகும். குறிப்பாக அரசசேவையில் 300 வரையான நிறுவனங்கள் செயல்படுவதுடன் இவற்றின் மீது 670 பில்லியன் ரூபாய்கள் வருடாந்தம் முதலீடு செய்யப்படுவதுடன் மேலும் 75 பில்லியன் ரூபாய்கள் பராமரிப்பு செலவுக்கும் வழங்கப்படுகின்றன.

IX. வெளிநாட்டுக் கடன்களை மீள அட்டவணைபடுத்துதலும் அதனூடாக உடனடியாக மீள செலுத்த வேண்டி கடன் மற்றும் வட்டி சுமைகளை குறைத்து திரட்டும் வெளிநாட்டு வருவாய்கள் கொண்டு வெளிநாட்டு கையிருப்பை சீர்செய்தல் இதில் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளே இலங்கையின் கடனில் பெரும் பங்கு வகிப்பதனால் இதனை சாத்தியப்படுத்துவது கடினமென்றே கருதப்படுகிறது அதாவது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களின் அடிப்படையில் இலங்கையின் நம்பகதன்மையை உயர்த்தும் INF ன் பொறுப்பு கூறல் ஊடாக கடனை மீள அட்டவணைப்படுத்தலை நிறைவேற்றுதல்.

அந்த வகையில் உண்மையில் தற்போதுள்ள அரச நெருக்கடி என்ற வகையில் பார்க்கும் போது அரச வருமானம் என்பது 2.3 ரில்லியனாக காணப்பட உண்மை வருமானம் என்பது 1.6 ரில்லியனாகவே காணப்படுகிறது. அரசின் செலவீன மதிப்பீடு 3.3 ரில்லியனாக இருந்த போதும் உண்மைச் செலவீனம் 4 ரில்லியன்களாக அமைந்துள்ளது. இவ்வகையில் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை என்பது 2.4 ரில்லியன்களாக காணப்படுகிறது. இது மொத்த உள்நாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியில் 13 சதவீதமானதாகும். இந்த வகையில் இலங்கையின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவது தொடர்பில் பின்வரும் செயல்பாடுகள் மீது நாம் தனித்தும் ஒருமித்தும் பாடுபட வேண்டியவர்களாக உள்ளோம்.

I. பயிர் உற்பத்தித் திட்டம்.

22 லட்சம் புதிய வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவதன் ஊடாக உணவில் பாதுகாப்பும் இறக்குமதிக்கு பதிலாக பயிர்களின் உற்பத்தியை உள்ளூரில் உருவாக்குவதற்குமான முயற்சிகளை முன் கொண்டு செல்லல் நெல் விளைவிக்கப்படும் காணிகளில் உச்சமட்ட பெறுபேற்றை உறுதி செய்ய உள்ளூரில் தயார் செய்யப்பட்ட இயற்கைஉரம் கிருமிநாசினிகள் பாவித்தல் ஊக்கப்படுத்தல்.

II. சிறிய கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்தல்.

குடும்ப மட்டத்திலும் சிறிய அளவிலுமான கைத்தொழில்களை வளர்ச்சியடையக்கூடிய சூழலை உறுதி செய்தலும் பொருள் விற்பனைக்கான சூழலையும் உருவாக்கி வழங்குதல்.

III. மீள் புதுப்பிக்கதக்க சக்தி வளங்களின் மீது முதலீட்டை அதிகரித்தல்.

இலங்கையில் தற்போது மீள்புதுப்பிக்கதக்க சக்தி வளங்களின் இருந்து 7% மீதான பங்கே சக்திபெறுதலில் பங்களித்து வருகிறது. இதனை20 சதவீதமாக உயர்துவதற்கேற்ப சூரிய படலைகள் இயற்கை வாயு உற்பத்தி, காற்றாலைகள் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்தல் போன்ற சாத்தியமான துறைகள் மீது முதலீட்டை அதிகரித்தல்.

IV. நீர் மின்சக்தியின் வீதத்தினை உயர்த்துதல்

இலங்கையின் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான மூலங்களில் ஒன்றாக நீர் மின்சார மூலத்தில் இன்னமும் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் அதாவது மின்சார தேவையில் 35 சதவீதத்தினை நீர் மூலல்களில் இருந்து பெறக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதனால் இதனை நோக்கி முதலீடுகள் இடப்படுவதுடன் வடகிழக்கு மாகாணங்களில் தனியார் குடும்ப மட்டத்தில் ஆரம்பிக்க தயாரான சூரிய படலைகள் மூலமான மின்சாரத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் மின்சார சபையின் மின் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். இந்த துறையில் முதலிடுவதற்காக தனியார் பலரால் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் இதனை நாட்டு நன்மை கருதி ஒழுங்குபடுத்திக் கொள்வதில் மின்சாரசபை போதிய ஆர்வம் செலுத்தவில்லை என்பதனை நான் நேரடியாக கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

V. ஏற்றுமதிகளை பன்முகப்படுத்தல்.

இலங்கையின் ஏற்றுமதி பொருள்களாக காணப்படும் தேயிலை மற்றும் தைத்த ஆடைகள் என்பவற்றுடன் கோப்பி, தெங்கு, கடலட்டை, தும்பு, வெங்காயம், பனைசார் பொருள்கள், தகவல் தொழில்நுட்பம் போன்ற சாத்தியப்பாடு அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பொருள்களை முறைப்படுத்தப்பட்ட சந்தைபடுத்தலுக்கூடாக ஏற்றுமதிகள் பன்முகப்படுத்திக் கொள்ள முடியும்.

VI. உற்பத்திகளை பல்வகைமைப்படுத்தல்.

இலங்கையின் உணவு தேவைக்காக பெருமளவில் இறக்குமதி செய்யப்படும் கோதுமை மற்றும் சிறுதானியங்கள் பருப்பு வகைகளுக்கு பதிலாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்படக்கூடிய பயறு, உழுந்து, கௌபி, மிளகாய், மரவள்ளி, சோளம் போன்ற பயிர்களின் உற்பத்தியை பெருக்கக்கூடிய பயிர் பல்வகைப்படுத்தல் திட்டமொன்றை செயல்படுத்தலாம்.

VII. சர்வதேச வர்த்தக சலுகையாக வளர்முக நாடுகளுக்கு வழங்கப்பட்டுவரும் GSP + சலுகை தற்போது வழங்கப்பட்டுள்ளது. இதன் கீழ் 27 நிபந்தனைகளின் கீழ் 66 சதவீத வரிச்சலுகையுடன் நாம் பொருள்களை ஏற்றுமதி செய்யக் கூடியதாக காணப்படுகிறது. இதனை அடுத்த 5 வருடங்களுக்கு தொடரக்கூடியதாக தேவைப்படும் நிபந்தனைகளை நாம் தொடர்ந்து நிறைவேற்றுவதன் மூலம் இவ்வாய்ப்பு நலன்களை தொடரக் கூடியதாக காணப்படும்.

VIII. ரூபாவை உறுதியாக்கல்

ரூபாவினை சர்வதேச நாணயங்களுக்கெதிராக மிதக்கவிடுவதனூடாக உடனடி பணவீக்க விளைவுகள் ஏற்பட்டாலும் நீண்டகாலத்தில் விலைத் தளம்பலற்ற விலைக் கொள்கையை கடைப்பிடிப்பதற்கான சூழல் உருவாக்கபடல் வேண்டும் தற்போது மிதக்கவிடப்பட்டமை காரணமாக ரூபாவின் பெறுமதி 29சதவீதம் வீழ்ச்சியடைந்ததுடன் பொருள்களின் விலைகளும் 1/3 பல்கினால் உயர்வடைந்துள்ளது எனினும் இதனை தொடர்ந்து அமுலாக்கும் போது ரூபா பெறுமதியை மேலும் உறுதி நிலைக்கு கொண்டு வந்து படிப்படியாக பொருள்களின் விலைகளை குறைத்துக் கொள்ள முடியும்.

IX. அரசின் கொள்கை சார்பாக காணப்படும் பல்வேறு பலவீனங்களையும் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தல்.

அரசு தொழில் முயற்சிகள் பலவும் இலங்கையின் பிரதான சேவைகள் வழங்கும் கேள்வி மிக்க துறைகளாக காணப்பட்ட போதும் எவ்விதத்திலும் திட்டமிடப்படாத அரசியல் ரீதியான ஆளணி சேர்ப்பும், நிர்வாக மாற்றமும் காரணமாக அத்துறைகள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகிறது. மின்சாரம், நீர்வழங்கல், புகையிரத போக்குவரத்து, தரைபோக்குவரத்து, பெற்றோலியம் போன்ற அதிகமுக்கிய சேவைத்துறைகளில் ஏற்பட்டுவரும் நட்டங்களின் உண்மை காரணங்கள் கண்டறியப்பட்டு நாட்டு நன்மை அடிப்படையில் மீள பரிசீலிக்கப்படல் வேண்டும். அரசதுறை ஆட்சேர்பிலும் காணப்படும் பல்வேறு குறைபாடுகளும் காணப்படல் வேண்டும் புதிய ஆட்சேர்ப்புக்கு பதிலாக உள்ளக ஆட்சேர்ப்பு நடைமுறை மூலம் பொருத்தமான வெற்றிடங்களுக்கு ஆட்களை இணைத்து உச்சமட்ட பயன்பாட்டை ஏற்படுத்துதல், மிகை ஆளணியாக உள்ளவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2021 நிகழ்வுகளின் பதிவுகள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 2022 நிகழ்வுகளின் பதிவுகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளீர்த்து ஆளணியை முறைப்படுத்தல், தகவல் தொழில்நுட்பத்தில் திறனுடையவர்கள் இனம்கண்டு தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி வாய்ப்பை பெற்றுக்கொடுத்து வெளிநாட்டு வருமானம் உழைக்க வாய்ப்பை பெறல் குறிப்பாக இந்தியாக தகவல் தொழில்நுட்ப ஆளணி ஏற்றுமதி மூலம் வருடாந்தம் 200m உழைக்கும் போது இலங்கை 1.2m மட்டுமே இத்துறையிலிருந்து வருடாந்தம் பெற்றுக் கொள்கிறது.

X. வரிக்கொள்கைகளை மீள்பரிசீலனைக் குட்படுத்துதல்.

இலங்கையின் வரிக் கொள்கைகளில் நேரடிவரிகள் மூலம் பெறப்படும் பங்கு மிக குறைவானதாகவே காணப்படுவதுடன் மறைமுக வரிகள் மூலம் வரிப்படுகையானது ஏழைகள் மீதே கொண்டு செல்லப்படுவதற்கு பதிலாக வருமானம் கூடியவர்களின் வருமானத்திலிருந்து வரிகளை திரட்டும் நேர்வரிமுறைகள் அமுலாக்கப்படல் வேண்டும்.

XI. ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பில் பல்வேறு மட்டங்களிலும் காணப்படும் ஏய்ப்பு நடைமுறைகளை களையும் வண்ணம் பாரிய நடவடிக்கைகள் எடுக்கபடல் வேண்டும். கேள்வி நடைமுறைசார் கொள்ளல் நடைமுறைகளிலுள்ள பல குறைபாடுகளையும் மீள்பரிசீலனைக்குட்படுத்துதல் வேண்டும்.

XII. சுற்றுலாத்துறை என்பது மிக குறைந்த செலவில் கட்டியெழுப்பக்கூடிய தேறிய வருவாய் அதிகம் கொண்ட தொழில்துறை என்பதனால் உள்நாட்டில் இன்னமும் கவர்ச்சிமிக்க சுற்றுலா பகுதிகளை அடையாளப்படுத்தி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். வெளிநாட்டு சுற்றுலாவிகளின் வருகைக்காக மட்டுமன்றி உள்ளூர் சுற்றலாமையங்கள் இத்துறைசார்ந்து அபிவிருத்தி செய்வதனூடாக உள்நாட்டு சுற்றுலா தொழில் முனைவு ஒன்றை மேலும் பரவல்படுத்தி முன்கொண்டு செல்லப்படலாம்.

இந்த வகையில் இலங்கையின் பொருளாதார அதிர்ச்சி என்பது உள்நாட்டு கொள்கைகளின் பலவீனம் மற்றும் வெளிநாட்டு சூழல் ஆகியவற்றின் ஊடாக ஏற்படுத்தப்பட்டு நாட்டுக்கு மோசமான விளைவுகள் உண்டு பண்ணியுள்ள நிலையில் இந்த அச்சுறுத்தலை புதிய உள்ளூர் பொருளாதார தொழில் முனைவுக்கும் பழக்க மாற்றங்களுக்கும் கொள்கை உறுதிப்பாட்டுக்குமான வாய்பான மாற்றங்களைக் கொண்டுவரும் சந்தர்பமாக பயன்படுத்திக் கொள்ள முடியும். இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்த தேசிய நலன் என்ற வகையில் எல்லோரும் தம் பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ள முன்வரல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பின் முக்கியத்துவம்



முருகவேல் துஸ்யந்தன்
BA (Hons)

வாசிப்பு என்பது ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையான தொடராகும். அதாவது கருவுற்ற தாய் நல்ல நூல்களை வாசிப்பதன் மூலம் கருவிலுள்ள பிள்ளையின் மூளையானது சிறந்த வளர்ச்சியடையும் எனப் பல அறிஞர்கள் கூறுகிறார்கள். வாசிப்பு பல முக்கியமான திறன்களைக் கொண்ட செயன்முறையாகும். அதாவது சிந்தித்தல், கற்பனை செய்தல், ஆராய்தல், காரணம் கண்டறிதல், போன்ற பல திறன்களை வளர்க்கக்கூடிய தன்மை வாய்ந்தது. அது மட்டுமன்றி வாசிப்பு இல்லையென்றால் கண் இருந்தும் குருடனைப் போன்ற நிலைமையாகும். வாசிப்பு என்பது வெறும் புத்தகங்களை மட்டும் கற்பதல்ல. புத்தகம் மனிதனின் சிறந்த நண்பன். "கண்டது கற்க பண்டிதனாவான்" எனும் முதுமொழி இதனை பறைசாற்றுகிறது. வாசிப்பு என்பது ஓய்வுக்காக வாசித்தல், தகவல்களைப் பெறுவதற்காக வாசித்தல், அறிவைப் பெறுவதற்காக வாசித்தல் எனப் பல காரணங்களுக்காக ஒருவர் வாசிக்கலாம். ஆனால் பொதுவாகவே வாசிப்பு என்பது மகிழ்ச்சிகரமான சுவாரஸ்யமான ஒரு விடயமாகும். இவ் சுவாரஸ்யமான வாசிப்பில் ஒரு பக்கம் மகிழ்ச்சியும் இன்னொரு பக்கம் அறிவு வளர்ச்சியும் ஏற்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் வாசிப்பை புத்தகம் மற்றும் பத்திரிகை மூலமே கட்டியெழுப்பக் கூடியதாக இருந்தது. ஆனால் இன்று இலத்திரனியல் செய்திகள், புலமை சார் இலத்திரனியல் ஆய்வறிக்கைகள், கட்டுரைகள், போன்றனவைகளை வாசிப்பதற்கும் மக்கள் பழகிக் கொண்டுள்ளார்கள். ஒரு சிறந்த வாசகனால் மட்டுமே சிறந்த எழுத்தாளனாக முடியும். ஒரு சிறந்த எழுத்தாளனால் மட்டுமே சிறந்த பேச்சாளனாக முடியும். ஆகவே மனித தொடர்பாடலின் மையப்புள்ளியே வாசிப்பாகும். எவன் ஒருவன் வாசிக்காதவனாக இருக்கிறானோ அவன் மனதில், அறிவில், அறியாமை இருள் படிந்திருக்கும். வாசிப்பு என்பது ஒரு மனிதனின் குழப்பமான மனநிலையை அகற்றி தன்னிலைப்படுத்த உதவுகின்றது. இதேபோன்று புதிய விடயங்கள் மனதில் இடம் பிடித்துக் கொள்வதற்குரிய சந்தர்ப்பத்தை வாசிப்பு ஏற்படுத்துகின்றது.

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு" என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய நாம் எந்தளவிற்கு அறிவு வாய்ந்த நூல்களை ஆழமாகக் கற்கின்றோமோ அந்தளவிற்கு எம்மால் முழுமையான அறிவை பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் வாசிப்பானது வெறுமனே கல்வியறிவை மட்டும் வழங்காமல் எம்மைச் சுற்றியுள்ள சமூகத்தின் போக்குகள் பற்றியும் நாம் வாழ்கின்ற உலகம் பற்றியும் பொதுவான அறிவை வழங்குகின்றது. அதுமட்டுமன்றி நூல்களானவை உலகின் அனைத்து மூலை முடுக்குகளிற்கும் எம்மை அழைத்துச் செல்கின்றன. நாம் அறிந்திராத பல்வகைப்பட்ட மனிதர்களது உத்வேகம் தரக்கூடிய வார்த்தைகளை எமக்கு அறிமுகப்படுத்துகின்றது. வாசிப்பின் ஊடாகவே ஒருவன் பூரண மனிதனாகின்றான். வாசிப்பின் மூலமே அறிவுடைய சமூகத்தை உருவாக்குவதுடன் அறிவுசார் உலகத்தைப் புரிந்து அதற்கு ஏற்றவகையில் வாழ வழியமைக்கிறது. அதாவது தகவல் திறனுக்கும் கல்விசார் திறனுக்கும் மிகமிக முக்கியமானதாக வாசிப்பு ஒன்றே திகழ்கின்றது. வாசிப்பானது தெரியாத விடயங்களை தெரிந்த, அறிந்த ஒருவனாக மனிதனை மாற்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இளம் தலைமுறையிடம் வாசிப்புப் பழக்கமானது வெகுவாக குறைந்து விட்டது. அவர்களிடம் மட்டுமல்ல எல்லோரிடமும் குறைந்து விட்டது. இதற்கு அடிப்படையே இன்றைய சமுதாயமானது இணையத்திற்கு அடிமையான ஒரு சமுதாயமாகக் காணப்படுவதேயாகும். இதனால் இளையவர்களிடத்தே வாசிப்புப் பழக்கம் அற்றுப் போகின்றது. உலகமயமாக்கலின் விளைவுகளும் இணையத்தில் காணப்படும் அதிகளவான பொழுதுபோக்கு அம்சங்களும் அவர்களின் அறிவினை மழுங்கடிக்கின்றன. அதாவது நூல்களைக் கையில் எடுத்தாலே தூக்கம், சோம்பல், ஆர்வமின்மை போன்ற எதிர்மறை எண்ணங்களே அவர்களிடம் தோன்றுகின்றது. ஆகவே சிறுவயது முதலே வாசிப்புப் பழக்கத்தை பழக்கப்படுத்திக் கொள்வது அதிக நன்மையை உண்டாக்கும். அதாவது சிறுவர்களாக இருக்கும் போதே பிற பொழுதுபோக்கு சாதனங்களை வழங்குவதை நிறுத்தி சிறுவர்களுக்குரிய புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கி அவர்களை வாசிப்பில் ஈடுபடுத்த வேண்டும்.

ஒரு மனிதனிடையே வாசிப்புப் பழக்கம் காணப்படுவதனால் அவரிடையே சிறந்த பண்புகள் வளர்வதுடன் அறிவில் சிறந்தவராகவும் திகழ்வார். பொதுவாகவே வாசிப்பின் மூலம் ஒருவர் அடையும் பயன்கள் எனும் போது நூல் வாசிப்பானது மனிதனுக்கு அறத்திணைப் புகட்டும், வாசிப்பானது ஞாபக சக்தியை அதிகரிக்கும். ஒன்றைப் பார்ப்பதன் மூலமும் கேட்பதன் மூலமும் ஒரு விடயத்தினை அறிவதை விட வாசிப்பதன் மூலம் அறியும் விடயமானது நீண்ட காலத்திற்கு நினைவிருக்கும். திறன்கள் அதிகரிக்கும், உலக விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. அதாவது வாசிப்பே ஒருவனை அறிவார்ந்தவனாகக் கட்டமைகின்றது. ஏனெனில் வாசிப்பே அறிவை வழங்கும் அமுத சுரபியாகும். ஒரு கல்லை உளி செதுக்கி செதுக்கி அழகிய சிற்பமாய் மாற்றுவது போல புத்தகங்கள் வாசிக்க வாசிக்க அவை நம்மை பண்புள்ள மனிதர்களாக்குகின்றது. ஆகவே வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்ற மனநிலையை உருவாக்கிக் கொள்வதுடன் வாசிப்பை வாழ்வோடு தொடர்புடைய அம்சமாக பார்க்க வேண்டும். புத்தகங்களை வாசிப்பதன் மூலம் எமது வாழ்க்கையானது வெற்றிப் பக்கத்தை நோக்கி பயணிக்கும் என்பதனை நினைவு கொள்ள வேண்டும்.

"நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு" என்ற ஔவையாரின் வாக்கிற்கமைய ஒரு மனிதன் தன் ஆயுட்காலத்தில் எந்தளவிற்கு நல்ல அறிவாய்ந்த நூல்களைக் கற்றுத் தேறுகின்றானோ அந்தளவிற்கு அவனது அறிவாற்றல் அதிகரிக்கின்றது. வாசிப்பானது வெறுமனே கல்வியறிவை மட்டும் வழங்காமல் எம்மைச் சுற்றியுள்ள சமூகத்தின் போக்குகள் பற்றியும் நாம் வாழும் உலகம் பற்றிய பொதுவான அறிவையும் வழங்கின்றது. அந்தவகையில் வாழ்க்கையென்பது இடர்கள் நிறைந்தது. அதை நோக்கிய பாதை தெளிவாகவுள்ள போதுதான் வாழ்க்கை சிறப்பாகும். பிரகாசமான வாழ்க்கையை ஏற்படுத்துவதில் நூல்கள் மீதான வாசிப்பு பெரும் பங்காற்றி வருகின்றது. ஆகவே குழந்தைகளுக்கு வாசிப்புப் பழக்கத்தை தூண்டுவதற்கு தடையாக அமையும் காரணிகள் எதுவென்று இனங்கண்டு இல்லாமல் செய்வது பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பாகும். எனவே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு எதிர்காலத் தலைமுறையினருக்கு நாமும் நன்மை செய்வோம். வாசிப்புக் கலாசாரம் கொண்ட ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா வைரஸ் பரவலும் இலங்கைப் பொருளாதாரமும்



துஸ்யந்தன் கிருஸ்ணலியா
BA (Hons)

மனிதனானவன் ஒவ்வொருநாளும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வாழ்கின்ற ஒரு சமூகப்பிராணி ஆவான். அவன் தன்னுடைய வாழ்வில் எதிர்நோக்கும் சவால்கள் மூலம் சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளில் பல்வேறு சாதக மற்றும் பாதக நிலைகளை அடைந்து கொள்கிறான். இதன்படி இன்றைய காலகட்டத்தில் உலகத்தையே சீர்குலைத்து வருகின்ற Covid - 19 என்பது ஒரு வகை வைரஸ் காரணமாக ஏற்படுகின்ற தொற்று நோயாகும். இவ்வைரஸ் ஆனது பெரும்பாலும் மக்களிடையே நெருக்கமான தொடர்பின் போதும் இருமல், தும்மல் மற்றும் பேசும் போதும் உருவாகின்ற சிறிய நீர்த்துளியாக பரவுகின்றது. அதாவது இவ் நீர்த்துளிகள் வழக்கமாக நீண்டதூரம் காற்று வழியாக பயணிப்பதை விட தரையில் அல்லது மேற்பரப்பில் விழுகின்றது. இதனால் மேற்பரப்பை தொட்டுவிட்டு பின்னர் தங்கள் முகத்தைத் தொடுவதன் மூலம் மக்களுக்கு தொற்று ஏற்படுகின்றது. இவ்வைரஸ் தொற்றானது மக்களுக்கு ஏற்பட்ட முதல் மூன்று நாட்களில் தொற்றுப் பரவல் வீரியமாக இருப்பதுடன் இந்நோய்க்கான அறிகுறியாக காய்ச்சல், இருமல், மூச்சுத்திணறல் மற்றும் வாசணை உணர்வு இழப்பு ஆகியவை ஏற்படும். அத்துடன் இந்நோய் தீவிரமடையும் போது நிமோனியா மற்றும் கடுமையான மூச்சுத்திணறல் ஆகியவையும் ஏற்படும்.

அந்த அடிப்படையில் சீனாவின் ஊபேய் மாகாணத்தின் தலைநகரான வுஹான் நகரில் 2019 ம் ஆண்டின் இறுதியில் Covid - 19 தொற்று கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் இத்தொற்றின் பரவுதல் வீதம் 2020 ஜனவரியில் தீவிரமாகி 2020 பெப்ரவரியில் சீனாவின் அனைத்து மாகாணங்கள் உட்பட உலகளாவிய ரீதியில் தடம் பதிக்கத் தொடங்கி இலங்கையில் மார்ச் 03 ம் திகதி நோய்த்தொற்று கண்டுபிடிக்கப்பட்டது. இத்தொற்று நோயானது உலகளாவிய ரீதியில் சமூக மற்றும் பொருளாதார சீரழிவுகளை ஏற்படுத்தி ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் மந்த நிலைக்குக் கொண்டு சென்று கொண்டிருக்கிறது. அதாவது இதற்கு முன்னரும் இவ்வாறான தொற்று நோய்த் தாக்கங்கள் இடம்பெற்றுள்ள போதிலும் குறுகிய காலங்களுக்குப் பின் வழமையான நிலை காணப்பட்டதுடன் இவற்றின் தாக்கம் சில நாடுகளில் மட்டுமே காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் COVID - 19 இன் தாக்கமானது 2008 - 2009 இல் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைப் போன்று காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சமூக, பொருளாதார, விளையாட்டு, மத, அரசியல் மற்றும் கலை கலாசார நிகழ்வுகளை ஒத்திவைக்க அல்லது இரத்து செய்ய வழிவகுத்ததுடன் அச்சம் காரணமாக முகக்கவசம் கிருமிநாசினி உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் நுகர்வு அதிகரித்து விநியோகப் பற்றாக்குறை ஏற்பட்டதுடன் ஊரடங்கு காரணமாக மாசுபடுத்திகள் மற்றும் பசுமைச்சூழல் வாயுக்கள் ஆகியவற்றின் வெளிப்பாடு குறைந்ததுடன் 177 நாடுகளில் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் போன்றன மூடப்பட்டு உலக மாணவர் தொகையில் சுமார் 98.6 விழுக்காட்டினரைப் பாதித்துள்ளது.

அந்தவகையில் Covid - 19 இன் தாக்கமானது இலங்கையைப் பொறுத்தவரை இறுக்கமான கட்டுப்பாடுகள் காரணமாக குறைந்த அளவாகக் காணப்பட்டாலும் கூட பொருளாதார ரீதியான தாக்கமானது மிகவும் மோசமாக உள்ளது. உலக வங்கியின் கணிப்பின் படி இவ் கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக உலகப் பொருளாதாரமே இன்னும் மோசமான நிலைக்குச் செல்லும் எனவும் இன்றைய நிலையில் இருந்து மீள்வதற்கு பல வருடங்கள் கூட ஆகலாம் என கணிப்பிட்டிருக்கின்றது. அந்த வகையில் இக்கணிப்பீடானது ஏனைய நாடுகளுக்கு எவ்வளவு பொருத்தமானதாக இருக்கும் என்பதை விட குறைவிருத்தி நாடான இலங்கைக்கு இது ஒரு பாரிய பின்னடைவை ஏற்படுத்தும். அதாவது 1977 ம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்திய பின்னர் இலங்கை முழுமையாக பிற நாடுகளில் தங்கி இருக்கும் நிலையே காணப்படுகிறது. இந்த சூழ்நிலையில் Covid - 19 தாக்கத்தினால் தற்போதைய காலகட்டத்தில் இலங்கையின் இறக்குமதியில் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருந்த அனைத்து நாடுகளும் மிக மோசமான நிலையில் காணப்படுவதனால் இலங்கைக்கு இறக்குமதி தடைப்பட்டது மாத்திரமல்லாமல் தேயிலை, தெங்கு, இறப்பர் மற்றும் ஆடை உள்ளிட்ட ஏற்றுமதிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இதனால் இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றது. மார்ச் 15 ம் திகதி முழுமையாக முடக்கப்பட்ட கைத்தொழில் துறையானது ஜுன் 15 ம் திகதிக்கு பின்னரே வழமைக்கு மாறியதுடன் கொரோனா தொடர்பான அச்சம் இன்னும் தொடர்ந்த வண்ணமே காணப்படுகின்றது. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டமானது விவசாயத்துறை, சேவைத்துறை மற்றும் கைத்தொழில் என சகல துறை ரீதியாகவும் முடக்கத்தை ஏற்படுத்தியதால் இலங்கையின் பொருளாதாரத் துறையானது பெருமளவில் கேள்விக்குறியாகி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக நிலையங்களும் அலுவலங்களும் மூடப்பட்டு குடிமக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளிவர முடியாத நிலை உருவாகியுள்ளதுடன் ஒவ்வொரு நாளும் விடியும் போதும் வாழ்க்கை முறை மாற்றத்துக்குள்ளாகி வருகின்றது. முன்னெப்போதும் இல்லாத அளவில் சாதாரண பொருளாதார நடவடிக்கைகள் கூட சீர்குலைந்துள்ளன. இத்தொற்று நோயைத் தொடர்ந்து அமெரிக்கா டொலருக்கான இலங்கை ரூபாயின் பெறுமதி வரலாற்றில் முதன்முறையாக 200 ரூபாயாக உயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வணிக உத்தரவாதம் வரி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்கும் உலகளாவிய நிறுவனங்களில் ஒன்றாகிய PWC நிறுவனமானது இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி இரண்டு வீதத்திற்கும் குறைவாக இருக்கின்றது. அத்துடன் இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிநிலையுடன் வைத்திருக்கும் அந்நியச் செலாவணி கேள்விக்குறியாகும் வகையில் 2020 ம் ஆண்டின் முதல் காலாண்டில் முந்தைய ஆண்டுடன் ஒப்பீடும் போது சுற்றுலாப்பயணிகளின் வருகை 30 வீதத்திற்கும் குறைந்துள்ளது. இதற்கு அடிப்படை உலகளாவிய பயணங்களுக்கு விதிக்கப்பட்ட தடையே பிரதான காரணம். இத்தடை நீங்கிய தற்போதைய காலகட்டத்திலும் பழைய நிலைக்கு மீளமுடியாத வகையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை காணப்படுகின்றமை. இலங்கையின் பொருளாதாரத்தை சீர்குலைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி இலங்கையைப் பொறுத்தவரையில் தேசிய ஏற்றுமதியில் அதிகவருவாயைப் பெற்றுத்தரும் ஆடை உற்பத்தியானது தடைப்பட்டிருந்தது. அத்துடன் ஊரடங்கு உத்தரவு காரணமாக பொறியியல் துறையும் பாதிப்படைந்தது. அது மட்டுமன்றி எந்தவொரு பொருளாதாரத்திற்கும் முதுகெலும்பாக காணப்படும் வங்கித்துறையும் பெரிதும் பாதிப்படைந்தது. அத்துடன் சில்லறை வியாபாரம், உற்பத்தி, நுகர்வு மற்றும் விற்பனையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய தாக்கம் காரணமாக வேலையின்மை அதிகரித்ததுடன் சராசரி வருமானம் பெறும் ஊழியர்களின் வருமானம் குறைவடைந்ததுடன் வாழ்க்கைத்தரம் பாதிப்பு ஏற்பட்டு வறுமை அதிகரிப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் உலகளவில் வியாபித்து இலங்கைக்குள் தடம்பதித்து இலங்கையை பல்வகையில் பொருளாதார பின்னடைவையும் பல இன்னல்களையும் ஏற்படுத்தி கொரோனா வைரஸ் பரவலினை கட்டுப்படுத்தி நாட்டை மீள கட்டியெழுப்புவதற்கு அரசினால் பரிந்துரைக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கையை பின்பற்ற வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். அத்துடன் திடீரென ஏற்படுகின்ற இத்தகைய அனர்த்தங்களிலிருந்து மீள்வதற்கு ஒரு தொழிலில் மாத்திரமின்றி பல தொழில்களை செய்யக்கூடிய வகையில் நம்மை தயார்ப்படுத்துவதுடன் ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளில் வீட்டுத்தோட்டம் மற்றும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதுடன் அன்றாட செயற்பாடுகளை திட்டமிடலுடன் செயற்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Romance with Trees

**B.Balagini**

I am a butterfly
Yes I am a two - legged butterfly
Trees are heaven to me
Leaves are my wings
Flowers gives me kisses

oh...that rain
Trees give rain
wow...this soft breeze
Trees give pure wind
Trees are my lovers
Yes They are my lovers

A re All trees inanimate?
Never Trees are not inanimate
but They are inanimite
Yes humans are inanimate
They don't know how to smile
They don't know how to talk
They don't know how to live
but my trees know how to laugh
They know how to talk

shhh....stop talk
Listen that sound
The leaves sing together
Flowers are calling me
Falling leaves play the veena
It's my love
Trees are my love.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவிலக்கெனும் மங்கையர் புனிதம்



பா. பாலாஜினி
முல்லையடி,
பளை.

மாதவிடாய் என்றும் மாதவிலக்கென்றும் அழைக்கப்படுகின்ற பெண் பாலினத்தவருக்கு மட்டுமே ஏற்படக்கூடிய அல்லது நிகழக்கூடிய ஓர் உடலியல் மாற்றமானது எப்பொழுதும், எல்லாக் காலங்களிலும் முக்கிய பேசு பொருளாகவே இருந்து வருவதனை காணமுடிகின்றது. அந்தளவிற்கு அது முக்கியத்துவமானதாக இருக்கின்றதா? அல்லது அதனைப்பற்றிய தெளிவு இன்னும் நமக்கு ஏற்படாமல் இருக்கின்றதா? இதில் எது உண்மை.

மாதமொருமுறை சுழற்சி முறையில் ஏற்படக்கூடிய இவ் உடலியல் மாற்றமானது உடல் மற்றும் உளரீதியாக பெண்களுக்கு ஒரு சில மாற்றங்களினை ஏற்படுத்தக்கூடியது தான். இருப்பினும் அச்சாதாரண நிகழ்வினை எதற்காக நாம் எல்லோரும் வித்தியாசமாகவும், அசூசை உணர்வு கொண்டதாகவும் நோக்குகின்றோம். அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் உள்ள மக்கள் இதனை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. அதாவது இம் மாதவிலக்கிற்குரிய நாட்களையும் அவர்கள் மாதத்தினுடைய மற்றைய நாட்களைப் போலவே ஏற்றுக்கொள்கின்றார்கள். ஆனால் எமது சமுதாயங்களில் வாழ்கின்ற பெண்கள் தமக்கு ஏற்படுகின்ற மாதவிலக்கினை தாமே வெறுப்புடனும், வெட்கத்துடனும் ஏற்றுக் கொள்கின்றார்கள். அதனை சக பெண் தோழிக்கு சொல்லவே வெட்கப்படுகின்றார்கள்.

என்னுடைய பல்கலைக்கழக கல்விக் காலங்களில் எமக்கு கற்பித்த பெண் விரிவுரையாளர் ஒருவர் அடிக்கடி கூறும் வார்த்தை இது. " எப்போது உங்களுக்கு ஏற்படும் மாதவிலக்கினை அல்லது மாதவிலக்கு நாட்களில் உங்களின் சக ஆண்நண்பரிடம் இன்று எனக்கு மாதவிலக்கு (ஏதேனும் காரணம் கருதி) என தைரியமாக சொல்கின்றீர்களோ அன்று தான் நீங்கள் பரிபூரணமான பெண்ணியத்தினை அடைந்து கொள்வீர்கள்" இது நம்மில் எத்தனை பேருக்கு முடியும். சாதாரணமாக நீ நேற்று ஏன் வகுப்பிற்கு வரவில்லை என கேட்கும் ஆசிரியையிடம் கூட மாதவிலக்கு என சொல்ல கூச்சப்பட்டு வேறு காரணங்களை கூறும் எம்மால் இதனை எப்படி சாத்தியமாக்கி கொள்ள முடியும்.

எதனால் இந்நிலைமை நமக்குள் பழக்கப்படுத்தப்பட்டிருக்கின்றது, என்றேனும் நீங்கள் இதனை சிந்துத்து உள்ளீர்களா?

நமது பாட்டி, பூட்டி காலத்தில் மாதவிலக்கு ஏற்படும் பெண்களை மூன்று நாட்கள் வீட்டை விட்டு தள்ளி வைத்து விடுவார்கள். இதனை "வீட்டிற்கு தூரம்" என வயது வந்தவர்கள் கூற கேள்விப்பட்டிருக்கின்றோம். இந்த மூன்று நாட்களிலும் அவர்களுக்கு வீட்டு வேலைகளில் ஈடுபடவோ, கிணறு முதலியவற்றில் நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளவோ, பாரமான செயற்பாடுகளில் ஈடுபடவோ அனுமதி வழங்கப்படுவதில்லை. மூன்று நாட்கள் முடிந்ததும் மஞ்சள் தேய்த்து முழுக வேண்டும் என்று கடப்பாடும் இருந்தது.

இவ்வாறான காரணங்களையெல்லாம் ஆதாரமாகக் கொண்டு எமது முன்னோர்கள் மூட நம்பிக்கைகளை கொண்டவர்கள் என்றும் பெண் அடிமைப் பேய்கள் என்றும் முட்டாள்களாகிய நாம் அவர்களை சபித்துக் கொண்டிருக்கிறோம். மாதத்தினுடைய அனைத்து நாட்களிலும் வேலை செய்த நமக்கு அந்த மூன்று நாட்களிலாவது ஓய்வு வேண்டும் என்ற காரணத்திற்காகவே அவர்கள் அவ்வாறு கூறியிருக்கிறார்கள். உதிரத்தினூடாக உடம்பில் இருந்து கழிவு வெளியேற்றப்படும் அந்த மூன்று நாட்களும் எமது உடல் வெகுவாக களைத்திருக்கும். சாதாரண நாட்களை போலல்லாது ஹோர்மோன்களின் சுரப்பின் காரணமாக சில மாற்றங்களுக்கு உள்ளாகி இருக்கும். இம்மாற்றங்கள் ஒவ்வொருவரின் உடல் நிலைமையை பொறுத்தும் வேறுபட்டுக் காணப்படும். சிலருக்கு வயிற்றுப்போக்கு இருக்கும், மார்பகம் மற்றும் வயிறுப் பகுதிகள் வழமையை விட சற்று பருத்தது போல உணர வைக்கும், இன்னும் சிலருக்கு தலைவலி, வாந்தி, மயக்கம் என இம் மாதவிலக்கு நாட்களில் அவரவர் உடம்பு நிலைக்கு ஏற்றாற் போல சில அசௌகரியங்கள் ஏற்படத்தான் செய்யும். எனவே அவ்வாறான நாட்களில் பாரமான மற்றும் அதிகமான வேலைகளை செய்வது சிரமமென்ற காரணங்களினாலேயே அவ்வாறு கூறி இருக்கின்றார்கள்.

இதுவே விஞ்ஞானத்தினுடைய அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் பெண்ணினுடைய கருத்தரிப்பதற்கான ஆயத்தப்படுத்தலாக கருப்பை சுவரினுடைய உள் மடிப்புக்களில் போதியளவு இரத்தம் நிறைந்து இருக்கும். பெண் கர்ப்பம் அடைவராக இருப்பின் உருவாகும் கருவிற்கு ஊட்டச்சத்தை வழங்குவதற்கென இது பயன்படும். அதுவே பெண் கருத்தரிக்கவில்லை எனின் இம்மடிப்புக்களில் உள்ள இழையங்களும், நுண்ணிய குருதிக்குழாய்களில் இருந்து வெளியேறும் குருதியும் கலந்து மாதவிடாய்க் கழிவாக வெளியே தள்ளப்படுகின்றது. இது அவரவர் உடல் நிலையைப் பொறுத்து 3-7 நாட்களுக்கு நடைபெறும்.

இவ்வாறான மாதவிடாய் நேரங்களில் ஏற்படும் உடல் உபாதைகள் அசௌகரியங்களினை ஏற்படுத்துகின்ற போதிலும் ஒரு பெண் தாயாவதற்கு தயார் நிலையில் உள்ளாள் என்பதற்கான சிறப்பான அறிகுறி இந்த மாதவிடாய் சுழற்சி மட்டுமே. எனவே இதனை தீட்டு என்றோ தீயது என்றோ எண்ணி நம்மை நாமே குறுக்கிக் கொள்வதனை முதலில் நிறுத்தி விட்டு தைரியமாக அதை எதிர்கொள்வதற்கு நாம் பழகிக் கொள்ளுதல் வேண்டும். ஆண்களைப் போல ஆடை அணிவதற்கும், வெளிச்செல்வற்கும் உரிமை கோரி போராடும் நாங்கள் எமது புனிதத்துவத்தின் அடையாளத்தினை மட்டும் ஏன் தீட்டாக பார்க்க வேண்டும். முதலில் நம்மை நாமே ஏற்றுக் கொள்ள பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக இம்மாதவிலக்கு நேரங்களில் நமது உடல் களைப்புற்றிருப்பதன் காரணமாக மனமும் சில பொழுதுகளில் ஆரோக்கியமிழந்து காணப்படும். இவ்வாறான நேரங்களில் எமது உடல், மனம் இரண்டிற்கும் சற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வினை வழங்கி நம்மை நாமே ஆசுவாசப்படுத்திக் கொள்வது சிறந்தது. மனதிற்கு பிடித்த இசையை இரசித்தல், குட்டித்தூக்கம் போடுதல், மன அழுத்தங்களில் இருந்து விடுதலை பெறுவதற்காக தியானச்செயற்பாடுகளில் ஈடுபடுதல் முதலியவற்றை செய்யமுடியும். மேலும் இவ்வாறான நாட்களில் அதிக கொழுப்பு, எண்ணெய், குளிர் நிறைந்த உணவுகளினை அதிகமாக உண்பதனை விடுத்து இலைவகைகள், மரக்கறிகளை அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்வதானது இதன் போது பெரும்பாலான பெண்களுக்கு ஏற்படும் வயிற்று வலி அவஸ்தையை தவிர்த்துக்கொள்ள மிகவும் உதவும்.

இவ் மாதவிடாயின் போது ஏற்படுகின்ற வயிற்றுவலி, தலைச்சுற்றல், வாந்தி முதலியவற்றில் இருந்து தற்காலிக நிவாரணத்தினை பெறுவதற்காக நம்மில் பலர் வலி நிவாரண மாத்திரைகளை வைத்தியரின் ஆலோசனையுமின்றி அருந்துவதனை வழக்கமாக கொண்டுள்ளோம். அத்துடன் மாத்திரைகளை பாவிப்பதன் மூலம் மாதவிடாயை வரவிடாது செய்தல் அல்லது தாமதமாக்குதல் முதலிய செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகிறோம். இது மிகவும் ஆபத்தான செயலாகும். மாதவிடாய் என்பது உடலில் நிகழ்கின்ற ஓர் முற்றிலும் இயற்கை சார்ந்த செயற்பாடாகும். இராசயனங்களை பாவித்து அவற்றை நிறுத்துவோமேயானால் உடலில் நடைபெறும் அத்தனை சுழற்சி முறையிலான செயற்பாடுகளும் பாதிக்கப்படுவதுடன், இம் மாத்திரைகள் மற்றும் வலி நிவாரணிகளை தொடர்ச்சியாக பாவிக்குமிடத்து அவை கருப்பை, ஈரல் முதலிய உறுப்புக்களை தாக்கி அவற்றில் புற்றுநோய், கட்டி முதலிய தீர்க்க முடியாத நோய்களைக் கூட நமக்கு தந்து விடும். எனவே ஒவ்வொரு பெண்களும் இவ்விடயத்தில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். பூப்படையும் ஒவ்வொரு பெண்ணுக்கும் இது தொடர்பான தெளிவான விழிப்புணர்வு தேவையான ஒன்றாக இருக்கின்றது.

மேலும் இம்மாதவிலக்கு நாட்களில் உடல் தூய்மை என்பது அவசியமான ஒன்றாகும். இந்நாட்களில் குளித்தல் கூடாது என்று எண்ணுவது தவறு. வழமையான நாட்களினை விட இந்நாட்களில் தான் அதிக தூய்மை தேவைப்படுகின்றது. உடலில் இருந்து வெளியேறுகின்ற கழிவுகளில் இருக்கும் கிருமிகள் மீண்டும் நமது உடலையோ அல்லது நம்மை சேர்ந்தவர்களையோ, நமது இருப்பிடங்களையோ அண்டாது தவிர்க்க வேண்டும். அதற்காக மாதவிலக்கு ஏற்பட்ட பெண்ணை விலக்கி வைக்க வேண்டும் என்பது அர்த்தமல்ல.

இவ்வுலகிலே பெண்ணாகப் பிறந்து பருவமடைகின்ற ஒவ்வொரு பெண்ணுக்கும் வழங்கப்பட்டிருக்கும் இயற்கை வரப்பிரசாதமே மாதவிலக்காகும். அது நம் உடலை தூய்மைப்படுத்தி எம்மை பூரணப்படுத்துகின்றது என்பதனை நாம் நம்ப வேண்டும். தாய்மைக்கான பாதையின் முதல் திறவுகோல் மாதவிலக்குதான். மங்கையராக பிறந்திட மாதவம் செய்திட வேண்டுமென்பது போல மாதத்தின் அந்த மூன்று நாட்களையும் அனுபவித்திடவும் மாதவம் செய்ய வேண்டுமென்பது உண்மையே.

**நன்றி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சன விரிப்பு
# கல்கியின் பொன்னியின் செல்வனும் மணிரத்தினத்தின் பொன்னியின் செல்வனும்

**மணிமேகலை**

மனித பரிணாம வளர்ச்சி வரலாற்றின் கண்ணாடிதான் இலக்கியம் ஆகும். இலக்கியமில்லா மனித வாழ்வு முற்று முழுதாக இரசனையற்று போய்விடும். கொட்டிக்கிடக்கின்ற இன்பங்களையும் துன்பங்களையும் குருதி ஆறுகளையும் கொடிய துரோகங்களையும் கொண்டணைக்கும் ஆர்ப்பரிப்புகளையும் நிறைத்து நிற்கும் இலக்கியங்களில் கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலுக்கும் முக்கிய இடமுண்டு. பொன்னி ஆற்றினை மையமாகக் கொண்டு ஐந்து பாகங்களாக எழுதப்பட்ட இக்காவியத்தை நான் பல தடவைகள் வாசித்திருக்கின்றேன். ஏறத்தாழ கி.பி 1000 ஆண்டளவில் ஆட்சியில் இருந்த சோழப்பேரரசினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இக்காவியத்தில் வந்தியத்தேவன், அருண்மொழி வர்மன், குந்தவை, பூங்குழலி, பெரிய பழுவேட்டரையர், சின்ன பழுவேட்டரையர், சேந்தன்அமுதன் முதலிய எத்தனையோ வரலாற்று கதாபாத்திரங்களை தரிசிக்க முடியும். பொன்னியின் செல்வன் நாவலின் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் , ஒவ்வொரு கதாபாத்திரங்களும் வாசகர்களின் மனதோடு நெருங்கிய தொடர்பினை கொண்டிருக்கின்றன. என் சிறுவயதுக் கனவுகளில் நான் பலமுறை அந்த சம்பவங்கள் நடந்த இடங்களுக்கு பயணித்திருக்கிறேன். ஏன் இப்போதும் கூடத்தான். அது வேறு ஓர் புதுமையான உலகம். பௌர்ணமி இரவுகளில், நடுநிசி பொழுதுகளிலும் நானும் கூடவே அவர்களுடன் சுரங்க வழிகளிலும், அந்தப்புரங்களிலும், நீண்டடர்ந்த காடுகளில் குதிரை மீதும் சவாரி செய்திருக்கிறேன். அத்தனை கதாபாத்திரங்களுடனும் நான் உறவாடி இருக்கிறேன். நாவலில் எழுத்துக்களின் வழியே அவ்வவ் கதாபாத்திரங்களினை கற்பனையில் சித்தரித்து வைத்திருக்கின்றேன். அவர்கள் அத்தனை பேருமே மிடுக்கானவர்கள், வீரமானவர்கள். அந்த கற்பனை முகங்கள் வேறுபடுவதையோ சிதைவதையோ என்னால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஐம் பெரும் காப்பியங்களில் ஒன்றாக இதை சேர்ப்பதற்கு கூட எனக்கு சம்மதமே. அந்த அளவிற்கு இந்நாவலின் நேசமான வாசகி ஒருத்தி நான்.

## வாசகர்களா? பார்வையாளர்களா?

இது இவ்வாறிருக்க பொன்னியின் செல்வன் நாவலின் பாகம் 1 ஆனது கற்பனை வரலாற்று திரைப்பட நாடகமாக இவ்வருடம் செப்ரெம்பர் 30 ம் திகதி அன்று திரைக்கு வர உள்ளது. இயக்குநர் மணிரத்தினம் மற்றும் இளங்கோ குமாரவேல், பி. ஜெயமோகன் அவர்களின் திரைக்கதை எழுத்தில் இயக்குநர் மணிரத்தினம் அவர்களினால் இயக்கப்பட்டிருக்கின்றது. இந்திய அளவில் முற்றிலும் பிரபல்யம் வாய்ந்த அனைத்து நடிகர் நடிகைகளின் உணர்ச்சி வெளிப்பாட்டில் படமாக்கப்பட்டுள்ள இப்படத்திற்கான எதிர்பார்ப்பு ஆனது இரசிகர் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பையும் கிளர்ச்சியினையும் ஏற்படுத்தி இருக்கின்றது. ஒரு வரலாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியமானது படமாக்கப்படல் என்பது நிச்சயம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றே. இவ்வாறானதொரு வரலாற்று நாடகப்படமாக்கல் நிகழ்ந்ததன் பின்னர் தான் பொன்னியின் செல்வன் என்கின்ற காவியம் ஒன்று இருப்பதே நம்மில் பலருக்கு தெரிய வந்திருக்கின்றது. அதனைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அக் காவியத்தில் வருகின்ற ஒவ்வொரு கதாபாத்திரங்களையும் ஏற்று நடித்தவர்களை மக்கள் பெரும் எதிர்பார்ப்பு ஒன்றுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். காட்சிப்படமாக்கலின் மூலம் அது இந்தளவிற்கு இரசிகர்களை சென்றடைந்திருப்பது அளப்பரிய சந்தோசத்திற்கு உரிய ஒன்றாகும். அதற்காக சேர்ந்துழைத்த படக்குழுவினர் அத்தனை பேரும் பாராட்டப்பட வேண்டியவர்களே. இது பார்வையாளர்களாகிய இரசிகர்களுக்குரிய ஒரு விடயம்.

இருப்பினும் இக்காவியமானது சுமார் 1950 இன் காலப்பகுதியில் எழுதப்பட்டு இருக்கின்றது. அதாவது 72 வருடங்கள் ஆகி இருக்கின்றன எனின் இத்தனை வருடங்களிலும் அக்காவியத்திற்கு எத்தனை வாசகர்கள் உருவாகி இருப்பார்கள். எத்தனை உணர்வுகளோடு அவர்கள் பயணித்திருப்பார்கள். என்னைப் போலவே அவர்களும் ஒவ்வொரு கதாபாத்திரங்களோடும் ஒன்றித்திருப்பார்களல்லவா? இக்காவியம் காட்சிப்படமாக்கப்பட்டிருப்பது தொடர்பில் அவர்களது எண்ண உணர்வுகள் எவ்வாறு இருக்கும். பொன்னியின் செல்வனுக்கு வாசகர்கள் அதிகமா? பார்வையாளர்கள் அதிகமா? வரலாற்று நிகழ்வொன்றினை படமாக்குவது ஒன்றும் இலகுவானது அல்லவே. அதிலும் காவியமாக எழுதப்பட்ட இதன் ஒவ்வொரு பாகங்களையும் காட்சிக்குரியதாக்குவதென்பது முடியாது. அதிலே தெரிந்தெடுக்கப்பட்ட மிக முக்கியமான விடயங்களை உள்ளடக்கி அவற்றை படமாக்கும் போது மூலத்தில் இருந்து அது வழுவுவதற்கு நிறையவே வாய்ப்புக்கள் உண்டு. அது வாசகர்களை பாதிக்கவும் சந்தர்ப்பமுண்டு. இது பொதுவான ஒரு பிரச்சனையே.

என்னைப் போன்ற மற்றைய வாசகர்களின் மனநிலை எவ்வாறு இருக்குமென்று எனக்கு தெரியவில்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரைக்கும் நான் சற்று மாற்றுக் கருத்தினை கொண்ட ஒருத்தியாகவே இருக்கின்றேன். இத்தனை காலமும் என்னால் என் மனதிலே உருவாக்கி வைக்கப்பட்டிருக்கின்ற என் கற்பனை கதாபாத்திரங்களை ஒருபோதும் சிதைக்க முடியாது. அந்தந்த முகத்தோற்றங்களுக்கும் உடல் வடிவங்களுக்கும் என்னால் இன்னொருவரை பிரதியிடவே முடியாது. மணிரத்தினத்தின் பொன்னியின் செல்வன் கொண்டாடப்படட்டும். கொண்டாடப்பட்டுக்கொண்டே இருக்கட்டும். அதே நேரத்தில் கல்கியின் பொன்னியின் செல்வனின் வாசகர்களையும் இவ்வுலகம் கொண்டாடட்டும். எது ஒன்றிற்கு காட்சி இல்லையோ அதில் தான் கற்பனையும் அதிகமிருக்கும். அப்படியாயின் பார்வையாளர்களை விட வாசகர்களுக்கு தானே கற்பனை அதிகம். நீங்கள் யாராகவேனும் இருங்கள். நான் வாசகியாகவே இருந்து விடுகிறேன் விட்டு விடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருத்தல்கள்

**பா.பாலஜினி,**
**வண்ணாங்கேணி தெற்கு.**

தேநீர் குவளை ஒன்றுடன்
ஆரம்பமாகிப் போகின்றன
என் புத்தக வாசிப்புக்கள்
இதழ்களை படித்து இலக்கியம்
படிக்கையிலே
இறந்த காலங்கள் மீண்டும்
பிறப்பிக்கப்படுகின்றனவோ?
எனக்கான இருத்தல்களும்
எனக்கான நிலவுகைகளும்
புத்தக இதழ்களிலிருந்துதான்
பிறந்திருக்க கூடும்
என் பயணங்களின் பாதிப்
பொழுதுகளை - அவை
களவாடிப்போயிருக்கின்றன

களவாடிய
பொழுதொன்றிலிருந்தான
உயிர்ப்பொன்றிலிருந்து
நான் மீளவும் வாசிக்க
தொடங்குகிறேன்.

இரத்தம் சிவப்பு நிறம்
நாம் இனி நடந்தபடி பேசிடுவோம்
வாகனப் புகைகள் ஆவதில்லை
பூமிக்கு - நீ இனி
சிரித்தபடி பேசப்பழகு
புன்னகை இயந்திரங்கள்
பூமிக்கு பெரும்பாரம்

அவர்கள் இனி நிலவொளியில்
படித்திடட்டும்
மின் ஒளிகள் தேவையில்லை இனி
எமக்கு
நாம் இனி மர இலைகளை
வாழ்த்திடப் பழகிடுவோம்

மின் விசிறிகள்
மிகை வெப்ப கக்கிகள்
அவர்கள் இனி இரவிலேனும்
தூங்கிடட்டும்
கைப்பேசி கருவிகள்
நஞ்சுமிழும் கலாதிகள்
தொற்று நோய்களும் வேண்டாம்
புற்று நோயும் வேண்டாம்
இந்தப் பூமியே போதும்
இதையே காத்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியவள்



யோ. நிரோஜனி
பளை நகரம்.

சகியான சகோடமவள்
சருவமாளும் சதிமகளவள்
சர்க்கமான விடையவள்
சகசையாய் மலராதவள்
சங்கங்களில் சங்கிதையானவள்
சண்டித்தனம் சரிந்த காந்தையவள்
திடத்தில் திதைந்த சதிரவள்
சகமும் சரிந்திடும் அவள் சந்தங்கண்டு
சங்கத் தமிழும் சகருவங் கொள்ளும் தமிழச்சியவள்
சந்தத்தில் சமைந்த சயிக்கமவள்
சடுதத்திலும் அவள் நிசனமானவள்
சகிப்புடன் தினமெனை சகிக்கும் சகதேவி
நிம்பையவள் காநமும் காதில் தித்திக்கும்
சஞ்சலையவள் நிகரத்தை நிகரிடுதலும் நிகமமற்றது
திரமும் திறமையும் நிறைந்த காமிநியவள்
காணும் காட்சியும் நிறைந்திட்ட நிதாந்தளவள்
சகியிவள் வாய்மொழியும் வார்த்தைகள் கூட,
சங்கீத சங்கதி பாடும்....
காந்தபட்சி தோகையும்; காரிகையிவள் கூந்தலும் காண்தக நிகரே
காண்தக நிகம் பொருந்திய நிசாரங்கனின் திருமகளவள்.
மூலோக முடி மன்னரும் முடிவற்ற திணிகம் புரிவர்
திருமையிவளை திருமணக்க
காந்தையிவள் காந்தப் பார்வையில்
யானும் கரைந்து விட்ட மாயம் தான் என்னவோ...
சிறகுகள் தடுத்தாலும்,
சிகரங்கள் நெடுத்தாலும்,
சக்தியவள் சிந்தனையினால்
சகலத்தையும் வென்றிடுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகராதியில் அகழ்ந்தவை

யோ. நிரோஜனி
பளை நகரம்.

1. சகி - தோழி
2. சகோடம் - 16 நரம்புகள் கொண்ட யாழ்
3. சதி மகள் - இந்திராணி
4. சகசை - உடன்பிறந்தவள்
5. சங்கம் - அழகு
6. சங்கிதை - வேதத்தின்
7. காந்தை - பெண்
8. திடம் - உறுதி, தைரியம்
9. திதைந்த - பரவுதல்
10. சதிர் - சாமர்த்தியமுள்ளவர்
11. சகம் - உலகம்
12. சந்தம் - அழகு
13. சகருவம் - பெருமை
14. சயிக்கம் - மென்மை
15. சடுதம் - போராட்டம், வீரவாதம்
16. நிசனம் - தனிமை
17. சகதேவி - பூமி தேவி
18. நிம்பை - திருமகள்
19. காநம் - இசைப்பாட்டு
20. சஞ்சலை - திருமகள்
21. நிகரம் - கூட்டம், கொடை
22. நிகரிடுதல் - ஒப்பிடுதல்
23. திரம் - உறுதி
24. காமிநி - அழகுடையவள்
25. நிதாந்தள் - மேன்மையுள்ளவள்
26. காண்தக - அழகு
27. நிகம் - ஒளி
28. நிசாரங்கன் - சந்திரன்
29. திருமகள் - இலக்குமி
30. காந்தபட்சி - மயில்
31. காரிகை - அழகு, பெண்
32. திணிகம் - போர்
33. திருமை - வனப்பு, அழகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகி சிவன் அவர்களின் வாழ்வுப் பார்வை



**சி.ஜெயதர்சினி**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

சுகி சிவம் அவர்களின் படைப்புக்களில் மனதைத் தொட்டவற்றைக் கூறுதலே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவர் வாழ்வியல் சிந்தனைகள், முதல் இடம், எது தர்மம்?, வாழ்தல் ஒரு கலை, ஒளி பரவட்டும், மனிதனும் தெய்வமாகலாம், ஞான மலர்கள் போன்ற பல்வகை ஆக்கங்களைப் படைத்துள்ளார். இவர் தான் சொல்ல வருகின்ற கருத்துக்களை நகைச்சுவை தேன் கலந்து நயம்பட உரைப்பதால் அனைத்து வயதினரையும் கவர்ந்திழுப்பவராக இருக்கின்றார்.

இவர் எழுதிய "மனசே ஒரு மந்திரச்சாவி" லட்சக் கணக்கான இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றக்கூடிய நம்பிக்கைப் படைப்பாக இருக்கிறது. இவர் தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் கடல் கடந்த வெளிநாடுகளிலும் கன்னித்தமிழை பரப்பி வருபவராவார்.

குடும்ப அமைப்பிற்கு அன்பு ஒன்று தான் அடிப்படையானதாகும். உலகத்தினையே இந்த அன்பு ஒன்று தான் கட்டி ஆளுகின்றது. அன்பு இல்லாத நிலை குடும்பம் தன் கட்டுக்கோப்பை இழந்தே விடும். இதனைத்தான் சுகி சிவம் அவர்கள் "வாழ்வியல் சிந்தனைகள்" என்ற படைப்பில் "குடும்ப சிந்தனைகள்" என்ற அத்தியாயத்தில்,

> "அன்பு தான் குடும்பத்தின் விஸ்தீரணத்தை முடிவு செய்யும். ஆற்றலே ஒழிய இரத்தக்கலப்பு மட்டும் அல்ல" என அழகாகக் குறிப்பிடுகின்றார்.

நாம் எமது வாழ்க்கையை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்செல்வதற்கு தன்னம்பிக்கை அத்தியாவசியமாகும். இதற்கு தன்னில் தான் நம்பிக்கை வைப்பது முக்கியமாகும். இதனை "தன்னம்பிக்கை பற்றிய சிந்தனைகள்" என்ற அத்தியாயத்தில்,

> "திறமை உள்ளவர்கள் தன் திறமை மீது வைத்திருக்கும் நம்பிக்கை தான் தன்னம்பிக்கை" என்கின்றார்.

நாம் எல்லோரும் பார்ப்பதற்கு மனிதர்களாகத் தோற்றமளிப்பினும் அவரவர் மனதில் உள்ள உட்பொருள்களுக்கேற்பவே அவர்களது மனநிலை தீர்மானிக்கப்படுகிறது. இதனை "மனிதன் தெய்வமாக முடியுமா? " என்ற அத்தியாயத்தில்

> "மனிதர்கள் எல்லோரும் கை, கால், கண், மூக்கு ஆகியவற்றை ஒருவரை வைத்துப் பார்த்தால் மனிதர்களாகவே தோன்றினாலும் மனதில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை விலங்கு ஆக்கும். அன்பு மனிதனாக வைத்திருக்கும். அருள் தெய்வமாகவே உயர்த்தி விடும்'' என ஆசை, அன்பு, அருள் என்பவற்றினூடாக மனிதனது நிலை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

மனிதர்களாகிய நாங்கள் மற்றவர்கள் கூறும் கருத்துக்களை செவிசாய்த்துக் கேட்கலாம். ஆனால் அவர்களது கருத்துக்களை ஆராய்தறிந்து நம்முடைய தீர்மானத்தினூடாகவே எதனையும் செயலாற்ற வேண்டும். அவ்வாறில்லாது மற்றையவர் கருத்துப்படியே நடப்போமானால் நாம் பாழாங்கிணற்றில் விழுவதற்கு சமமாகும். இதனை "வாழ்கையின் அர்த்தம்" என்ற தலைப்பில்

"வாழ்க்கை என்பது அகன்று விரிந்து ஆழம் கொண்டிருக்கும் பிரமாண்டமான சமுத்திரம் போன்றதாகும். மற்றவர் கூறியவற்றை எல்லாம் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அந்தந்தப் பாதைகளிலெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு நடைபோட ஆரம்பித்து விடாதீர்கள். அப்படி நடக்கத் தொடங்கி விட்டால் நீங்கள் எந்த இலக்கையும் போய்ச்சேர முடியாது." என்று குறிப்பிடுகின்றார்.

மனித குலமானது நான்கு வர்ணங்களாக வகுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வகுக்கப்பட்டிருப்பினும் அவரவர் செய்யும் செயலைப் பொறுத்தே அவரவர் வர்ணம் தீர்மானிக்கப்படுகிறது. இதனை ஆசிரியர் "எது தர்மம்? " என்ற படைப்பில் மருத்துவர் ஒருவர் எந்த வர்ணத்தைச் சேர்ந்தவர்? என ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலாக ஒருவர் கூறியதாகக் குறிப்பிடுகின்றார்.

மருத்துவர் மருத்துவதுறையில் ஆராய்ச்சி செய்பவராகவோ மாணவர்களுக்குப் போதிப்பவராகவோ இருந்தால் அவர் பிரமணராகின்றார். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பொறுப்பை ஏற்று செயற்பட்டால் அவர் ஷத்திரியராகிறார். மருத்துவமனை நடத்தியோ மருந்து வாணிபம் செய்தோ லாபம் ஈட்டலை நோக்கமாகக் கொண்டால் வைசியர் என்றும் மற்றவருக்கு மருத்துவம் பார்க்கும் தொண்டில் ஈடுபட்டால் அவர் நான்காம் வருணத்தவர் என்றும் அவரவரது செயலைப் பொறுத்து தான் அவரவரது வர்ணம் வேறுபடும். என்கிறார்.

நாம் ஓர் ஆக்கத்தினைப் படைக்க முயலும் போது கற்ற புத்தகங்களைக் கொண்டு ஆக்கச் செயற்பாட்டினை முன்னெடுப்பதை விட நாம் வாழ்ந்த வாழ்க்கையைக் கொண்டு ஆக்கம் படைப்பது மேலானதொன்றாகும். இதனை இவர் "முதல் இடம்" என்ற படைப்பில் "மனிதர்களே புத்தகங்களாக" என்ற அத்தியாயத்தில்

''புத்தகங்களைப் படித்துவிட்டு வாழ்க்கையை எழுதுவதை விட வாழ்க்கையைப் படித்துவிட்டுப் புத்தகங்கள் எழுதுவது பயனுள்ள வேலை" என்று குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் மனிதர்களாக உருப்பெற்றவர்களாக இருப்பினும் அடுத்தவர்களைப் பற்றிக் கதைப்பதில் அலாதிப் பிரியமுடையவர்களாக இருக்கிறோம். இக்கருத்து கசப்பாக இருப்பினும் இதுதான் உண்மை தன்மை. படித்தவர்கள் இதற்கு விதி விலக்கல்ல. இதனை "மனித குலத்தின் சாபங்கள்" என்ற அத்தியாயத்தில்

"ஒருவரை இன்னொருவரோடு ஒப்பிட்டு உயர்வு, தாழ்வு கற்பிப்பது மானிடநோய். மரபு வழிப் பிழை. இதனால் தான் சிலருக்குத் திமிரும் சிலருக்குத் தாழ்வு மனமும் உண்டாகி உலகம் நரகமானது" எனக் குறிப்பிடுகின்றார்.

எங்களுக்கு ஒரு துன்பம் நேரும் போது தான் நாம் கடவுளை நினைக்கின்றோம். அந்நிலையில் நாம் கடவுளை வணங்கும் போது "எங்களுக்கு பிரச்சனைகளைத் தராதே" என்றுதான் கும்பிடுவது வழக்கம். ஆனால் வாழ்க்கை என்ற வட்டத்தில் யாருக்குத்தான் பிரச்சனை இல்லை. ஆகையால் நாம் கடவுளை வணங்கும் போது எமக்கு ஏற்படும் பிரச்சனைகளை முகங்கொடுப்பதற்குரிய பலத்தைக் கொடுக்கும் படி இறைஞ்ச வேண்டும். இதனை "மனசே, நீ ஒரு மந்திரச்சாவி!" என்ற படைப்பில் "உள்ளே இன்னொருவர்!" என்ற அத்தியாயத்தில்

"இறைவனை வேண்டும் போது பிரச்சனைகள் வராமல் காப்பாற்று என்று வேண்டாதீர்கள். பிரச்சனைகளைச் சந்திக்கும் பலத்தையும் ஜெயிக்கும் அறிவையும் அடையாளம் காட்டும் படி வேண்டுங்கள்." எனக் கூறுகின்றார்.

நாம் அதுவாக ஆக நினைக்கிறோமோ அந்த நினைவுடனேயே மனதினை வைத்திருந்தால் நாம் அதுவாகவே மாறி விடுவோம். உதாரணமாக நாம் எப்பொழுதும் இறைநினைவுடனேயே இருந்தால் எங்களை அறியாமலேயே இறைஅருள் கூடி வரும். இதனையே "ஆனந்தமாக இருங்கள்" என்ற அத்தியாயத்தில்

"பூரண வெற்றி பெற்ற பின் எந்த மனோநிலையில் நீங்கள் இருப்பீர்களோ அந்த மனநிலையில் முன்கூட்டியே நீங்கள் இருக்கப்பழகினால் வெற்றி நிச்சயம் உங்களைத் தேடி வரும். இதுதான் வெற்றிக்கான மந்திரச்சாவி!" எனக் கூறுகிறார்.

விரதங்கள் பற்றிப் பார்க்கும் போது ஆண்களை விட பெண்கள் தான் விரதம் இருப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இவர்களது வேண்டுதல்களே ஆண்களை ஆரோக்கிய நிலையில் நடமாட வைக்கிறது. குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கிய நிலைக்கு பெண்களே தூண்களாக விளங்குகிறார்கள். பெண்கள் மனதளவில் உறுதியானவர்களாகவும் ஆண்கள் அலைபாய்ந்த மனத்தினர்களாகவும் காணப்படுகின்றார்கள். இதனை ஆசிரியர் அவர்கள் "மார்கழித்திங்கள்" என்ற அத்தியாயத்தில்

"யோக்கியமான ஆண்கள் என்பது பற்றாக்குறை விஷயம். எனவே மார்கழிமாதத்தில் விரதம் இருந்து நல்ல கணவன்களை எங்களுக்குத் தா என்று கன்னிப் பெண்கள் வேண்டுவது பாவை நோன்பு எனப்படும்."என குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இந்த உலகில் ஏதோ வாழவேண்டும் என்பதற்காக ஓர் அர்த்தமில்லா வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது சிந்தனையும் குறுகிய வட்டத்திற்குள்ளேயே நிற்கின்றது. பரந்துபட்ட இந்த உலகத்தில் புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் அற்றவர்களாகவே இருக்கிறோம்.

"ஏனோ பிறந்தோம் வாழ்கிறோம்" என்கின்ற நிலை. இதனை "வாழ்தல் ஒரு கலை" என்ற படைப்பில் "நான் ஏன் பிறந்தேன்" என்ற அத்தியாயத்தில்,

"இந்த உலகில் நான் வாழ வேண்டும். வாழ்க்கையை அணுஅணுவாக ஒவ்வொரு கணமும் அனுபவிக்க வேண்டும். வாழ்க்கைக்கென்று எந்த தனி அர்த்தமும் கிடையாது. அர்த்தமில்லாமிட்டாலும் நீங்கள் வாழ்ந்து தான் ஆக வேண்டும். வாழ்க்கைக்கு அர்த்தமில்லை என்று எல்லோரையும் அள்ளிக்கொண்டு போய் அரபிக் கடலுக்குள் அமுக்கி விட முடியுமா? என்ன?" எனக் கூறுகின்றார்.

மனிதர்கள் ஆசை உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆசைப்படுவது என்பதை விட பேராசைப்படுவது என்பது மிகப் பொருத்தமானதாக இருக்கும். ஒரு நினைத்து ஆசைப்படுவது அது கிடைத்து விட்டால் அடுத்ததிற்காக ஏங்குவது. இதை விடவும் மது அருந்துபவர்கள், முறையற்ற உறவுகளில் சபலப்படுகிறவர்கள் என இவர்களது ஏக்கமானது நிம்மதியற்ற வாழ்க்கையினையே அளிக்கின்றது. இதனை "மனிதனும் தெய்வமாகலாம்" என்ற படைப்பில் "உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்" என்ற அத்தியாயத்தில் ஆசிரியர்,

"ஆசைப்படுவது ரோஜாவை முகர்ந்து பார்க்கிற மாதிரி பேராசைப்படுவது ரோஜாவைச் செடியோடு பெயர்த்து எடுக்கிற மாதிரி. அடுத்தது சபலம். அழகான மனைவி இருக்கிற போதே அடுத்தவன் மனைவியிடம் வழிகிற அசடுகள், நிம்மதி, நிதானம் இழந்து விடுகிறார்கள். சபலங்களால் சரிந்து போன சாமியர்கள் எத்தனை பேர் தெரியுமா? " எனக் கூறுகிறார்.

வயதான பெரியவர்கள் மென்மையான குணம் படைத்தவர்களாக இருக்க வேண்டும். ஆனாலும் எல்லோரும் அவ்வாறு இருப்பதில்லை. பண்புள்ள பெரியவர்கள் தெய்வகுணம் பொருந்தியவர்களாக இருப்பார்கள். அவர்களிடமிருந்து வெளிப்படும் வார்த்தைகள் அன்பு நெறி சார்ந்ததாகவே இருக்கும். இதனை ஆசிரியர் "அமைதி, பொறுமை, ஆனந்தம்" எனும் அத்தியாயத்தில்

> "மென்மை ஒரு தெய்வ குணம். பண்பட்ட பெரியோர்களிடம் பழகிப் பார்த்தவர்கள் இதனை அறிவார்கள். அதிர்ந்து பேச மாட்டார்கள். கடுஞ்சொல், உஷ்ணமான முறையில் ஒலிப்பிரயோகம் இவை தெய்வீக புருஷர்களின் இயல்பு அல்ல" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இக் கருத்துக்கள் யாவும் சுகிசிவம் அவர்களது படைப்புக்களிலிருந்து என் மனதைத் தொட்ட சிலவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பிரதேசத்தில் மக்களின் இருப்பை நிலைநிறுத்த அப்பிரதேச வளங்களை அழிவில் இருந்து பாதுகாப்பதற்கான அவசியம்



சி.புவனராசா
ஒய்வு நிலை நிர்வாக கிராம அலுவலகம்,
தம்பகாமம்.
பளை.

ஒரு பிரதேசத்தின் மக்களின் வாழ்வாதாரத்திற்கு நிலம், நீர், காற்றோட்டம் என்பன முக்கியமான இயற்கை வளபடைப்பாக காணப்படுகிறது. இவையே மக்களின் வாழ்விடத்தை வாழ்க்கையை மக்களின் குடிப்பரம்பலை நிர்ணயிக்கின்றன. இவையே நிகழ்கால எதிர்கால மக்களின் இருப்பை நிர்ணயிக்கின்றன. இவற்றின் தாக்கத்தை வைத்தே அப்பிரதேசத்தின் மக்களின் குடிப்பரம்பல் காணப்படுவதை அவதானிக்கலாம். இவையே எதிர்கால குடிமக்களின் இருப்பையும் நிலைநிறுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது. சுத்தமான காற்றோட்டம் ஒரு பிரதேசத்தின் நிலைத்தன்மையில் செல்வாக்கு செலுத்துகின்றது. சுத்தமான காற்று குறித்த வீதத்தில் ஒரு பிரதேசத்தில் தொடர்ந்து நிலவுவதற்கு அங்கு மரங்களின் செறிவு ஓர் குறிப்பிட்ட வீதத்தில் காணப்பட வேண்டும். பொதுவாக உலக சூழலியல் ஆய்வாளர்களால் ஓர் நாட்டில் ஓர் பிரதேசத்தில் காடுகள் 32% காணப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் 29.5% காடுகள் காணப்படுவதாக கணிக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச அளவை விட குறைவானதே அவ்வளவானது எமது பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் யுத்தகால நடவடிக்கையால் பாரிய சரிவை சந்தித்துள்ளது. பெரு மரங்கள் யுத்தம் கடுமையாக நடைபெற்ற இடங்களில் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தென்னை, பனை மரங்களை குறிப்பிடலாம். இதைவிட மீள் குடியேற்றத்தின் பின்னர் மக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் மரங்கள், காடுகள் அழிக்கப்பட்டதால் எமது பகுதியில் காடுகளின் இருப்பின் வீதம் இதைவிட குறைவடைந்து காணப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது. எமது பிரதேசம் ஆரம்ப காலத்தில் மரஞ்செடி, கொடிகளின் செறிவு காரணமாக பச்சிலைப்பள்ளி என்றும் பெயரைப் பெற்றது. அன்று பசுமை நிறைந்த பிரதேசமாக வளமான இடமாக காட்சியளித்தது. இன்று அந்நிலையில் இப்பிரதேசம் இல்லை.

எங்கள் பிரதேசம் சோழக்காற்று காலத்தில் கோடையில் ஆனையிறவு கிளாலி சிறுகடலைத்தாண்டி கூழ் காற்று தரைப்பகுதிக்குள் புகுவதால் ஓரளவு குளிர்ச்சியாக ஊருக்குள் வருகின்றது. வாடைக்காற்று காலத்தில் (மாரியில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமுத்திரத்தையும் கோயில் வயல் - முகமாலை வரை ஊடறுத்துச் செல்லும் தொண்டமனாற்றையும் கடந்து ஊருக்குள் வருவதால் குளிர்ச்சியடைந்து வருகின்றது. அத்துடன் மாரி மழையும் கிடைக்கின்றது. மாரியில் கச்சான் காற்றுக்காலத்தில் வடமேற்கு திசையில் சமுத்திரத்தையும் ஆற்றையும் கடந்து ஊரை அடைகிறது. இக்காற்றுக் காலத்தில் மாரியில் அதிக மழை வீழ்ச்சி கிடைக்கின்றது. இக்காலத்தில் எமது பிரதேசம் கடும் குளிராகவும் பெரும் பகுதி மழையையும் பெறுகின்றது. கொண்டல் காற்று காலத்தில் இக்காற்று எமது பகுதியில் உட்புகும் போது இந்து சமுத்திரத்தின் ஊடாக எம் பிரதேசத்தின் வடகிழக்கு பகுதியூடாக மாரி காலத்தில் உட்புகுவதால் குளிராகவும் மாரி மழையை வழங்கும் காற்றாகவும் உள்ளது. எமது பிரதேசத்தின் நீர்வளம் மாரி காலத்தில் ஐப்பசி நடுப்பகுதியில் இருந்து தை வரையான காலத்தில் அதிக மழையைப் பெறுகின்றது. தென் மேல் பருவப் பெயர்ச்சி காலத்தில் (கோடையில்) குறைந்தளவு மழையையே பெறுகின்றது. இம் மழை வீழ்ச்சிகளே எம் பிரதேச நீர் இருப்பையும் நிலத்தடி நீரையும் நிர்ணயிக்கின்றது. இக்காலங்களில் இக்காற்றுக்களால் மழை பெய்வதற்கு காடுகளே செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக உள்ளது. காடுகளே ஆவியாதல் செயற்பாட்டிற்கு முக்கிய பங்களிப்பை செய்கின்றது. பிரதேசத்தின் மேகக்கூட்ட கீழ்படை மேற்படையில் ஈரலிப்பை கூட்டுவதன் மூலமே மழை வீழ்ச்சி கூடுதலாக கிடைக்க வழி ஏற்படுகின்றது. எமது முன்னோர் காலத்தில் எமது பிரதேசத்தில் பெய்த மழைவீழ்ச்சி தற்போது கிடைப்பதில்லை. இதற்கு எமது பிரதேசத்தில் கட்டுப்பாடுகள் இன்றி காடழிப்பதே காரணமாகும். எமது பிரதேசம் கிளாலி கடல் நீரேரிக்கும் தொண்டமானாறு நீர் ஏரிக்கும் இடையில் காணப்படும் ஒடுங்கிய ஓர் நிலப்பரப்பாக குறிப்பாக சுமார் 07 க்கும் 08 க்கும் இடைப்பட்ட கி.மீற்றர் தூரத்தை அகலமாக கொண்ட பிரதேசமாகும். இங்கு தென்மேல் பருவப் பெயர்ச்சி காற்றும் வடகீழ் பருவப்பெயர்ச்சி காற்றும் விரைவாக பிரதேசத்தை கடந்து செல்லும் தன்மை காணப்படுகின்றது. மரங்களின் செறிவு கூடுதலாக இருந்தாலே மழைவீழ்ச்சியின் அளவையும் கூட்ட முடியும்.

தற்போது எமது பிரதேசத்தில் பல்வேறு தேவை கருதி கட்டுப்பாடு இன்றி காடுகள் அழிக்கப்படுகின்றது. பிரதேசத்தின் தென்பகுதி, வடபகுதி, கிழக்குப்பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்வதற்காகவும், மேட்டுப்பயிர்ச்செய்கைக்காகவும் குடியிருப்புகளை ஏற்படுத்துவதற்காகவும் தனியார் காணி, அரச காணிகள் காடுகள் கட்டுப்பாடின்றி அழிக்கப்படுகின்றது. இதை ஈடு செய்வதற்காக வேறு பகுதியிலாவது மீள்நடுகை மேற்கொள்ளப்படுவதில்லை. அது மட்டுமன்றி பனைமரங்கள் அனுமதி இன்றி பல்வேறு தேவைக்காக வெட்டப்படுகின்றது. அபிவிருத்தி என்ற போர்வையில் பனை மரங்கள், வடலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய இயந்திரங்கள் மூலம் இடித்து அகற்றப்படுகின்றது. இவற்றை உரியவர்கள் கண்காணிப்பதாகவோ, தடுப்பதாகவோ, நெறிப்படுத்துவதாகவோ தெரியவில்லை. 2000 ம் ஆண்டுக்கு முன்னர் பச்சிலைப்பள்ளியில் வளர்க்கப்பட்ட சுமார் 20,000க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு பிரதேசத்தில் வடக்கு, தெற்கு, கிழக்கு பகுதிகளில் ஒதுக்கப்பட்ட மேச்சற்தரை கூடுதலான பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு வேறு செயற்பாட்டிற்கு உட்பட்டுள்ளது. இந்நிலை தொடர்ந்தால் கால்நடை வளர்ப்பும் இயற்கை உரச்செயற்பாடும் பாரிய பின்னடைவை சந்திக்கும். தற்போது கால்நடை வளர்ப்போர் அவற்றின் மேய்ச்சலிற்காக பெரும் கஸ்ரப்படுகினள்றனர். இந்நிலை கால போக நெற்செய்கை காலத்தில் மிகவும் நெருக்கடிக்குள் உள்ளாகும். சுமார் பதினையாயிரம் கால்நடைகள் பாதிக்கப்படும்.

யுத்தத்திற்கு முன்னர் பளையில் இயங்கிய வன பரிபாலனத்திணைக்களம் யுத்தத்திற்கு பின்னர் அழிவடைந்ததால் கட்டடம் மீள அமைக்கப்படவில்லை. பளைக்கென ஓர் அலுவலகமும் இல்லை. அலுவலரும் இல்லை. வேறு பகுதியில் இருந்தே அலுவலர்கள் பளைப்பகுதியை கண்காணிக்கின்றனர். முன்னர் ஆண்டு தோறும் மேற்கொள்ளப்படும் மரங்களின் மீள்நடுகை தற்போது மேற்கொள்ளப்படுவதாக தெரியவில்லை. சவுக்கு போன்ற உயரமாக வளரும் மரங்கள் மீள்நடுகை செய்யப்படுவதில்லை. இம்மரங்கள் உயர்ந்து வளர்வதால் மழைவீழ்ச்சி கூடுதலாக கிடைப்பதற்கு உதவி புரிகின்றது. ஆரம்பத்தில் இயங்கிய இத்திணைக்களமும் அலுவலகமும் இப்பகுதியில் நிரந்தரமாக நிறுவப்பட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு மீள்நடுகை மேற்கொள்ளப்படுவதுடன் வன இலாக பிரதேசமும் மர நடுகை மூலம் மீள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

பளைப்பகுதியில் அழிக்கப்படும் பனை மரங்களிற்காக பனை அபிவிருத்திச்சபை பளைப்பகுதியின் கரையோரப் பகுதியிலாவது திட்டமிட்ட அடிப்படையில் பனைமரம் நடும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் குறைக்கப்பட்ட மரங்களின் அளவைக் கூட்ட முடியும். செறிவைக் கூட்ட முடியும். காற்றின் வேகத்தை குறைக்கவும் வளிமண்டல கீழடுக்கு, மேலடுக்கு ஏன்பவற்றில் மரங்களின் ஆவியுயிர்ப்பின் மூலம் ஈரப்பதத்தை அதிகரிப்பதால் முகில், கூட்டங்கள் அதை கடக்கும் போது பனி படு நிலையை ,அடைந்து அப்பகுதியில் மழைவீழ்ச்சியை கூட்ட முடியும். இதற்கு எமது பிரதேசத்தில் அழிவடையும் மரங்களுக்கு ஈடு செய்யும் வகையில் மரங்கள் நடப்பட வேண்டும். பனைமரத்தை விட நாவல், மா, வேம்பு போன்ற மரங்களும் விறகுத் தேவைக்காக கட்டுப்பாடு இன்றி வெட்டப்படுகின்றது. இதை விட இப்பிரதேசத்தில் பெரு மரங்கள் பரவலாக விறகு தேவைக்காக வெட்டப்படுகின்றது. இதனால் மரங்களின் இயற்கை சமநிலை வீழ்ச்சி அடைகின்றது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இதை ஈடு செய்ய இவ்வகை மரங்கள் திட்டமிட்ட வகையில் நடப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில அமைப்பை பொறுத்தவரை பச்சிலைப்பள்ளியின் சராசரி உயரம் 3 - 4 அடி வரை இருப்பதாக அறிய முடிகின்றது. சில உயரமான இடங்கள் 5 - 12 அடி வரையும் பதிவான இடங்கள் கடல் மட்டத்தில் இருந்து 1 - 2 அடி வரையும் காணப்படுகின்றது. இங்கு மண் காற்றாலோ அன்றேல் கடலாலோ ஒதுக்கப்படுவதில்லை. ஆரம்ப காலத்தில் இருந்தே இப்பகுதியின் நில அமைப்பு சில இடங்கள் உயரமாகவும் பல பகுதிகள் சாதாரண சமதரையாகவும் சில பகுதிகள் கடல் மட்டத்தில் இருந்து ஒரு சில அடிகளே உயரமாக உள்ளது. இங்கு பல்வேறு தேவைக்காக கரையோரப்பகுதியிலும் பிரதேசத்தின் மையப் பகுதியிலும் மண் அகழப்படுகின்றது. ஒதுக்கப்பட்ட பகுதிகளை விட அனுமதியின்றி தனியார் காணிகள், வயல் வெளிகள், கடற்கரை ஓரங்கள் ஆற்றங்கரை ஓரங்கள் என்பவற்றில் மண் அகழப்படுவதால் கிளாலி ஆனையிறவு கடல்நீர் தொண்டமானாறு ஆற்றுநீர் தரைக்குள் மாரியில் உட்புகக் கூடிய நிலை காணப்படுகிறது. இதனால் நன்னீர் பிரதேசம் உவராக மாறும் சூழ்நிலை காணப்படுகின்றது. அத்துடன் கரையோரப் பகுதிகளில் ஊரி வெட்டப்படுவதால் அப்பிரதேசத்தின் அண்மைய பிரதேச நீர் சவராகவும் உவராகவும் மாறுகின்றது. மண் ஊரி என்பன கட்டுப்பாடு இன்றி ஆழமாக தோண்டப்படுவதால் அப்பகுதி பாரிய கிடங்காகவும் மாரியில் குளம் போன்றும் உப்பு நீர் முன்னோக்கி தேங்கும் இடமாகவும் காணப்படுகின்றது.

இப்பகுதியில் அனுமதியற்ற மண் அகழ்வும் பச்சிலைப்பள்ளியை விட்டு வேறு பிரதேசங்களிற்கு மண் கடத்தப்படுவதும் எதிர் காலத்தில் நீர் வளிந்தோடும் தொடர் செயற்படு தன்மை காரணமாக நில உயரம் குறைவடைந்து கடல்நீர் உட்புகும் நிலை ஏற்படலாம். எதிர்கால சந்ததியினரின் இப்பகுதியின் இருப்புக்கு இந்நிலை பாதிப்பை ஏற்படுத்தலாம். சட்டவிரோத மண் அகழ்வு சட்டத்தின் மூலம் சம்மந்தப்பட்ட தரப்புக்களால் தடுத்து நிறுத்தப்படாது விட்டால் எதிர்காலத்தில் பல பிரச்சனைகள் ஏற்படலாம். மக்களின் பயிர்ச்செய்கை பிரதேசம் குடியிருப்பு பிரதேசம் பாதிக்கப்படலாம். அவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்து குடிப்பரம்பல் நகர்வடையலாம். அதிக மண் அகழ்வால் நிலத்தடி நீர் குறைவடையலாம். எனவே ஒரு பிரதேசத்தின் நிலம் பாதுகாக்கப்படுவதன் மூலம் நீரும் காற்றோட்டமும் பாதுகாக்கப்பட்டு மக்கள் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும். அத்துடன் கால்நடைகளின் மேய்ச்சல் நிலம் பாதுகாக்கப்பட்டு மண்வளம் பாதுகாக்கப்பட வேண்டும். இதன் மூலம் மக்களின் இருப்பு உறுதிப்படுத்தப்பட்டு இப்பிரதேசம் பாதுகாக்கப்படவேண்டும்.

"வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடும் நாகரிகமும்




வத்திராயன் கயல்
சி. சக்திவேல், வத்திராயன்

நாட்டு நிலமையெல்லாம் நாசமாய் போய்க்கிடக்கு
நாகரிக மோகம் இங்க நல்லாத்தான் ஊறிப்போச்சு
பாட்டி சொன்ன கதைகளெல்லாம் பகல் கனவாய் அழிஞ்சு போய்ச்சு
பாழ்பட்ட சீரியல் தான் பலரோட பொழுதுபோக்கு
நாட்டுக்கூத்துகளெல்லாம் நாளடைவில் மறைஞ்சு போய்ச்சு
கோஷ்டி பிடிச்சு கூத்தடிக்கும் நிகழ்வுகள் தான் கூடிப்போச்சு
கோயில் திருவிழாக்கள் கோலம் குறைஞ்சு போய்ச்சு
கேளிக்கை நிகழ்வு தான் திருவிழா என்று ஆகிப் போச்சு
கூடி விளையாடும் கூட்டமெல்லாம் குறைஞ்சு போச்சு
பேஸ்புக்கும் வைபரும் தான் போதையென ஆகிப் போச்சு
கிளித்தட்டும் சிரட்டைப் பந்தும் எப்பவோ மறந்து போச்சு
ரெம்பிள் ரண்ணும் கன்டி கிறசும் நேரத்தையெல்லாம்
விழுங்கிப்போச்சு
இளநீர் குடிக்கும் பெடியளெல்லாம் குறைஞ்சு போச்சு
பியரும் சோடாவும் தான் பிரதானம் எண்டு ஆகிப் போச்சு
பத்து வருசத்துக்க பாத்ததெல்லாம் மாறிப்போச்சு
தமிழ்ப் பண்பாடு கேள்விக்குறி ஆகிப்போச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவா பல்பொருள் வாணிபம்

உரிமையாளர் – தா.சிவானந்தன்
தொ.பே.இல : – 077 9748 826


A9 வீதி, பளை.



பலசரக்குப் பொருட்கள் அனைத்தையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.J.R Construction



தவசிகுளம், கொடிகாமம்.
உரிமையாளர் : ச.ஆனந்தராசா

TP: 077 9753 989
077 2454 025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# வாழ்வின் பாடம்



திருமதி . உமா. கணேசநாதன்
மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர்,
பளை.

அதிகாலை அருகிலிருந்த அம்மன் கோயிலில் மணியோசை டாண்.... டாண் என ஒலித்து ஐந்து மணி ஆகி விட்டது என்பதனை நினைவூட்டியது. அடடே நேரம் போய் விட்டதே இனி எவ்வாறு இரண்டு நேர உணவையும் செய்து எத்தனை மணிக்கு வேலைக்கு செல்வது என்று தலையில் அடித்துக் கொண்டாள் லாவண்யா. வயது 45 தான். ஆக நான்கு பிள்ளைகளின் தாய்தான். வரவர உடல் நிலை ஒத்துழைக்க மறுக்கிறது. இரவு 10.00 மணிக்கு பின் படுக்கைக்கு சென்றால் எப்படியும் உறக்கம் வர 11.00 மணியாகி விடும்.

மூத்தவன் படித்து மருத்துவராக வேண்டுமென்று பல்கலைக்கழகம் சென்று மூன்று வருடங்கள் கடந்து விட்டது. லாவண்யா படித்து முடித்தவுடன் வேலை கிடைத்து விட்டது. அடுத்த வருடமே திருமணம் நடந்து விட்டது. அவளது பதின்ம பருவ நிகழ்வுகள் யாவும் இப்போது பழைய கதையாக போய்விட்டது. அவளின் காலத்தில் அம்மா, அப்பா சொல்வதுதான் வேதவாக்கு என்ற வாழ்க்கை. இவளுக்கு திருமணமாகி அடுத்த வருடமே மூத்தவன் பிறந்து விட்டான். அடுத்த ஒவ்வொரு மூன்று வருடத்திற்கும் மூன்று பேர் என நான்கு பிள்ளைகளுக்கு தாயாகி விட்டிருந்தாள். இரண்டு ஆண் இரண்டு பெண். "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து". அப்பாடா என்று நான்காமவருடன் கருத்தடை செய்து விட்டாள். கடைக்குட்டிக்கும் மூன்றாமவளுக்கும் ஐந்து வருட இடைவெளி.

அவள் கணவன் அரச அலுவலகம் ஒன்றில் நிர்வாகியாக பதவி வகித்தான். பட்டதாரியானவுடன் திருமணம் நடந்து விட்டது அவனுக்கு. அதன்பின் பல பதவியுயர்வுகள். இறுதியாக நிர்வாக உத்தியோகத்தர் பதவி போதுமென்று நிறுத்தி விட்டான். இருவருக்குமே பரம்பரை சொத்து என்று காணி 04 ஏக்கர், வீடு இரண்டு என்று போதுமானதாக இருந்தாலும் கௌரவம் என்று லாவண்யாவும் வேலைக்கு சென்று வந்தாள். ஒரு வழியாக எதுவித பிரச்சனையுமின்றி காலம் ஓடிக் கொண்டிருந்தது. இரண்டாமவள் கா.பொ.த உயர்தரம் படித்த பின் கல்வியியல் கல்லூரிக்கு சென்று விட்டிருந்தாள். மூன்றாவதும் பெண். இரண்டு பெண் அடுத்தடுத்து பிறந்தமையால் இனிமேல் போதும் என்று அசண்டையாக இருந்து விட்டதன் பலன் கடைக்குட்டி சிங்கம் பிறந்து அவன் இப்போது 10 ஆம் ஆண்டில் கல்வி கற்று வருகிறான். பிள்ளைகள் எல்லாம் படிப்பில் சூரப்புலிகள். மூன்றாமவளும் விஞ்ஞான பிரிவில் க.பொ.த உயர்தரம் படிக்கிறாள். முதல் மூவராலும் ஒரு பிரச்சனையும் வந்ததே இல்லை. இப்போது பிரச்சனைக்குரியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்குட்டி சிங்கம் தான். தான் தான் எல்லோருக்கும் செல்லக்குட்டி. எல்லோரும் தன் சொல்படிதான் நடக்க வேண்டும் என்பது அவனது ஆசை. சிறு வயது முதலே எல்லோரையும் அடக்கி வைப்பான். சிறு பிள்ளைதானே என்று விட்டதன் விளைவு. இப்போது அவள் அனுபவிக்கிறாள். இப்பவே சிநேகிதங்கள் அதிகம். அம்மா, அப்பா, அக்கா, அண்ணா அனைவரின் கைபேசிகளும் அவனுடமை. என்ன எல்லாமோ செய்து மாத்தி வைப்பான். வீட்டில் படிப்பதே இல்லை. ஆனால் 5ம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தியடைந்து விட்டான். அவனை நினைக்கும் போது அவருக்கு சரியான கவலை. இவன் படித்து ஒரு நிலைமைக்கு வந்தால் தான் நிம்மதியாக இருக்கும். அம்மன் கோயில் மணி மீண்டும் ஒலித்தது. ஓ... 6.00 மணியாகி விட்டது. இரவு வெட்டி வைத்த மரக்கறிகளை எடுத்து வந்து பருப்பும் சேர்ந்து ஒரு சாம்பார் தயார். மின்சாரத்தைப் பாவித்து குக்கரில் அரிசி போட்டாகி விட்டது. இடியப்பம் அவித்து முடித்து அடுப்பில் முட்டையை அவிய வைத்து விட்டு நிமிர்ந்தாள். போட்டு வைத்திருந்த தேநீரை எடுத்து குடித்து விட்டு குளிப்பதற்காக சென்றாள். குளியறையில் கடைக்குட்டி, கிணற்றடியில் அவள் கணவன்... இரு இடமும் காலியாக இல்லை.

மூன்றாமவள் பாடசாலைக்கு ஆயத்தமாகி சீருடையுடன் வந்தவள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சாப்பாட்டு பெட்டிகளில் வேண்டியபடி உணவை எடுத்து வைத்தாள். குளியறையிலிருந்து வந்த கடைக்குட்டி விசுக்கென்று சமையறையில் புகுந்தான். பாத்திரக்கடையில் யானை புகுந்தது போல சிறிது நேரம் இருவரும் ஒரே அமர்களப்பட்டார்கள். அம்மா வந்து தான் சமாதானமாக்க வேண்டியிருந்தது. கடைக்குட்டிக்கு இடியப்பம் வேணுமாம். அக்கா சோறு எடுத்து வைத்து விட்டாள். இதுதான் பிரச்சனைக்கு காரணம். எடுத்ததெற்கெல்லாம் இப்படிதான் சண்டை போடுவான் கடைக்குட்டி. கடைக்குட்டிக்கு போத்தல்களில் தண்ணி நிரப்பும் வேலை. இன்று அது சரிவராது போல் தோன்றியது. குளிக்கும் முன்பாக லாவண்யாதான் இந்த வேலையை செய்தாக வேண்டும் என்று எண்ணியவாறு போத்தல்களில் தண்ணீரை நிரப்பி வைத்தாள் லாவண்யா.

அப்பாவுடன் மூன்றாமவளும், அம்மாவுடன் கடைக்குட்டியும் பாடசாலை செல்வது வழக்கம். இப்போதுள்ள பெற்றோல் பிரச்சனையால் அவள் துவிச்சக்கர வண்டியிலும் இரு பிள்ளைகளும் அப்பாவுடன் செல்வது வழக்கம். இன்று கடைக்குட்டியை அவள் தான் துவிச்சக்கர வண்டியில் ஏற்ற வேண்டி ஏற்பட்டு விட்டது. ஆனால் கடைக்குட்டி எதனையும் சாதிக்க மாட்டான். உடனே மறந்து போய் சாதாரணமாக கதைப்பான். ஆனால் இன்று இந்த நிலை நீடித்து விட்டது. வீட்டிலிருந்து பாடசாலைக்கு 05km தூரம் போக வேண்டும். திரும்ப வரும் போது இரவு நேரச்சாப்பாடு சில வேளை கடையில் கட்டி வருவது அவளது வழக்கம். போகும் போது கடைக்குட்டி மூஞ்சியை உர் என்று வைத்துக் கொண்டே வந்தான். திரும்பி வரும் போது அப்பாவுடன் வருவதாகக் கூறிக் கொண்டு ஈ என்று பல்லைக் காட்டி விட்டுச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் வேலையால் வரும் போது தோசை வாங்கி வந்தாள். ஒருவரும் அதனை திரும்பி கூடப் பார்க்கவில்லை. அவ்வளவும் எடுத்து எறிய வேண்டி வந்தது. ஒரே புளிப்பாக இருந்ததாம் என்று எவரும் தேடவில்லை தோசையை அன்று வேறு சாப்பாடு செய்து கொடுக்க வேண்டி வந்தது. அதன் பின் கடைச்சாப்பாடு வாங்குவதே இல்லை. லாவண்யா வேலைக்கு சென்று தான் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று இல்லை. ஆசை யாரைத்தான் விட்டது. உத்தியோகம் புருஷலட்சணம் என்பது போய் படித்து விட்டு பெண்கள் கௌரவத்திற்காக, திருமணத்திற்காக வேலைக்கு செல்ல வேண்டியுள்ளதே நமது சமூகத்தில் உள்ள நிலைமை.

லாவண்யா விஞ்ஞான பாட ஆசிரியை. சில சமயங்களில் கணிதம், ஆங்கிலம், சுகாதாரம் போன்ற பாடங்களும் கற்பிப்பாள். வேலை கிடைத்து இரண்டு வருடங்களுக்கு பின் ஆசிரிய கலாசாலைக்கு சென்று வந்தாள். அதன் பின் எல்லா மாணவர்களாலும் விரும்பிய ஆசிரியையாக மாறியமையால் வேலையை விட முடியவில்லை. அப்படியும் சில சமயங்களில் அவளின் பொறுமையை சோதிப்பது போல் பல விடயங்கள் நடைபெற்று குழப்பி விடும். அன்றும் கடைக்குட்டிக்கும் லாவண்யாவுக்கும் சிறிய வாக்குவாதம். எல்லாவற்றிற்கும் அம்மா தன்னைக் கண்டிக்கிறாவாம். பெரியவையள் மூவருக்கும் செல்லம் குடுக்கிறாவாம். தன்னைக் கவனிப்பது இல்லையாம். தன்னை மதிக்கிறதில்லையாம். பெரிய பிரச்சனையாகி விட்டது. கடைசியாக லாவண்யா கோபத்துடன் அந்த இடத்தை விட்டு போய்விட்டாள். அதன் பின் விடியும் வரை இருவரும் எதுவும் பேசவில்லை. இடையிடையே இப்படி நடப்பது தான். ஆனால் இம்முறை இரண்டு நாள் வரை நீடித்தது. வரவர கடைக்குட்டி குடும்பத்தை விட்டு விலகிப் போவதாக நினைத்தாள்.

லாவண்யா கடைக்குட்டியுடன் தான் தினமும் படுப்பாள். இப்போது அவன் அவளருகில் படுப்பது இல்லை. இருவருக்கும் பிரச்சனை ஏற்படும் போது அப்பாவும் கடைக்குட்டியுடன் சேர்ந்து விடுவார். இதனால் அவளுக்கு கணவனையும் சில சமயங்களில் பிடிக்காமல் போய்விடும். இதனால் கணவனின் அன்பும் அவளுக்கு கிடைக்காதது போல் ஒரே ஏக்கம். எதையும் முடிவு எடுக்க முடியாதபடி எதையும் சரியாக செய்யமுடியாதபடி எதைப்பார்த்தாலும் எரிச்சல் எரிச்சலாக வந்தது.

லாவண்யாவுக்கு 40 வயதின் பின்வரும் பிரச்சனை. கடைக்குட்டிக்கு பதின்மபருவ பிரச்சனை. இருவரும் தமது பிரச்சனைகளை பெரிதாக நினைத்து மற்றவர்கள் மேல் சாடுவதும் சிறிய பிரச்சனையை பெரிதாக்குவதும் எங்கே போய் முடியுமோ இந்த நிலைமை. எத்தனையோ மாணவர்க்கு பதின்மபருவ மாற்றங்கள் பற்றியும் அதில் ஏற்படும் பிரச்சனைகள் பற்றி விளக்கிய ஆசிரியைக்கு தனது வாழ்வில் பிரயோகிக்க முடியவில்லை. லாவண்யா அவனருகில் சென்று தலையை தடவி மடியில் அரவணைத்து ஏதும் கூறத் தொடங்கும் போது போதும்.... போதும் என்று எழுந்து சென்று விடுவான் கடைக்குட்டி. மற்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவருக்கும் இது பெரிய பிரச்சனையாக தெரியவில்லையோ.... தோன்றவில்லையோ என்று எண்ணத் தோன்றும். அவரவருக்கு அவரவர் வேலை. ஒருவரை ஒருவர் கவனிக்க நேரமே இல்லை. இதற்காகத்தான் ஒருநேரம் என்றாலும் அனைவரும் சேர்ந்து ஒன்றாக இருந்து சாப்பிட வேண்டும் என்று ஒரு சுகாதார வைத்திய அதிகாரி கூறினார் போலும். எப்படி என்றாலும் அவரவர் துறைகளில் பயிற்சி பெற்றவர்களிடம் இது பற்றிய தெளிவு இருக்கும் போலும் என எண்ணியவள் அவர்களின் பிரிவு குடும்பநல உத்தியோகத்தர் உடன் கதைப்போம் என்று முடிவு எடுத்தாள். வேலை வேலை என்று பறந்து கடைக்குட்டியை கவனிக்கவில்லையா? அல்லது இனிமேல் என்னால் இவ்வளவுதான் முடியுமா... இனி யாரையும் தங்கித்தான் வாழ வேண்டுமா... போக போக இன்னும் எவ்வாறு பிரச்சனைகளை சமாளிக்க முடியும்... சரி எதற்கும் குடும்பநல உத்தியோகத்தர் சந்திப்பதுதான் சரியான முடிவு.

மறுநாள் சனிக்கிழமை. லாவண்யா வேலைக்கு செல்லவில்லை. பாடசாலை விடுமுறை. அப்பாடா என்று சிறிது நேரம் கூடுதலாக படுத்திருந்து விட்டு எழுந்தாள். சற்று நிம்மதி போல இருந்தது. காலையுணவு செய்வதற்கு முன் உடுப்புக்களை ஊற வைப்பதற்காக குளியலறைக்கு எடுத்துச் சென்று தண்ணீரில் போட்டு விட்டு திரும்பிய போது வெளியே யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. கண்மணி மிஸ் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்து கொண்டிருந்தாள். என்ன.. இவவுக்கு மூக்கிலே வேர்த்ததா... நேற்றுதானே இவருடன் கதைக்க வேண்டும் என்று நினைத்தாள்... என்றபடி வாங்கோ வாங்கோ என்று வரவேற்றாள். என்ன லாவண்யா நல்ல சந்தோசமாக இருக்கிற மாதிரி இருக்கு என்று கேட்டபடி கண்மணி வந்து அமர்ந்தாள். இல்லை மிஸ் நான் உங்களை ஒருமுறை சந்திக்க வேணும் என்று நினைத்துக் கொண்டிருக்கிற சமயம் நீங்கள் வரும் போது சரியான சந்தோசமாக இருந்தது. அதோட இன்று வேலையும் இல்லைதானே... என இழுத்தாள் வழமையான சுகநல விசாரிப்புகள் முடிந்தவுடன் கண்மணி ஏன் வந்தவ என்ற விடயத்தை லாவண்யாவுக்கு கூறினாள்.

லாவாண்யா நீங்க ஒருமுறை எங்கடை தொற்றாநோய் சிகிச்சா நிலையத்திற்கு வரவேணும்.. அங்கே சில சோதனைகள்... அதாவது சலரோகம், உயர்குருதிஅமுக்கம், நிறை உயரம் பார்த்து உடற்துணிவுச்சுட்டி, மார்புப்பரிசோதனை, கருப்பைக்கழுத்துயர் சோதன என்பன செய்து ஏதாவது பிரச்சினை கண்டுபிடிக்கப்பட்டால் சிகிச்சை பெறவேணும். உங்களுக்கு நேரம் இருக்கும்தானே... நேரம் இல்லை என்றாலும் விடுப்பு எடுத்து இந்த சிகிச்சை நிலையத்திற்கு வரவேணும் என்று அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினாள்.

ஓம் மிஸ் நான் வாறன். அதோடை உள்களோடை கொஞ்சம் கதைக்கவும் வேணும்... என்றவாறு எழுந்து சென்றாள். கையில் தேநீருடன் மறு கையில் ஒரு தட்டுமாக வந்தவளை எதிரே வந்த கடைக்குட்டி முட்டி மோத தேநீர் ஒருபுறமும் தட்டு ஒருபுறமாக சிதறிவிழ..... தாயும் மகனும் போட்ட சத்தத்தில் அங்குள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை பற்றி விளங்கிக் கொண்டாள் கண்மணி. இவர்கள் இருவரும் என்ன எதிரிகளை ஒருவர்க்கு ஒருவர் விட்டுக்குடுக்கிறார்களே இல்லை என்று வியந்து போனாள் கண்மணி. அவள் தான் இடையே புகுந்து அவர்களை அமைதிப்படுத்த வேண்டிருந்தது. லாவண்யா சமாதானம் அடைவதாகவே இல்லை. கடைக்குட்டியும் உள்ளே ஏதோ கரகரப்பது தெளிவாக கண்மணிக்கு கேட்டது எது என்றாலும் லாவண்யாவின் வாயாலேயே அறிவதற்காக அவளை சமாதானப்படுத்தினாள் கண்மணி சிறிது நேரம் வாய்விட்டு அழுத பின்னரே லாவண்யா அமைதியடைந்தாள்.

எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் கண்மணியிடம் கூறினாள் லாவண்யா, மகனின் வித்தியாசமான போக்கு, கணவனின் பாராமுகம், வேலைப்பளு... என்று எல்லாவற்றையும் கொட்டித்தீர்த்தாள். அப்போது தான் கண்மணிக்கு விளங்கியது. குடும்பநல உத்தியோகத்தர் என்று அவர்களுக்கு பெயரிட்டமைக்கான காரணம். வருடம் ஒருமுறையாவது தகுதி வாய்ந்த பதிவில் உள்ள பெண்களை சந்திக்க வேண்டும். அவர்களுடன் சிறிது நேரம் என்றாலும் கதைக்க வேண்டும். லாவண்யாவின் நிலைப்பாட்டினால் அவளது குடும்பம், பதின்பருவத்தில் உள்ள கடைக்குட்டி, அவளது கணவன் என பலபேர் பாதிப்படைவதால் குடும்பமே சீரழிந்து போகும் நிலை ஏற்படும். நல்லகாலம் இப்போதாவது கண்டுபிடித்துவிட்டதை எண்ணி மகிழ்வடைந்தாள் கண்மணி. இன்னமும் சற்று நேரம் இருந்து லாவண்யாவுடன் கதைத்து விட்டு லாவண்யாவுக்கும், கடைக்குட்டிக்கும் சிகிச்சாநிலையம் வருவதற்கு திகதியை குறித்து கொடுத்து விட்டு புறப்பட்டாள்.

லாவண்யாவுக்கு கடைக்குட்டிமேல் கோபம் கோபமாக வந்தது. ஆனாலும் கண்மணி கூறிய விடயங்கள் சற்று ஆறுதலை தந்தது. எவருடனும் ஏதும் பேசாது சென்று படுத்துவிட்டாள். அப்போது அம்மா... அம்மா... என்று அழைத்தபடி வந்த கடைக்குட்டியை பார்க்காது நித்திரைபோல் படுத்துவிட்டாள். தனது பதின் பருவ வாழ்க்கையை மீட்டிப்பார்க்கிறாள். லாவண்யாவும் இப்படித்தான் சற்று பிடிவாதக் குணமுடையவள் என்று அவளின் அப்பா எப்போதும் கூறுவார். ஆனால் அவளுக்கு அப்பாவின் ஆதரவு எப்போதும் உண்டு. என்னவிடயம் என்றாலும் அம்மாவை விட அப்பாவுடன் கலந்து கதைப்பாள் கண்மணி கூறியதை போல் இப்போதைய காலம் முன்பு போல் இல்லை. இப்போது பிள்ளைகளும் வித்தியாசமான சிந்தனையுடையவர்களாக உள்ளனர். அப்போது பல பற்றாக்குறைகள். தொலைபேசி, தொலைக்காட்சி, இணையவசதி எதுவுமே இல்லை. இப்போதைய காலம் தேடலுக்கு விடைகள் உடனுக்குடன் கிடைத்துவிடும் என்று பலவாறாக எண்ணியபடி உறங்கிவிட்டாள்.

திடுக்குற்று கண்விழித்தவள்.... பி. ப 12.00 மணியாகிவிட்டதை பார்த்து ஐயையோ இன்னமும் சமைக்கவில்லையே என்றபடி குளியலறையை நோக்கி வேக வேகமாகச் சென்று முகம் கை கால் கழுவி விட்டு சமையலறைக்குள் சென்றவள் நிம்மதி பெருமூச்சென்றை விட்டாள். மதிய உணவு தயாராகி இருந்தது. சமையலறை துடைத்து சுத்தமாக இருந்தது. வெளியே வந்த போது கணவனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்குட்டியும் மூன்றாவது மகளும் வரவேற்பறையில் இருந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தனர். மூவரும் கடைக்கண்ணால் லாவண்யாவை பார்த்து சிரிப்பது விளங்கியது. சரி..... சரி எல்லோரும் சாப்பிட வாங்கோ என்றபடி உணவை எடுத்து சாப்பாட்டு மேசையில் வைத்தாள்.

அன்று வேலைக்கு விடுப்பு அறிவித்துவிட்டு கடைக்குட்டியுடன் சிகிச்சாநிலையத்திற்கு சென்றாள். அங்கு சென்றவுடன் அவர்களை வரவேற்று செய்யவேண்டிய பரிசோதனைகள் அனைத்தையும் செய்தாள் கண்மணி பின்னர் இருவரையும் தனித்தனியே கதைத்த பின் சுகாதார வைத்திய அதிகாரியிடம் அனுப்பி வைத்தாள். முதலாவது சனி, மூன்றாவது சனி ஆகிய இருதினங்களிலும் சுகவனிதையர். பதின்பருவத்தினர் சிகிச்சாநிலையம் வழமைபோல் நடைபெறும். ஆனால் இது மூன்றாவது சனி அரச விடுமுறை என்பதால் மூன்றாவது வெள்ளி நடைபெறுகிறது. வேலைக்குச் செல்லும், பாடசாலை செல்லும் மாணவர்களுக்காக சனிக்கிழமையில் நடாத்தப்பட வேண்டும் என்பது சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல். சுகாதார வைத்திய அதிகாரியுடன் கதைத்துவிட்டு வந்த கடைக்குட்டியின் முகத்தில் பெரும் மாற்றம் காணப்பட்டது என்பதனை விட தெளிவு தெரிந்தது என்றுதான் கூறவேண்டும். வெளியே வந்த கடைக்குட்டி அங்கு குட்டி நூலகம் போல காணப்பட்ட பகுதிக்குச் சென்றான். லாவண்யாவும் வைத்தியரிடம் சென்று கதைத்து விட்டு திரும்ப வந்து நூலகத்திற்குள் சென்றாள். அங்கு சிறிது நேரம் உளவளத்துணை சம்பந்தமாக "வைத்திய கலாநிதி சிவதாசன்" எழுதிய புத்தகத்தை படித்துக் கொண்டிருந்து விட்டு கடைக்குட்டி எழுந்து வருவதைப் பார்த்து தானும் எழுந்தாள். இந்தப் புத்தகத்தை வாசித்து விட்டு தருகிறேன் மிஸ் என்று கண்மனியிடம் கூறினாள்.

அந்தப்புத்தகத்தை வாங்கிப்பார்த்த கண்மணி கொப்பி ஒன்றில் அதனைப் பதிந்து விட்டு லாவண்யாவிடம் கொடுத்தாள். உங்களுக்கு செய்த கருப்பைக்கழுத்து பரிசோதனையின் முடிவு ஒரு மாதத்தில் கிடைத்து விடும் நான் உங்களுக்கு அறியத்தருகிறேன் என்று கூறினாள். இருவரும் முழுமையான மகிழ்வுடன் அவளிடமிருந்து விடைபெற்றுச் சென்றனர். வீடுநோக்கி கடைக்குட்டி முன்பு இருந்தது போல் அம்மாவுடன் கதைத்தபடி அவளின் கைகளை ஆதரவாக பற்றியபடி சென்றான்.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகப்படுத்தல் (Rememperering)



Dr.S.Banumeera
**ஆயுர்வேத வைத்தியசாலை,**
**புலோப்பளை.**

இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் சவால் கற்றவற்றை ஞாகத்தில் வைத்திருத்தலாகும். ஞாபகப்படுத்தலுக்கு தடையாக இருக்கும் காரணிகளாக இனம் காணப்பட்டுள்ளவை பின்வருமாறு.

1. அதிகரித்த தனியார் வகுப்புகள்
2. கற்றவற்றை மீட்டிப்பார்க்க நேரமின்மை
   ஆடம்பரத்தின்பால் ஈர்க்கப்படல் கட்டிளமைப் பருவ உடல் உளமாற்றத்தால் ஏற்படும்.
3. வலைத்தள பாவனை, சிமாட்போன், வலைத்தள விளையாட்டுக்கள்.
4. பெற்றோர் ஆசிரியர்களின் விட்டுக்கொடுப்புகள்.
5. பாடசாலை இணைப்பாட விதான செயற்பாடுகள் மாணவர்களது ஞாபகப்படுத்தல் செயற்பாட்டை மந்தமடையச் செய்கின்றன. ஞாபகப்படுத்தல், மீட்டறிதல் (recall) இனங்காணல் (recognition) என இரண்டு முறைகளில் நிகழும். மீட்டறிதல் என்பது குறித்த விடயம் கண்முன்னால் இல்லாத போதும் அதனைச் சிந்தனையில் வரவழைத்தல் ஆகும்.

இனங்காணல் என்பது முன்னால் இருக்கும் பொருளை அல்லது விடயத்தை இதற்கு முன்பு அறிந்ததென்று உணர்தல் ஆகும்.

இனங்காணலை விட மீட்டறிதல் சிக்கலான செயலாகும். ஒருவர் உண்மையில் கற்ற விடயங்களிற்கும் அவர் மீட்டறியும் விடயங்களிற்கும் இடையில் சிறிதளவு வேறுபாடு காணப்படும். (Walf) என்பவர் இம்மாற்றங்கள் குறிப்பாக 3 வகைகளில் ஏற்படுவதாகக் கூறுகின்றார்.

1) நிரவுதல் (Levelling)

மீட்டறியப்படும் போது ஒழுங்கற்ற நிகழ்ச்சிகள் ஒழுங்கான அல்லது சீரான அமைப்பைப் பெறுகின்றன. இங்கு ஒரு நிகழ்ச்சியில் முக்கியமற்ற விடயங்கள் மறக்கப்படுகின்றன.

2) கூறாக்கல் (Sharping)

இங்கு சில விடயங்களில் ஒழுங்கற்ற தன்மைகள் கூடிய காலம் நிலைக்கின்றன. மீட்டறிதலில் அலையே முதலிடம் பெறுகின்றன. இது மட்டமாக்கலுக்கு எதிரானது.

3) நியமமாக்கல் அல்லது தன்மயமாக்கல் (Normalising or Assmilation) ஒரு பொருள் பழக்கமான இன்னொரு பொருள் போன்று தோற்றமளித்தால் அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பழக்கமான பொருள் போல மீட்டறிதலே நியமப்படுத்தலாகும்.

ஞாபகப் பயிற்சி

ஞாபகத்தை வளர்ப்பதற்கும் கற்க வேண்டியதை மனதில் நிலை நிறுத்துவதற்குமான சில வழிகள்.

1. கற்பதற்கு ஒரு நோக்கம் இருத்தல் வேண்டும். நோக்கம் இன்றி கற்பன எவையும் நிலைநிற்கமாட்டா.

2. எமது உருவவெளிப்பாட்டுத் திறனை (imaginary) நாம் கூடிய வகையில் பயன்படுத்த வேண்டும். ஒரு விடயத்தை ஞாபகப்படுத்த வேண்டுமெனில் அதன் நிழற்படத்தை உள்ளத்தில் பதித்தல் வேண்டும். கற்றவற்றை எமது அனுபவத்துடன் இணைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

எவ்வளவுக்கு அதிக தொடர்புகள் ஏற்படுத்தி வைத்துக்கொள்கிறோமோ அவ்வளவுக்கு ஞாபகசக்தி அதிகமாக வளர்ச்சியடையும்.

3. எதுகைமோனை போன்ற சந்த அமைப்பு (rhythm) நிலை நிறுத்தலுக்கு அதிகம் உதவும். பாடல்கள் பெருக்கல் வாய்ப்பாடுகள். இவ்வகையான அமைப்பு உள்ளவையாகும்.

4. பரீட்சைக்கு சொற்ப நாட்களின் முன்பு ஓய்வின்றி கற்றல் பரீட்சைக்கு மாத்திரம்தான் பயன்படும். நீண்ட காலம் வரை ஞாபகத்தில் இருக்க நீண்ட கால இடைவெளிவிட்டு படித்தல் நன்று.

5. முடிந்தவரை கற்றவற்றை மீட்டு கூறிப்பதார்த்தல் வேண்டும். அல்லது இன்னொருவருக்கு கூறவேண்டும்.

6. ஒரு விடயத்தை கற்றபின், ஓய்வெடுத்தல் அல்லது நித்திரை செய்தல் நல்லது தொடர்ச்சியாக கற்றல் கூடாது.

ஒரு விடயத்தை கற்றபின் ஓய்வெடுக்கும் போது பிறவிடயங்களை கற்றல் கூடாது.

7. அளவுக்கு மிஞ்சி கற்றலும் (Over learning) ஞாபகத்தை அதிகரிக்கும் மாணவர் ஒரு விடயத்தை புரிந்து கொண்ட பின்பும் அதை தொடர்ந்து கற்றல் ஞாபகத்தை அதிகரிக்கும்.

8. ஒரே அமைப்புடைய விடயங்களை ஒன்றன்பின் ஒன்றாக கற்பது நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீதி விபத்துக்களும் அண்மைக்கால போக்குகளும்

முருகானந்தம் கீர்த்திகா
மாசார், பளை.

தரைவழிப் போக்குவரத்தில் தரைப்போக்குவரத்துக்காக அமைக்கப்பட்ட சாலைகளில் நடக்கக் கூடிய விபத்து சாலைவிபத்து/ வீதிவிபத்து எனப்படுகிறது. சாலையில் செல்லும் வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதியோ or சாலையில் ஓரங்களிலுள்ள மரம் கட்டடங்களால் மோதியோ பெரும்பான்மையின் சாலை விபத்துக்கள் நடக்கின்றன.

விபத்தின் காரணங்களாக:

- ♦ வாகனத்தின் வடிவமைப்பு
- ♦ வாகனம் பொருத்தப்பட்ட வேகம்
- ♦ சாலையின் தரம்
- ♦ சாலையின் வடிவமைப்பு
- ♦ சுற்றுப்புறச் சூழ்நிலை
- ♦ வாகன பெட்டியின் கட்டுதல் திறன் மற்றும் வாகனஓட்டியின் நடவடிக்கை.

விபத்தை தடுக்கும் முகமாக வேகக் கட்டுப்பாடு போன்ற பல்வேறு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றை மீளுவது தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படுகிறது. உலகிலேயே சாலை விபத்துகள் அதிகம் இடம்பெறும் நாடு - இந்தியா

♦ பலியாகிறவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள்

குடும்ப வருவாய்க்கு ஆதாரமாக இருப்பவர்கள். அவர்களது அகவை மரணத்தால் அவர்களின் குடும்பங்களிற்கு மட்டுமல்லாமல் நாடே தனது உற்பத்தி சக்தியை சமுதாய வளர்ச்சியால் அவர்களது பங்களிப்பை இழக்கிறது. சாலை விபத்துக்களால் உடல் உறுப்புகள் துண்டிக்கப்பட்டு அல்லது முன்போல நடமாட இயலாதவர்களாக முடக்கப்படுகின்றவர்கள். அவர்கள் ஆற்றமுடியாத மன உளைச்சல்களுக்கும் உள்ளாகின்றனர்.

♦ பல விபத்துகள் முறையாகப் பதிவு செய்யப்படுவதில்லை

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு ஓரிரு வாரங்களுக்கு பிறகு மரணம் நிகழும் என்றால் அவ்விபத்து மரணமாக குறிக்கப்படுவதில்லை.

- ♦ ஊழல் கலவையால் கட்டப்படும் சாலைகளின் பாதுகாப்பற்ற நிலைமை
- ♦ உரிமம் வழங்குவதில் முறைகேடு
- ♦ சாலை விதிகளைச் செயற்படுத்துவதில் உறுதியின்மை

உள்ளிட்ட பல காரணங்கள் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபத்துக்களை குறைப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகளில் ஆஸ்திரேலியா ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகிறது. உருவாக்கும் விதிகளை நேர்மையாக செயற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளால் விபத்துகளை பெறுமளவில் குறைக்க முடியும். அனைத்துக்கும் மேலாக பொதுப்போக்குவரத்தை ஊக்குவித்தல் வலுப்படுத்தல் போன்ற அணுகுமுறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அத்தகைய கொள்கை முடிவுகளை எடுக்க வைப்பதற்கான குரல் காதில் ஒலிக்க வேண்டும்.

"வெளியில் சென்றால் வீட்டிற்கு திரும்புவது நிச்சயமில்லாததாகி விட்டது" என்று சொல்லுமளவிற்கு இன்றுசாலை விபத்துக்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. மக்களின் அன்றாடத் தேவைகளில் வாகனமும் ஒன்றாகிவிட்டது. அரசும் அதிகாரிகளும் சாலை விபத்துக்களை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைளை மேற்கொண்டாலும் அது சம்பந்தமான பிரசுரங்களை விநியோகித்தாலும் சாலை விபத்துக்களை கட்டுப்படுத்த முடியாவில்லை. சாலை விபத்துக்களுக்கான காரணங்களை கண்டறிந்து தீர்வுகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் எவ்வளவு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் சாலை விபத்துக்களை தடுக்க முடியாது.

புள்ளிவிபரம்

2020ஆம் ஆண்டில் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மக்களின் இறப்பிற்கு 4வது காரணியாகவும் சுகாதாரக் குறைவிற்கு 3வது காரணியாக சாலை விபத்துக்களே அமையும் என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்தது.


பல்வேறு தொற்றுநோய் மற்றும் மற்ற நோய்ப்பாதிப்புகளில் இறப்பவர்களைவிட சாலைவிபத்துக்களில் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என எச்சரிக்கிறது இன்னொரு அதிர்ச்சி தகவல்

காரணங்கள்

♦ **தரமற்ற சாலைகள்** - குன்றும் குழியுமாக சேறும் சகதியுமாக வாகனஓட்டிகளுக்கு மரணக்குழிகளாக காட்சி அளிக்கின்றன.மக்களின் வாக்குகளிலும் வரிப்பணங்களிலும் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களும் அமைச்சர்களும் அதிகாரிகளுமே இதற்கான மூலகாரணமாகும். அரசாங்கம் அற்பசாலைக்கென்று ஒதுக்குகின்ற அற்பணங்களை ஊழல் செய்து தரமற்ற சாலைகளை போட்டு குடிமக்களின் உயிர்களை பறித்துவிடுகின்றனர். ஆட்சியாளர்களின் மெத்தெனப் போக்கும் கொடு போக்குதனமும் குடிமக்களை குறித்து எந்தவிதமான கவலையும் கொள்ளாததுமே விபத்துக்களுக்கு காரணமாக அமைந்துவிடுகின்றன.

♦ **மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவது** - உலகத்தில் 44-67% வரையிலான சாலை விபத்து இறப்புகளுக்கு குடிபோதையில் வாகனம் ஓட்டுவதே முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விது பல்பொருள் வாணிபம்



TP : 077 9526 066/ 077 9408 899 ஏ9 வீதி, பளைநகரம், பளை.

விது அரைக்கும் ஆலை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணேசா பல்பொருள் வாணிபம்



புதிய சந்தை உட்புறம், பளைநகரம், பளை. T.P: 077 0136 794

# H.P.Express

WORLD WIDE CARGO SERVICE



Railway Station Road, Pallai. TP: +94212284005/ +94762281759

உள்ளூர் மற்றும் அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணம் என்ற அதிர்ச்சி தகவலை உலக சுகாதார நிறுவனம் ஓர் ஆய்வில் தெரிவித்திருக்கிறது. அரசே முன்னின்று மதுகடைகளை திறந்து விட்டிருக்கிறது. அரசுக்கு வருடந்தோறும் பண்டிகை காலங்களிலும் ஏனைய நாட்களிலும் இதன் மூலம் கோடிகணக்கான வருமானம் கிடைக்கிறது. அரசே இதை ஒழித்தல் தான் இது போன்ற சட்டங்களை கொண்டுவந்தால் மதுவினால் ஏற்படும் விபத்துக்களை தடுக்கமுடியும்.

♦ கட்டுப்பாடில்லாத அசுரவேகம்

♦ போட்டி மனப்பான்மை

♦ ஆணவம் - பொறாமையான நல்ல சாதுவான மனிதர்கள் கூட வாகனங்கள் ஓட்டும்போது தங்கள் இயல்பிற்கு மாற்றமாக நடந்துகொள்கிறார்கள் என சர்வதேச ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

♦ கைப்பேசி - மக்களின் அத்தியாவசிய தேவைகளில் முதலிடம் வகிப்பது கைப்பேசிதான் மக்களின் மூன்றாவது கரம் என்று சொல்லுமளவிற்கு செல்போன் பயன்பாடு அதிகரித்திருக்கிறது. செல்போன்களில் கதைத்து வீதி கடக்கும் போது/ ரயில்கடவை கடக்கும் போது காலை விபத்துகள் நடக்கின்றன. இதற்கு இன்னொரு காரணம் கவனமின்மை. கடந்த ஆண்டின் கணக்கின்படி சாலைவிபத்துகளில் அதிகம் பலியானவர்கள் இளைஞர்களே என்பது வேதனைக்குரிய விடயமாக இருக்கின்றது. 15-29 வயதிற்கு இடைப்பட்டோர் அகாலமரணத்திற்கு முழுமுதற்காரணமே சாலைவிபத்துக்கள் தான் என எச்சரிக்கிறது உலகசுகாதார நிறுவனம். வாகனங்களில் அதிகம் சப்தம் எழுப்பிக் கொள்ளும் மற்ற வாகன ஓட்டிகளை அச்சுறுத்தும் வண்ணமும் வாகனம் ஓட்டுவது இன்று பிரபல்யமாக பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாழ்வு எப்ப வரும்



இ.தியாகராசா,
சின்னத்தாளையடி.

பணம் பழம் எடுத்து பக்குவமாய் தான் பிசைந்து உயரப் பந்தல் போட்டு அதன் மேல் பனை ஓலை தடுக்கு பாய் போட்டு பிசைந்த பனம் களிதனை அதன் மேல் பரவி சூரிய வெயிலில் காய வைப்பர். காய்ந்தவுடன் அதை உரித்து துண்டு துண்டாய் வெட்டி மடித்து பனை ஓலை ஊமல் குண்டானில் போட்டு அடுப்படி பரண் தனில் பக்குவமாய் தான் வைப்பார். மாரி அடை மழை வந்தால் மறக்காமல் தான் எடுப்பார். எடுத்த பனாட்டுடன் தேங்காய் சொட்டும் வடித்த கஞ்சியும் குடித்து ருசித்திடுவார். பாத்தி ஒன்றை தான் கொத்தி பொறுக்கிய பனம் கொட்டைதனை அதன் மேல் போட்டு செப்பன் இடுவர். பின்பு பனம் கிழங்கு பிடுங்கி புழுக்கொடியல் என்றும் பச்சை ஒடியல் என்றும் பதனிட்டு தான் வைப்பார். தினமும் ஒடியல் பிட்டும் தின்று சுவைத்த இவ்வாழ்வு எப்பவரும்.

அது மட்டுமல்ல அம்மன் கோயில் பூசை என்றால் அடை மழை என்றாலும் அப்பு ஓலைக் குடையுடன் புறப்பட்டு போய் பச்சிலைப் பள்ளியில் பற்றைக் காட்டுடன் ஒரு பகுதி சின்னத் தாளையடி. தாளை பல நின்று தலையசைத்து வரவேற்கும் குட்டி கிராமமது. ஓலைக் குடிசையிலே வாழ்ந்து வந்த அப்புவும் ஆச்சியும் வாழ்ந்த இவ்வாழ்வு எப்பவரும். வயலில் நெல் விதைத்து ஏர் பூட்டி வயல் உழுது பயிர் செய்து பின்பு அறுவடை தான் செய்வார். உப்பட்டி தான் கூட்டி சூடு வைத்து பின்பு களம் ஒன்றை அதில் போட்டு களக்கட்டை ஒன்றை அதில் நட்டு காவல் கொடியால் களத்தை காவல் செய்து சூட்டைப் பிரித்து உப்பட்டியை அதில் போட்டு நடையன் எனும் மாடுகளை களக்கட்டையில் தொடுத்து நடையன் வளைந்து வர நடையன் போல் போட்டால் தட்டுவத்தில் ஏந்தி அதை தான் எடுப்பர்.

பாடல்கள் பல பாடி பக்குவமாய் தான் நடப்பார். அப்படியே நடந்து வர கூரன் தான் விழுந்து விடும். அதில் இருக்கும் பொலிக் கொடியை வேலைக்காரன் கம்பால் தான் எடுப்பார். எடுத்த பொலிக் கொடியை மழை தண்ணீர் போகாமல் மாட்டுக்கு உணவென்று போர் கூட்டி வைப்பார். கூரன் மணிகளை குல்லத்தில் அள்ளி அதை பெருவாயன் அதில் நிறைத்திடுவார். தெகிழம் கொடி நாரால் பொத்தியதை கட்டிடுவார். வண்டில் தனில் நெல்லை ஏற்றி எருத்தன் இரண்டை அதில் பூட்டி ஒய்யாரமாய் அதில் ஏறி எய் என்று ஒரு சொல்லு வண்டி அது தான் நகரும். வீடு வந்து சேர்ந்தவுடன் பெருவாயனில் உள்ள நெல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தைந்து மூடை போடும் ஓட்டறை கூடைதனில் பக்குவமாய் போட்டு வைப்பார். நித்தமும் எடுத்து நெல்லை மரக்குத்தியால் செய்யப்பட்ட உரல் தனிலே போட்டு பக்குவமாய் உலக்கையினால் குத்திடுவார். குத்திய நெல்லதனை பக்குவமாய் புடைத்து தீட்டி அரிசியை உலையில் இட்டு வேப்பம் விறகிலே அடுப்பதனை மூட்டிடுவார். வேகும் வரை பாத்திருந்து கஞ்சிதனை வடித்து எல்லோரும் குடித்திடுவார். அதன் பின்னர் பசியாற சோறு உண்பார். இவ்வாழ்வு எப்பவரும். அப்புவுடன் கூடி மண் வெட்டியுடன் சென்று கவலைக் கிழங்கும் அல்லைக் கிழங்கும் பிடுங்கி வந்து காலை உணவுக்கு என்றும் வைப்பார். கொக்கை சத்தக தடியுடனே சென்று முசுட்டை கொடி வலித்து அதில் இலை ஒடித்து கொண்டு வந்து அதை அரிந்து மரவள்ளி மாவுடன் குளைத்து அவித்து காலை உணவுண்ட இவ்வாழ்வு எப்பவரும்.

அப்பு பிஞ்சு விளாத்தி தடி வெட்டி வாட்டி செப்பனிட்டு கடலில் மீன் பிடிக்க கரப்பு பல செய்திடுவார். ஊரவரும் தானும் கூடி காய்ந்த தென்னை ஓலையிலே சூழ்கள் பல கட்டிடுவார். அந்தி சாயும் நேரம் அடுக்கெல்லாம் எடுத்திடுவார். பனை ஓலை பறியொன்றை இடுப்பதிலே கட்டிடுவார். சூள் அதனை தான் எடுத்து கமக்கட்டில் வைத்திடுவார். மீன் பிடிக்கும் கரப்பொன்றை கைதனிலே எடுத்திடுவார். கடல் நோக்கி புறப்பட்டு சிறு கடல் கரையை சென்றடைவர். சூள் தனிலே தீயை மூட்டி கடல் தனிலே மீன் பாப்பர். எறியால் மீன் என்றும் மண்ணா மீன் என்றும் பாலை மீன் என்றும் தான் பிடித்து பறிதனிலே போட்டிடுவார். பறியதுவும் நிறைந்தவுடன் வீடு வந்து சேர்ந்திடுவார். கொண்டு வந்த மீனதனை ஆச்சி அறுத்து கறி வைப்பார். அது வரைக்கும் பொறுத்திருந்து அப்புவும் உணவுண்பார். இவர்களுடன் நாசுவைக்க உணவுண்ட இவ்வாழ்வு எப்பவரும். ஒடியல் மாவென்றால் அப்புவுக்கு ஒரு கலைதான். பல மீன்களும் நண்டு இறால் என்று போட்டு ஒடியல் கூழ் வைத்து ஒரு சட்டி தான் குடிப்பார். தினமும் உடும்பு இறைச்சி ஒடியல் பிட்டும் தின்று சுவைத்த இவ்வாழ்வு எப்பவரும். கோயில் பூசை முடிந்தவுடன் முன் வரிசையில் தான் நின்று இரண்டு மோதகமும் பொங்கலும் சிறு கட்டியும் பாதி வடையுடனும் தான் வந்திடுவார். அதைப் பங்கிட்டு உண்ட இவ்வாழ்வு எப்பவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய மறுமலர்ச்சி



**நா.முருகையா,**
**எழுத்துத்துறை,**
**முகமாலை.**

பழங்காலம் முதலே மனிதனுக்குத் தன் வாழ்வில் ஒழுங்கு, அமைதி, நீதி, இன்பம், அன்பு ஆகியவை இருத்தல் வேண்டும். என்ற ஆர்வம் அவனை அறியாமலேயே அவனுள் ஏற்பட்டது. இந்த ஆர்வத்தின் தூண்டுதலே சமயமாக மலர்ந்தது.

சமயம் மனிதனின் உள்ளத்தை சமைத்துப் பக்குவப் படுத்துவது அவனுடைய வாழ்வில் நிகழும் ஆவேச உணர்வு, பரபரப்பு உணர்வு,பிறருக்கு துன்பம் இழைக்கும் தீய உணர்வு ஆகியவற்றை அடக்கி அவனை நல்வாழ்க்கைக்குப் பக்குவப்படுத்துவது சமயம். மற்றவர்களுக்கு பயன்படுமாறு வாழ்பவனே - பிறருக்கு தொல்லை கொடுக்காமல் வாழ்பவனே முதிர்ந்த சமய வாழ்வு உடையவனாவான்.

நாம் பிறருக்கு செய்யாதிருந்தால் பிறர் நமக்கு துன்பம் செய்யார்.அதுவே சமய வாழ்வின் அடிப்படை. உலகில் துன்பத்தை எதிர்த்து போரிட மனிதன் கண்ட நெறி சமய நெறி. சமய நெறியில் நின்று வாழ்வை ஒழுங்கு படுத்தி கொண்டால் துன்பம் வராது. நல்ல சமய வாழ்வு உள்ள நாட்டில் சட்டப் புத்தகங்களுக்கு வேலை இல்லை. வேத புத்தகங்கள் செல்வாக்கு இழந்த நாட்டில் வேந்தலும் கொடிய அரசியல் நடத்த வேண்டியிருக்கும். இப்பொழுது சமயம் சமுதாயத்தின் ஒரு பகுதியாகத்தான் கருதப்படுகிறது இந்நிலை மாற வேண்டும். முழுவதிலும் சமயம் ஊடுருவி நிற்றல் வேண்டும்.

நாம் புதுமையை விரும்புகின்றோம் பழமை தீயதன்று. இறைவனைப் "பழையோன்", "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருள்" என்கிறோம். பழைய அடிப்படையை மாற்றாமல் புதுமையை மேற்கொள்கிறோம். பழைய கோவிலைப் புதுப்பித்து குடநீராட்டு விழா செய்தல் போல சமய சமுதாயத்தையும் புதுப்பிக்கும் நல்ல தொண்டினை நாம் செய்தல் வேண்டும்.

கோவிலைத் தழுவிய குடும்பங்களும், குடும்பங்களை தழுவிய கோவிலும் அமைகிற சமுதாயத்தை உருவாக்குவதே நம் பணியின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றது தமிழ் பெற்றதும் தமிழே



ச.கஜானன்,
புலோப்பளை.

உயிராகி மெய்யாகி
உயிர்மெய்யாய்
ஆய்தமாய்
அயல்நாடு பரந்து
முழுநாடும் புகுந்து
அகிலமெல்லாம் புகழ் பூத்து
நிறைந்தவளே

வல்லினமாய் மெல்லினமாய்
இடையினமாய் உனை யாம்
மெய்யுணர்ந்து பாட நல்
வரமருள்வாய்

செங்கரும்பின் தீன் சுவையாம்
செந்தமிழாய் பைந்தமிழாய்
அறிவுதமிழ் அழகுதமிழ் பழகுதமிழ் -என
பலவாகி பலமாகி இதமாகி
பிற இனங்களெல்லாம்
வியந்து நிற்க நடை பயின்றாய்
யாப்பு சீர் தளை அடி தொடை – என
வேற்றுமொழி அறியாப் பகுப்புக்களும்
இலக்கியமாய் இலக்கணமாய்
ஈடு இணையில்லா ஆழத்தோடு
நீண்டு பரந்த கடலாய்
பிறமொழி மீண்டு உன்
வளம் கூட்ட ஆவல் கொண்டோம்

ஆற்றல் பல கொண்டாளே
அகநானூறாய் புறநானூறாய்
ஆற்றுப்படை இலக்கியமாய்
கலம்பகமாய் காப்பியமாய்
திருக்குறளாய்
குறுகி உரைத்தாலே
பொருள் பெருகி வழிபவளே

எதுகை மோனையினால்
அழகு கூட்டி
இரட்டைக்கிளவி அடுக்குத்தொடர்
அடுக்கிடுக்குத் தொடராய் - நீ
மிடுக்குடன் வலம் வருதல் கண்டு – நாம்
தமிழர் என்ற செருக்குடன்
நிமிர்வு பெற்றோம் - தமிழே
தாய் பிள்ளை உறவானவளே
கலங்காதே - இனி
வரும் காலமும் நின் காலமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜம்

ஞா.யசோதினி,
மாசார்.

கதையொன்று சொல்வேன் கதையல்ல நிஜம்தான்
கண்கள் குளமாகிக் கனக்கிறதே மனம்தான்
சீனாவின் அதிவேகம் தந்ததே மரணபயம்
கொத்தாகக் கொன்றது பிஞ்சுசுளும் கனிகளுமாய்!

தனிமை முகாம்கள் நீள்கிறது இன்னும்
தடைகளின்றி தொடர்கிறது பயணம்
விதிகளின்றி முடிகிறது வாழ்க்கை
மதிகள் கொண்டு வெல்வோம் சாவை!

புத்தகப் படிப்பை மறந்த தளிர்கள்
உத்வேகம் இன்றி சோர்ந்த உடல்கள்
இணையவழி தொடரும் கல்வி
எளியவர் மனங்களில் விதைக்கும் ரணங்களை!

முதியவர் போகின் விதியென்ன ஆகுமோ
மூத்தவர் இன்றிய வாழ்வது நிஜமோ?
கோவிட் நிழலொடு கூடிய வாழ்வை
வெல்வோம் தடுப்பால்! கதையல்ல இது நிஜம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாச்சார பண்பாடு கலைந்து விட்டது இன்று

நா.நகுலேஸ்வரன்,
முல்லையடி.

மும்மன்னர் முன்மொழிந்த முத்தமிழ் எங்கே?
வள்ளுவர் வழி காட்டிய வாழ்க்கைப் பதிவேடு எங்கே?
மெய்யுரைத்து மேன்மை பெற்ற அரிச்சந்திர மன்னன் எங்கே?

பாரதியார் பாடி வைத்த பக்கங்கள் எங்கே?
பட்டினத்தார் பாடிய மனித தோற்றம் மறைவு
என்னும் ஆக்கம் எங்கே?
தோன்றில் புகழுடன் தோன்றுக எனும் தொனிப்பொருள்
போற்றிய ஔவைப்பாட்டியின் முதுமொழி எங்கே?

அறம் எங்கே? நெறியெங்கே?
இலக்கணம் எங்கே? இலக்கியம் எங்கே?
பாரம்பரிய கலை எங்கே?
பண்பாட்டு கலாச்சாரம் எங்கே?

மரபு வழியெங்கே? மாண்டு போன இடம் தான் எங்கே?
தமிழர்களின் பண்பாடு எங்கே?
பண்புகள் பாழடைந்த இடம்தான் எங்கே?

தேவாரப் பதிகள் எங்கே?
தெய்வ வழிபாடு எங்கே?
இவையெல்லாம் பஞ்சமா பாதகங்களாக
பதிந்து விட்டது இன்று இங்கே?

இப்பாதகங்களை போக்கி பொறிக்கப்பட்ட
நூல்களை புரட்டி வழிகாட்டும்
வளவாளர் எங்கே?

இப்பாதக செயல்களினால் இயற்கையின்
சீற்றம் இன்று பெருகுவதை
தடுப்பவர் எங்கே?

இறைவனால் படைக்கப்பட்ட எல்லா
உயிர்கள், தாவரங்கள், கடல், காற்று,
வெப்பம் போன்ற அனைத்தையும்
தணிய வைத்து நோயின்றி வாழ
பழைய பண்பாடுகளை புரட்டுவோம்
நாம் இன்று இங்கே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித இன வரலாற்றில் போரும் கலைவெளிப்பாடுகளும்



கௌரவ தேசமாணிய
ஓவியர் வசந்தரூபன் (BFA., MA., M.PHIL.).
முகாவில்.

## முன்னுரை

மனித இனம் கடந்து வந்த பாதை மிக நீளமானது. கடும் நெருக்கடிகள் நிரம்பியது. ஆதிமனிதர்கள் தமது நிலையான குடியிருப்பு வாழ்க்கையைத் தொடக்கத்தில் குகைகள், ஆற்றுப்படுகைகளில் நிலைப்படுத்தினார்கள். அப்போது இயற்கைக்கும் மனிதர்களுக்கும் இடையில் இருப்பு சார்ந்த போராட்டம் தொடர்ந்துகொண்டே இருந்தது. மழை, வெயில் முதலிய இயற்கைச் சீற்றங்கள், விலங்குகளின் தொடர்ச்சியான தாக்குதல்கள், பேரழிவுகள் முதலியவற்றைக் கடந்து மனிதர்கள் வரலாற்றில் நீண்ட தொலைவைக் கடந்து வந்துள்ளார்கள். இம்மாதிரியான இடர்களில் இருந்து தம்மையும் தன் இனத்தையும் காத்துக் கொள்வதற்காக அறிவின் துணை கொண்டு உயிர் வாழ்வின் ஆதாரங்களைச் சேகரித்துக் கொள்ளத் தொடங்கினார்கள். உலகில் உள்ள மற்ற உயிர்களைக் காட்டிலும் உயர்ந்த பண்புகளையும், தகுதிகளையும் பெற்றிருப்பதாக மனிதர்கள் தங்களை உருவகப்படுத்திக் கொண்டார்கள். இதனால், இயற்கையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டிய நிலையில் இருந்து மாறுபட்டு, இயற்கையைக் கட்டுப்படுத்தத் தொடங்கினார்கள். இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். ஒன்று புறக்காரணிகளால் உண்டான தன்னிச்சையான மாற்றங்கள். இரண்டு தனிமனித மனத்தின் அகவெளிகளில் நிகழ்கின்ற நுண்ணிய மாற்றங்கள். இந்த இரண்டு காரணிகளும் இன்றைய நவீன மனிதர்களின் இருப்பாகத் தோற்றம் கொண்டுள்ளது எனலாம். மனித மனம் தன்னுடைய இருப்பு, தனது இருப்புக்கான வாய்ப்புகள், தன்னைப் பற்றிய மேன்மையான உருவகம், இவற்றின் அடிப்படையில் உருவாகும் உரிமை மனோபாவம் உரிமைக்கான போராட்டமாக உருவெடுத்து வந்துள்ளது. இவ்வகையில் இக்கட்டுரை, மனித இன வரலாற்றில் போரும் கலையும் எவ்விதமான செயல்பாடுகளைப் பெற்று வந்துள்ளன என்பதை ஆராயும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

தனிமனித மனத்தின் ஆளுமை வேகமே இன்றைய நவீன உலகத்தின் சிறப்பாகவும், அதேசமயம் சிக்கலாகவும் மாறி இருக்கிறது எனலாம். இந்தச் சமூகத்தில் மனிதன் தனக்கான இருப்பையும், அடையாளத்தையும் நிலைநிறுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியிருக்கிறான். அதன் விளைவு, உரிமைக்கான போராட்டங்களாக உருப்பெறுகின்றன. நிலம் மற்றும் நிலம் சார்ந்த பொருட்கள், தனிமனித இயல்பையும், சமூக மனநிலையையும் மாற்றி அமைக்கும் கருவிகளாகத் திகழ்கின்றன. நிலமும், அதன்மூலம் கிடைக்கின்ற விளைபொருட்களும் தனிமனிதனின், அவனது குடும்பத்தின் வசிப்பிடம் மற்றும் உணவுத் தேவைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவு செய்கின்றன. மேலும், அவனது இருப்பைப் பாதுகாப்பான சூழலுக்குள் கொண்டு வரும் காரணியாகவும் இருக்கிறது. எனவே, மனித மனம் தன்னிச்சையாக நில உரிமை நோக்கிய பயணத்தைத் தேர்வு செய்து சமூகத்தையும், இனக் குழுக்களையும் உருவாக்கிக் கொண்டது.

தனிமனித மனத்தின் தேவைகள் நிறைவு பெற்ற பிறகு, மிஞ்சிய சமயங்களில் இரண்டு விதமான மனநிலை உண்டாகிறது. ஒருபுறம், தேவைக்கு அதிகமாகச் செல்வத்தைச் சேர்த்தல், நிலவுடைமை, மேலாதிக்க மனநிலை, பிற உயிர்களைத் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வருதல். மற்றொருபுறம் சம உரிமை, பகிர்தல், உழைப்பு, அதற்கேற்ற பயன் பெறுதல். இவை முன்பு கூறிய காரணிகளுக்கு நேர் எதிரானது. இது கோட்பாடாகவும், சமூக இயக்கமாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன.

ஒரு நாட்டில் வாழும் மக்கள்மீது போர் தொடுக்கும்போது முதலில் அந்த நாட்டின் செல்வங்களைக் கைப்பற்ற அரசு முயல்கின்றது. பிறகு அந்த நாட்டின் வளமையை அழிக்க முயல்கிறது. இயற்கை வளம் மற்றும் மனித வளத்தை அழிப்பதைச் செய்கின்றனர். ஒரு நாட்டு மக்களின்மீது அதிகாரத்தைச் செலுத்த அவர்களின் பண்பாட்டின்மீதும் அங்குள்ள பெண்களின்மீதும் வன்முறை செலுத்துகின்றது. அடுத்த தலைமுறையின் மீது ஆதிக்கத்தைச் செலுத்தும்பொருட்டு இனப்பெருக்கத்தைச் சிதைக்க முற்படுகின்றனர். எல்லா நாட்டு இராணுவமும் போரில் ஈடுபடும்போது பெண்களின் மீது வல்லுறவு கொள்வது இயல்பான ஒன்றாகவே இருக்கின்றது. அதன் தொடர்ச்சியாக ஆண் வாரிசுகள் கொல்லப்படுவதும், பெண் பிள்ளைகளை எதிரி நாட்டினர் மணந்து கொள்வதும் நிகழ்ந்து வருகின்றது. அரசின் குரோத உணர்வுகள் மற்றொரு நாட்டின் செல்வம், பண்பாடு மற்றும் இனவிருத்தி ஆகியவற்றை அழிப்பதன் மூலம் தனது அதிகாரத்தைத் தலைமுறை கடந்து தக்கவைத்துக் கொள்ள முடியும் என நம்புகிறது.

## வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட இன அழிப்புகள்

மனித இனம் தோன்றிய காலம் முதல் பல்வேறு காலகட்டங்களில் ஒரு இனத்திற்கு எதிரான வன்முறைகளும் இன அழிப்புகளும் நடந்துகொண்டுதான் உள்ளன. வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட இன அழிப்பு என்பது முதன் முதலாக வட ஆப்பிரிக்காவின் கார்த்தேஜ் என்னும் பழங்கால துனிசியாவில் நடந்தேறியது. ரோமானிய படைகளால் மேற்கொள்ளப்பட்ட இவ்வின அழிப்பு மூன்றாம் புனிக் யுத்தத்தின்போது நடந்தது. போரில் வெற்றி பெற்ற ரோமானிய படைகள், கார்தேஜ் நகரின் ஒவ்வொரு வீடாகச் சென்று, பெண்களை வன்புணர்வு செய்தும், கண்ணில் கண்டவர்களைக் கொன்றும் வெற்றியைக் கொண்டாடினர். பின்னர், நகரம் முழுவதையும் தீயிட்டுக் கொளுத்தினர். (''வரலாற்றில் பதிவான இனப்படுகொலைகள்'',www.puthiyatamil.com).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.1490 முதல் 1914 வரை இப்போதைய அமெரிக்கா முழுவதும் பரவியிருந்த அமெரிக்கப் பழங்குடிகளான செவ்விந்தியர்கள் இன அழிப்பின் மூலம் படிப்படியாக ஒருசில அமெரிக்க மாநிலங்களுக்குள் அடக்கப்பட்டுள்ளனர். ஐரோப்பியர்களின் நாடு பிடிக்கும் ஆசையில் நடைபெற்ற போர்களில் பல்லாயிரம் அமெரிக்கப் பழங்குடிகள் கொல்லப்பட்டனர். பழங்குடிகளை அழித்த பின்னர், அவர்களின் நிலங்கள் ஐரோப்பாவில் இருந்து அமெரிக்காவில் குடியேறியவர்களால் கையகப்படுத்தப்பட்டதை வரலாற்றின்வழி அறியமுடிகிறது.

1900 முதல் 1970க்கு இடைப்பட்ட காலத்தில் ஆஸ்திரேலியாவில் 2,000 முதல் 25,000 பழங்குடிக் குழந்தைகள், அவர்களுடைய குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்டு ஒரு மாபெரும் இன அழிப்பு நடந்தேறியது. ஒரு கட்டத்தில் ஐந்து இலட்சம் முதல் ஏழு இலட்சம் வரை இருந்த ஆஸ்திரேலிய பழங்குடி மக்களின் மக்கள் தொகை, இந்த இன அழிப்புக்குப் பிறகு, சுமார் 50,000ஆகக் குறைந்தது. பல்லாயிரக் கணக்கில் இருந்த டாஸ்மானிய பழங்குடிகளில் ஒருவர் கூட இல்லை என்பது ஆஸ்திரேலிய இன அழிப்பின் உச்சகட்ட கொடூரமாகக் கூறப்படுகிறது.

1850 முதல் 1864 வரையிலான காலகட்டத்தில் தெற்குச் சீனாவில் குயிங் அரச வம்சத்திற்கு எதிராக ஷாங் சியூக்யான் என்பவர் தலைமையில் நடைபெற்ற உரிமைப் போராட்டம், உள்நாட்டுப் போராக மாறியது. அதில் இரண்டு கோடி மக்கள், அரசப் படைகளால் கொல்லப்பட்டனர். ("வரலாற்றில் இன அழிப்புகள்", (www.kanniyari.blogspot.com). இருபதாம் நூற்றாண்டில் சீனாவில் மிகப்பெரிய அரசியல் மாற்றத்திற்கான விதையாக இவ்வின அழிப்பு மாறியது எனலாம். உலகின் மிகப்பெரிய இன அழிப்புகளில் ஒன்றாக இது கூறப்படுகிறது.

1975 முதல் 1999 வரையிலான காலகட்டத்தில் இந்தோனேசியாவின் ஒரு மாகாணமாக இருந்த கிழக்கு தைமூரில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தின்போது ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்கள் இன அழிப்பின் மூலம் கொல்லப்பட்டனர். இந்தோனேசியப் படைகள் நாபாம் என்னும் ஆயுதம் மூலமாகவும், இரசாயன ஆயுதங்கள் மூலமாகவும் இவ்வின அழிப்பினை நிகழ்த்தினர். அதுமட்டுமின்றி, பெரும்பாலான பகுதி மக்களுக்கு உணவு மறுக்கப்பட்டதன் காரணமாகப் பட்டினியாலும் மக்கள் இறந்தனர்.

அதற்கு அடுத்தநிலையில், மிகப்பெரிய இன அழிப்பு 1994ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவில் உள்ள ருவாண்டோ நாட்டில் நடந்தேறியது. இரண்டு இனக்குழுக்களுக்கிடையில் நடைபெற்ற சண்டையில், நூறு நாளில் எட்டு இலட்சத்திற்கும் மேலாக டுட்சி என்னும் இனமக்கள் கொல்லப்பட்டனர். ருவாண்டோ இராணுவத்தால் மிக நேர்த்தியாகவும், திட்டமிட்டும் இந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பள்ளிகள் மற்றும் தேவாலயங்களில் தஞ்சம் புகுந்த டுட்சி இன மக்களை இராணுவம் கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய இன அழிப்புகளில் ஒன்று கம்போடியாவில் 1975 முதல் 1979 வரை போல் பாட் என்பவர் தலைமையில் நடைபெற்ற கைமர் ரோக் ஆட்சியின்போது நடந்தது. கம்போடியாவின் சிறுபான்மை இனமாக இருந்த வியட்னாமியர்கள், சீனர்கள், புத்தத் துறவிகள், முன்னாள் அரசு ஊழியர்கள் என்று திட்டமிட்டு அழிக்கப் பட்டனர். அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட பஞ்சத்தால் ஆயிரக் கணக்கானவர்கள் பட்டினியால் உயிரிழந்தனர். ஐந்து வருட தேடலின் முடிவாக இருபதாயிரம் புதைகுழிகள் கண்டெடுக்கப்பட்டன. அதன்மூலம் 13 இலட்சம் மக்கள் இன அழிப்பின்போது கொல்லப்பட்டதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

## மனித இன வரலாற்றில் யூத இன அழிப்பு

உலக அளவில் இன அழிப்பு என்றால் அனைவருடைய கவனத்திற்கும் வருவது இரண்டாம் உலகப் போரின்போது யூதர்களுக்கு எதிராக ஷிட்லரால் நடத்தப்பட்ட இன அழிப்பு ஆகும். ஏறத்தாழ, 50 இலட்சம் யூதர்களைப் பலி வாங்கிய ஷஷோலோகொஸ்ட்' என்று அழைக்கப்படும் இந்த இனப்படுகொலை, இன அழிப்பின் உச்சகட்டமாகக் கருதப்படுகிறது. ("ஆமென் : 60 இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்ட வரலாறு", www.worldcinemafan.blogspot.com). யூத மக்களை நச்சு வாயு நிரப்பிய அறைகளில் அடைத்து வைத்தும், உணவில்லாமல் பட்டினி போட்டும், புதிய மருந்து கண்டுபிடிப்புகளுக்கு அவர்களைச் சோதனை எலிகளைப் போல பயன்படுத்தியும், சம்பளம் இல்லாத கூலிகளாகப் பயன்படுத்தியும் பல்வேறு சித்திரவதைகளைச் செய்து யூதர்கள் ஜெர்மனியில் கொல்லப்பட்டனர்.

இன அழிப்புக்கு எதிரான விழிப்புணர்வு இரண்டாம் உலகப் போர்க் காலகட்டத்தில் ஜெர்மனியில் நடைபெற்ற யூத இன அழிப்பிற்குப் பிறகே உண்டானது எனலாம். அதன்பின்னர், பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டு யூத இன அழிப்பில் ஈடுபட்ட நாஜி படை அதிகாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் தண்டனைகள் வழங்கப்பட்டன என்பது வரலாறு.

யூத இனம் பல்வேறு காலகட்டங்களில் இன அழிப்புக்கு உள்ளானது. ஆனாலும்கூட, அவர்கள் தங்களுடைய அடையாளங்களையும், கலாச்சாரத்தையும் விட்டுக் கொடுக்கவில்லை. தங்களுடைய கவனம் முழுவதையும் கல்வியிலும், அயராத உழைப்பிலும் செலுத்தினர். இன்றைக்கு உலக அளவில் முன்னோடி விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பெரும்பாலும் யூத இனத்தவர்களால் நிகழ்த்தப்பட்டதாகவே உள்ளதைப் பார்க்க முடிகிறது. என்றபோதும் யூதர்களின் கனவு அவர்களுடைய தேசமே ஆகும். இடைவிடாத போராட்டத்தின் மூலம் தங்களுடைய தேசத்தை அடைந்தனர். விவசாயம் முதல் விஞ்ஞானம் வரை சிறந்து விளங்கும் தேசமாக இஸ்ரேல் விளங்குவதன் மூலம் இதனை அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழப் போராட்டத்தின் வரலாறு

ஈழப் போராட்டம் என்பது இலங்கையில் தமிழர்களின் தன்னாட்சி, மரபுவழித் தாயகம் உள்ளிட்ட அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளை முன்வைத்து ஈழத்தமிழர்கள் முன்னெடுத்துவரும் போராட்டம் ஆகும். இலங்கையின் ஆட்சி அதிகாரம் வெள்ளையர்களிடம் இருந்து இலங்கையர்களுக்குக் கையளிக்கப்பட்டது. அதன்பின்னர், இலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சி அமைத்து வந்த சிங்களப் பெரும்பான்மை அரசுகளுக்கு எதிராக ஈழத் தமிழர்களின் போராட்டம் பல்வேறு அரசியல் தலைவர்களால் முன்னெடுத்து வரப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆட்சி அமைத்த சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம், தொடர்ச்சியாகக் கொண்டுவந்த இனவாத அடக்குமுறைச் சட்டங்கள், நடைமுறைகள், வன்முறைகள், இனப்படுகொலைகள் ஆகியன ஈழப்போராட்டத்திற்கு அடித்தளமிட்டன எனலாம். 1980 வரை அகிம்சாவழிப் போராட்டத்தினைக் கைக்கொண்ட ஈழத்தமிழர்கள் 1980க்குப் பிறகு அறப் போராட்டத்தில் நம்பிக்கை இழந்தனர். (நிலாந்தன், திருநெல்வேலி). 1980களில் இருந்து 2009 வரை இப்போராட்டம் ஆயுதம் ஏந்திய போராட்டமாகப் பல்வேறு போராட்ட இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டன. இவ்வியக்கங்களின் கடைசி ஆயுதப் போராட்ட இயக்கமாக இருந்த விடுதலைப் புலிகள் இயக்கம் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிக் கட்ட போரில் அழிக்கப்பட்டது. அதன்பின்னர் இப்போராட்டம் மீண்டும் முழுமையான அரசியல் போராட்டமாக மாறி உள்ளது.

1956ஆம் ஆண்டு இங்கினியாக்கலையில் சிங்கள இராணுவம் சிங்களவர்களுடன் இணைந்து 150க்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்தது. இந்தப் படுகொலையுடன் தொடங்கி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வரை சுமார் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டனர். (ஆசை. இராசையா, நல்லூர்). பல்லாயிரக்கணக்கான மக்கள் கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போயுள்ளனர். அடையாளம் தெரியாமல் இறந்தவர்களின் புகைப்படங்களையும், காணாமல் போனவர்களின் புகைப்படங்களையும் கையில் வைத்துக் கொண்டும் கண்ணீருடன் அலையும் பெற்றோர்களையும், உறவினர்களையும் ஈழத்தில் பார்க்க முடியும். காணாமல் போனவர்கள் திரும்பி வருவார்கள் என்னும் ஏக்கத்துடனும் எதிர்பார்ப்புடனும் காத்து நிற்பவர்களின் அவலமும் ஈழத்தில் உள்ளது.

## போரும் கலை வெளிப்பாடும்

ஒரு சமூகத்தின் அசைவியக்கத்தினை அறிய, அந்தச் சமூகத்தினைப் பல்வேறு தளங்களில் அணுகுதல் இன்றியமையாத ஒன்று. அவ்வகையில் ஒரு சமூகத்தின் கலைப் படைப்புகள், அந்தச் சமூகத்தினைப் பற்றி அறிய உதவும் தொடர்பியல் ஊடகமாகவும் செயல்படுகின்றன. ஓவியங்கள், புகைப்படங்கள், திரைப்படங்கள் ஆகியன கலைத்தன்மை வாய்ந்த சிறந்த ஊடகங்கள் ஆகும். அவை அந்த அளவில் மட்டும் நின்றுவிடாமல், மூலதனம் சார்ந்து இயங்கும் ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திப் பொருளும்கூட. இந்தக் கலைப்படைப்புகள் கருத்தியல் அளவில் மக்களை ஒடுக்கும் ஓர் ஆயுதமாகத் திகழ்கின்றது. அதேசமயம் பண்பாட்டளவில் உழைக்கும் மக்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் அதிகாரத்திற்கு எதிராக வெகுண்டெழச் செய்யும் போர் வாளாகவும் திகழ்கின்றதையும் மறுப்பதற்கில்லை.

ஆதிக்கம் செலுத்த முனைகின்ற அரசுக்கு ஆயுதமாக இருப்பவை துப்பாக்கிகளும் பீரங்கிகளும் மட்டுமன்று. அந்த மக்களைக் கருத்தியல்ரீதியாக அறிவை மழுங்கடிக்கச் செய்து அந்த மக்களை ஒடுக்கவும், அதிகாரம் செலுத்தவும் முடியும். இது அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு மட்டுமன்று. அதிகாரத்திற்கு எதிராகக் குரல் கொடுத்துப் போராடுபவர்களுக்கும் பொருந்தும். அந்தவகையில், சமூக விடுதலையை அவாவுகின்ற சமூகப் புரட்சியாளர்களின் ஆகச் சிறந்த ஆயுதமாகக் ஷகலை' திகழ்கின்றது. கலை என்பது புரட்சியாளர்களின் வலுமிக்க ஆயுதமாக இருப்பதனை அவதானிக்க முடிகிறது.

இசை, நடனம், ஓவியம், சிற்பம், கைவினைப் பொருட்கள், மற்றும் திரைப்படம் முதலான கலைப்படைப்புகள் கலைத்தன்மை கொண்ட பொருள் என்பதோடு மட்டும் நின்று விடாமல், மக்களின் பண்பாட்டினையும் பிரதிபலிக்கின்றன. மக்களின் ஒருங்கிணைந்த எண்ணங்களின் பண்பாட்டு நினைவுகளை உற்பத்தி செய்கின்ற ஒன்றாகவும் கலைகள் திகழ்கின்றன.

மனித வாழ்க்கையில் இடப்பெயர்வு என்பது ஆதி காலத்தில் இருந்தே தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உணவிற்காகவும், வாழ்விட வசதிகளுக்காகவும், பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் பிழைப்புத் தேடியும், பொருளாதார மேம்பாட்டிற்காகவும், இயற்கைப் பேரிடர் காரணமாகவும், போர்ச்சூழலில் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் மக்கள் இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். போர்ச்சூழல் காரணமாக, உயிர் வாழ்தலுக்காகவும், தங்களுடைய அடையாளத்தை இழந்துவிடாமல் இருப்பதற்காகவும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் மாறுபட்ட மொழி, கலாச்சாரம், பருவநிலை கொண்ட முற்றிலும் மாறுபட்ட அந்நிய நாடுகளில் அகதிகளாகச் சென்று வாழ்கின்ற இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களின் புலப்பெயர்வு, பிற இடப்பெயர்வுகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டது.

இலங்கையில் இருந்து ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு காரணங்களுக்காக அந்நிய நாடுகளுக்குச் சென்று வாழ்தல் நிகழ்ந்துள்ளது. எனினும், இலங்கையின் அரசியல் நெருக்கடி காரணமாகத் தாய்மண்ணில் இருந்து புலம்பெயர்ந்தவர்களே தங்களுடைய அடையாளத்தைத் தக்கவைத்துக் கொள்ள கலை - இலக்கியச் செயல்பாடுகளில் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர். ஒரு சில கலைஞர்கள் கடும் நெருக்கடிகளுக்கு இடையில் தாயகத்தில் இருந்தபடியே இத்தகைய கலைச் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் எதிர்கொள்கின்ற மனநெருக்கடிகளுக்கு ஒரு வடிகாலாக கலைச்செயல்பாடுகள் அமைகின்றன எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் போரின் அழிவுகளைக் கண்ணுற்ற ஓவியர் பிக்காசோ, வெகுண்டெழுந்தார். உலகப்போரில் பேரழிவுகளை மக்கள் அறியக் கூடிய வகையில் நவீனக் கலையை ஊடகக் கலையாக மாற்றினார். அதன்விளைவாக, 'குவர்னிகா' எனப்படும் ஓவியப் படைப்பு உருவானது. இரண்டாம் உலக யுத்தத்தின் இன அழிவைப் பதிவு செய்த படைப்பு இது. இதனைத் தொடர்ந்து நவீனக் கலைஞர்கள் தமது படைப்புகளில் வன்முறைகளுக்கு எதிரான குரலைப் பதிவு செய்யத் தொடங்கினர்.

குவர்னிக்கா ஓவியமானது போரின் கொடுமையை உலகத்தின் பார்வைக்கு ஓர் அழகியல் தன்மையுடன் கொண்டு சேர்த்தது. அந்த ஓவியத்தில் அழகியல் சார்ந்த சோகமும், அழிவின் பயங்கரமும் ஒருசேர வெளிப்பட்டிருந்தன. காலப்போக்கில் இது 'குவர்னிக்கா' என்னும் ஓவியப் பாணியாகவே மாற்றம் பெற்றது. இதுபோன்ற படைப்புகள், வன்முறைகள், மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள், போர்கள், இன அழிப்புகள், இவை தவிர இயற்கைப் பேரிடர்கள், மனத்தைக் கவரும் இயற்கைக் காட்சிகள் என அனைத்தையும் ஓவியங்களில் பதிவு செய்தன.

ஈழத்தில் உருவான தேசிய இனப்பிரச்சனை, அதனைத் தொடர்ந்து உருவான ஆயுதப் போராட்டம், இன அழிப்பு எனப் பலவும் ஈழத்து ஓவியங்களில் பதிவு செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கமுடிகிறது. இதில்பிக்காசோவின் குவர்னிக்கா ஓவியத்தின் பிரதிபலிப்பினைப் பார்க்க முடிகிறது.

மனித குலம் சந்தித்த இன்னல்களும், அது சார்ந்த கலை வெளிப்பாடுகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆளும் வர்க்கத்தினரால் மக்கள் அடக்கு முறைக்கு உள்ளாவதையும், இன அழிப்புக்கு உள்ளாவதையும் கலை இலக்கியங்கள் பதிவு செய்து வந்துள்ளன. அடக்கியாளும் அதிகாரத்தின் கோர முகத்தினையும், ஆதிக்கச் செயல்பாடுகளையும் மக்கள்முன் எடுத்துரைத்து, மக்களை விழிப்படையச் செய்யும் ஊடகமாகக் கலைச் செயல்பாடுகள் திகழ்கின்றன எனில் மிகையாகாது.

ஓவியக் கலையில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், சம காலத்து ஈழத்து ஓவியப் படைப்புக்களை பார்க்கும் போது, மீண்டும் பிக்காசோ போன்ற ஓவியர்கள் நினைவுக்கு வருகின்றனர். சமூகம் சார் படைப்புக்களாக ஓவியம் மட்டுமல்லாது சிற்பங்கள், நாடகங்கள், இலக்கியங்கள், கவிதைகள், நாவல்கள் மற்றும் திரைப்படங்கள் என அனைத்து கலைகளும் பதிவு செய்துள்ளன.

இன்றும் கூட தமிழ் மக்களின் இன்னல்களை கலைப் படைப்புக்களாக படைத்து வருகின்றனர். மூத்த கலைஞர்கள் தொட்டு கலைசார் கற்றல்களில் ஈடுபடும் மாணவர்கள் வரை தமது மனவடுக்களை இன்றும் வெளிப்படுத்துகின்றனர். 2009ற்குப் பிற்பாடு நடாத்தப்பட்ட, நடாத்தப்பட்டு வருகின்ற ஓவிய கண்காட்சிகள் இதற்குச் சான்று பகிர்கின்றன. ஓவியக் கழகங்கள் மற்றும் ஓவியர்கள் இதற்குப் பெரும்பங்காற்றி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுக வேதங்கள்

ந.நிரோசன்,
முல்லையடி

நான் கருவுற்ற போதே
கந்தகப் பெரு வெடியோசைகள்
கருப்பையில் என் செவிப்பறையை
தட்டியெழுப்பியதேயன்று

என் பிரசவ வழிப்பயணத்திலும்
வழி மறிப்புக்கள் ஏராளமே
படையரன் எங்கும் பரிசோதனைகளே
பத்து மாத குத்து வலியிலும் என் தாயவள்
பல மணிநேர பரிதவிப்பு அங்கும்

செத்துப் பிழைத்து அவள் பெற்ற சிசுவை
பார்க்க வந்த என் அப்பனை
கறுத்த துணி போர்த்தி துரப்பிலே கடத்தல்
சித்திரை வதை தாங்கிய மேனி வருகிறதே அங்கு

அம்மணி அருகே அம்மணப் பிறவியாய் அங்கே
என் கதறலை தாண்டியும் செம்மணியில் புதைந்த
அப்பாவைத் தேடி பெண் சிசுவொன்று கதறியது அங்கே
தந்தை முகம் அறியாப் பிள்ளையும் கணவன் சென்ற
வழிதேடி காத்திருக்கும் பெண்மை பலநூறு உண்டிங்கே

தொட்டில் தூங்கிய நாட்களை விடவும்
வெட்டிய குழியிலே தூங்கிய நாட்களே அதிகமடா
முகமாலை வழியால் பீரங்கி குண்டுகளும்
ஆனையிறவு வழியால் பல்குழல் குண்டுகளும்

என் பளை மண்ணில் பலநூறு எறிகணைகள்
சங்கமித்து சவக்குழி தோண்டி வைக்குமிங்கே...!
செத்தவனை தூக்க வழியின்றி செல்வந்தனும் ஏழையும்
சேர்ந்தோடும் ஒற்றுமையைக் கண்டேனே
பகட்டுச் சாதி பார்த்த பச்சோந்திகள் கூட கெட்டதை மறந்து
பச்சைத் தண்ணீரையும் பழஞ்சோற்றையும் பகிர்ந்துண்டு
பசி தீர்த்த முகாம் வாழ்வையும் பார்த்தேனே

பட்ட கதியெல்லாம் பாடைறேறிப் போச்சு
படிப்பினையைத் தொலைத்துவிட்டு
மற்றவனின் குறை கண்டு பித்தனைப் போல்
அலையும் மானிடனே விற்றுவிடாதீர்
அனுபவத்தை நிலைமாறும் வாழ்வில்
நீ வாழும் வாழ்வே நிலையில்லா உயிரின்
வயதாகும் வடிவம் சுடுகாட்டில்
புதையும் ஒருநாளில்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களும் தண்டிக்கப்படும் தண்டனை சட்டக் கோவையின் பிரிவுகளும்



ந.நிரோசன்
[பொலிஸ் உத்தியோகத்தர்]
பளை.

இலங்கைப் பொலிஸின் நிர்வாகத்திற்கு இலகுவான வகையில் குற்றத்தின் நன்மைக்கு ஏற்ப இருபத்தாறாக (26) பொலிஸ்மா அதிபரின் சுற்றறிக்கை 2509/ 2014 ஆம் இலக்க குற்றச் சுற்றறிக்கை 17/2014 ஆம் இலக்கப்படி பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

| இல | குற்றம் | த.ச.கோ.பிரிவு |
|---|---|---|
| 01 | ஆட் கவர்தல் | 350 |
| 02 | ஆட் கடத்தல் | 353 |
| 03 | தீ அல்லது வெடி பொருட்களால் சொத்தளிவு | 418 |
| 04 | 25000 ரூபாவிக்கு மேலதிகமாக சேதம் | 410 |
| 05 | வீடு உடைத்தல் | 440 |
| 06 | பெருங்காயம் ஏற்படுத்தல் | 316 |
| 07 | பயங்கர ஆயுதங்களினால் காயம் ஏற்படுத்தல் | 315 |
| 08 | கொலை | 294 |
| 09 | குற்றத்துக்கு இடமாக மனித உயிர்போக்கல்/தூண்டுதல் | 293/299 |
| 10 | கற்பழிப்பு 16 வயதுக்கு கூடியது | 363(அ) |
| 11 | கற்பழிப்பு 16 வயதுக்கு குறைவானது | 363(உ) |
| 12 | சட்ட விரோதமான கூட்டம்/கலவரம் | 138 - 144 |
| 13 | கொள்ளை | 379 |
| 14 | பாலியல் தொல்லை | 365(ஆ) |
| 15 | அச்சுறுத்திப் பெறுதல் (பணம், ஆவணம்) | 318 |
| 16 | 3 லட்சத்திற்கு மேலதிகமாக நம்பிக்கைத் துரோகம் | 386 |
| 17 | 25000 ரூபாய்க்கு கூடிய A விளைச்சல் பொருட் திருட்டு | 368(அ) |
| | B கால் நடைத் திருட்டு | 368(ஆ) |
| 18 | போலி நாணயம் அச்சடித்தல் | 226 |
| 19 | அரசுக்கு எதிரான தவறு | 114 |
| 20 | குழந்தை விபச்சாரம் | 360(ஆ) |
| 21 | பிள்ளைகளை கொடுத்தல் | 308(அ) |
| 22 | குழந்தை விலைப்படுத்தல் | 360(இ) |
| 23 | ஆயுதக் கட்டளைச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் தவறுகள் | (1966/17இலக்க சட்டம்) |
| 24 | நாட்டுத்துப்பாக்கி, ரிஜிட்டல் பதிவின்றி வைத்திருத்தல் | (1996/20இலக்க சட்டம்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. கரோயின், கொக்கையின், மொபின் உற்பத்தி, கடத்தல் தன்வசம் வைத்திருத்தல் (1984/13 இலக்க சட்டம்)

கரோயின் 02g கொக்கையின் 02g அசிஸ்(ஜஸ்) 1kg
மொபின் 500g கஞ்சா 5kg இதற்கு கூடுதலாக இருத்தல் வேண்டும்.

26. பொலிஸ் உத்தியோகத்தரின் கடமைக்கு இடையூறு விளைவித்தல் (தண்டணை சட்டக் கோவை 170 - 187)

பிரிவு 170 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளரின் அழைப்புக் கட்டளை அல்லது வேறு நடவடிக்கை செயற்பிக்கப்படாது தவிர்ப்பதற்கு என தலைமறைவாக இருத்தல்.

பிரிவு 171 (த.சே.கோ)
அழைப்புக் கட்டளை அல்லது வேறு நடவடிக்கை செயற்பிக்கப்படுவதை தடுத்தல் அல்லது அவை வெளியிடப்படுவதை தடுத்தல்.

பிரிவு 172 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளர் ஒருவரின் கட்டளை ஒன்றுக்கு கீழ்ப்படிந்து சமூகம் அளிக்காமை.

பிரிவு 173 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளர் ஒருவருக்கு ஆவணத்தை காண்பிப்பதற்கு சட்டப்படி கட்டுப்பட்டுள்ள ஆள் ஒருவர் அதனை அவ் அலுவலருக்கு காண்பிக்க தவறுதல் மறுத்தல்

பிரிவு 174 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளருக்கு அறிவித்தல் அல்லது தகவல் கொடுக்க சட்டப்படி கட்டுப்பட்டுள்ள ஆள் ஒருவர் அதனை அச் சேவையாளருக்கு கொடுக்காது விடல்

பிரிவு 175 (த.சே.கோ)
தவறான தகவல்களை கொடுத்தல்

பிரிவு 176 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளர் ஒருவரால் சத்தியம் செய்து கொள்ள முறைப்படி தேவைப்படுத்தப்படுமிடத்தில் சத்தியம் செய்ய மறுத்தல்.

பிரிவு 177 (த.சே.கோ)
கேள்வி கேட்பதற்கு அதிகாரமுள்ள பகிரங்க சேவையாளருக்கு விடையளிக்க மறுத்தல்.

பிரிவு 178 (த.சே.கோ)
கூற்று ஒன்றுக்கு ஒப்பமிட மறுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு 179 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளருக்கு அல்லது சத்தியத்தை எழுவதற்கு அதிகாரமுள்ள ஆட்களுக்கு சத்தியத்தின் மீது பொய்க் கூற்று வழங்குதல்.

பிரிவு 180 (த.சே.கோ)
வேறோர் ஆளுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் பகிரங்க சேவையாளரது சட்டமுறைத்துவத்தை பயன்படுத்த செய்யும் உளக்கருத்துடன் பொய்த் தகவல் கொடுதல்.

பிரிவு 181 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளர் ஒருவரின் சட்டமுறையான அதிகாரத்தின் மீது ஆதாரம் எடுக்கப்படுவதை எதிர்த்தல்

பிரிவு 182 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளர் ஒருவரின் அதிகாரத்தின் மீது விற்க முனையப்படும் ஆதனத்தின் விற்பனைக்கு முட்டுக்கட்டை இடுதல்.

பிரிவு 183 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளரை அவரது பகிரங்க பணிகளை நிறைவேற்றுவதில் முட்டுக் கட்டையிடுதல்.

பிரிவு 184 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளருக்கு உதவியளிக்க சட்டப்படி கட்டுப்பட்டுள்ள போது உதவியளிக்காது விடுதல்.

பிரிவு 185 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளர் ஒருவரால் முறைப்படி வெளிப்படுத்தப்பட்ட கட்டளைக்கு கீழ்ப்படியாமை.

பிரிவு 186 (த.சே.கோ)
பகிரங்க சேவையாளருக்கு ஊறு ஏற்படுத்துவதற்காக அச்சுறுத்தல்

பிரிவு 187 (த.சே.கோ)
ஊறிலிருந்து பாதுகாப்பு கோரி சட்டமுறையான விண்ணப்பம் ஒன்றை பகிரங்க சேவையாளருக்கு செய்யாது விடுமாறு தூண்டுவதற்காக ஆட்கள் எவரையும் அச்சுறுத்தல்.

மேற்குறிப்பிட்ட குற்றங்களை புரிபவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் இங்கு தண்டணை சட்டக் கோவையில் கூறப்பட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கான தண்டனை வழங்கப்படும். மொத்தமாக தண்டனை சட்டக் கோவையில் 490 பிரிவுகள் உள்ளது. இவை நீதிமன்றத்தின் உத்தரவின் பெயருடன் வழக்கு பதிவு செய்யப்படும் போது மட்டுமே நிறைவேற்றப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை தரும் நோயற்ற வாழ்வு



DR. க.கிருஷானி BSMS,
மருத்துவப் பொறுப்பதிகாரி,
இலவச சித்த மருந்தகம், முகமாலை.

உணவே மருந்து என்பதற்கு அமைய இயற்கையோடு இணைந்த மருத்துவமே சித்த மருத்துவம். இயற்கையின் தட்ப வெப்ப மாறுதலுக்கு ஏற்ப மனித உடலும் பல சவால்களுக்கு முகங்கொடுகின்றது. இவ் சவால்களால் ஏற்படும் உடல் உபாதைகளுக்கு அந்தந்த பருவகாலங்களில் விளையும் தாவரங்களே மருந்தாகி உடல் ஆரோக்கியத்தை பேணுகின்றன.

அத்துடன் அவரவர் வாழும் இயற்கை சூழ்நிலையில் வளரும் தாவரங்களினை கொண்டே அவ் வசிப்பிடத்தில் வாழ்கின்ற மக்களுக்கு சிகிச்சை செய்வதன் மூலம் முழுமையான வினைத்திறனான சிகிச்சையை வழங்க முடியும்.

ஏனெனில் இயற்கையின் தட்ப வெப்ப மாற்றங்களுக்கு ஏற்ப தாவரங்கள் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்காக பல இராசாயன சுரப்புக்களை சுரக்கின்றன. எனவே மனித உடலில் மாற்றங்கள் ஏற்படும் போது அவ் இராசாயன சுரப்புக்களை மனிதன் உள்ளெடுப்பதன் மூலமே அந்நோய் நிலைகளை சரிவர குணப்படுத்தி இயற்கையுடன் சமநிலையில் வாழ முடியும். இவ் இராசாயன சுரப்புக்களின் தொழிற்பாடுகளையே சித்தர்கள் சுவையின் அடிப்படையில் எமது சித்த மருத்துவத்தில் கூறியுள்ளனர். தற்போது விஞ்ஞானமும் அதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக கி.பி 12-15 ம் நூற்றாண்டுகளில் அரசாண்ட மன்னன் பரராசசேகரன், செகராசசேகரன் ஆகிய மன்னர்களால் யாழ்ப்பாண மக்களிற்காக யாழ்ப்பாண சீதோஷ்ண நிலைக்கேற்ப பரராசசேகரம், செகராசசேகரம் போன்ற நூல்கள் எழுதப்பட்டன.

வடமாகாண மக்களுக்கு வடமாகாணத்திற்குரிய தாவரங்களே மிகவும் சிறப்பு. இத் தாவரங்கள் சூழலின் வறட்சி, காற்று, பூச்சி, மழை என்பவற்றினை எதிர்த்து தக்கன பிழைத்து வாழ்வதற்கு தேவையான சில சுரப்புகளை சுரக்கின்றன. இச் சுரப்புக்கள் பட்டை, கட்டை, மொட்டு, வேர், இலை, பூ போன்ற தாவரப்பாகங்களில் சேமிக்கப்பட்டு இருக்கின்றன.

தாவரங்கள் தம்மை பாதுகாக்க சுரந்த சுரப்பினை நோயாளர்களுக்கு கொடுக்கும் போது அச்சுரப்பு எவ்வாறு தாவரத்தை நோயிலிருந்து பாதுகாத்ததோ அது போலவே மனித உடலையும் நோயிலிருந்து பாதுகாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மருந்தாகும் தாவரப் பாகங்கள் நாட்பட்டதாக இல்லாது இருப்பதுடன் சுத்தமானதாகவும் முறையாக களஞ்சியப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

## யாழ்ப்பாண சித்த நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள வடமாகாணத்தில் சிறப்பாக வளரும் தாவரங்கள்.


1. சகல உடல் உபாதைகளையும் குணப்படுத்தும் திரிபலா.

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் என்ற இம்மூன்றும் சேர்ந்ததே திரிபலா என்று சித்த மருத்துவத்தில் அழைக்கப்படுகின்றது.

மனித உடலில் முத் தோசங்கள் குழப்பமடையும் போதே நோய்கள் உருவாகின்றன. எனவே இம்மூன்று சரக்குகளையும் கசாயமாகவோ, காயவைத்து இடித்து தூளாக்கி சூரணமாகவோ உள்ளெடுக்கும் போது நோய் வராது தடுப்பதுடன் என்றும் இளமையான தோற்றத்தையும் உடலுக்குத் தரும்.

இவ் திரிபலா கசாயமானது மேலைத்தேய மருத்துவத்தின் நுண்ணுயிர்க் கொல்லி (Antibiotic) மருந்திற்கு இணையானது என்று ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

(i) கடுக்காய்: ***Terminalia chebula***



இதன் விதை நஞ்சாகும். எனவே விதையை நீக்கி விட்டு மேற்தோலை மட்டும் பயன்படுத்த வேண்டும். இம் மரபானது தற்போது அருகி வருகின்றது. எமது யாழ்ப்பாண மண்ணில் மிகச் சிறப்பாக வளரக்கூடியதும் நிழல் தரு மரமும் ஆகும். அதிகளவில் நாட்டப்பட வேண்டிய மரமாகும்.

(ii) நெல்லிக்காய்: ***Phyllanthus emblica***



முன்னைய காலங்களில் பெரும்பாலான வீடுகளில் காணப்பட்ட இம் மரமானது தற்போது அருகிக் கொண்டு வரும் மரமாகும். இது குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே கிடைக்க கூடியதாக இருப்பதால் நெல்லிக்காயை உலர்த்தி நெல்லி வற்றல் ஆக்குவதன் மூலம் வருடம் முழுதும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

(iii) தான்றிக்காய்: ***Terminalia belirica***




இம் மரமானது தற்போது அருகிக் கொண்டு வருகின்றது. எனினும் இலகுவாக உற்பத்தி செய்ய முடியும் என்பதனால் விழிப்புணர்வு மூலம் மர நடுகை ஊக்குவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய தாவரங்கள்


**(i) ஆவாரை: *Cassia auriculata***





"ஆவாரை இருந்தால் நாம் சாவாரைக் காணோம்" என்பது ஆன்றோர் வாக்கு. இது ஒரு அழகான கண் கவரும் மரமாகும்.

இதன் வேர், பட்டை, இலை, பூ, காய் என்பன மருந்தாக பயன்படுகின்றன. இம் மரத்தின் மொட்டுடன் கூடிய பூக்களினை கழுவி நிழலில் உலர்த்தி பொடி செய்து குடிநீராக காலை மாலை பயன்படுத்தி வர இரத்தத்தில் சக்கரையின் அளவு கட்டுக்குள் இருக்கும்.

**(ii) கடல்ராஞ்சில்: *Salacia reticulata***







இதன் பட்டை, கட்டை என்பன இரத்தத்தில் சக்கரையின் அளவை குறைக்க பயன்படும்.


இம் மரத்தின் கட்டையை குடைந்து குடுவை போல செய்து அதனுள் முதல் நாள் இரவு தண்ணீர் நிரப்பி வைத்து விட்டு மறுநாள் காலை வெறும் வயிற்றில் சலரோக நோயாளிகள் குடிப்பார்கள். இரத்தத்தில் சக்கரையின் அளவு கட்டுக்குள் இருக்கும். தாவரம் தயாரித்து வைத்த பதார்த்தங்கள் இந் நீரினுடன் ஊறி இருப்பதனால் நீர் சிவப்பாகவும் மாறி இருக்கும்.

**(iii) நாவல்: *Syzygium cumini***



நாவல் மரத்தின் பட்டை, பழத்தின் விதை என்பன இரத்தத்தில் சீனியின் அளவை குறைக்க பயன்படும். பழத்தின் விதையை காயவைத்து பொடி செய்து குடிநீராக காலை மாலை பயன்படுத்தி வர இரத்தத்தில் சக்கரையின் அளவு கட்டுக்குள் இருக்கும்.


**(iv) சரக்கொண்றை: *Cassia fistula***



நீளமான அழகான பூக்கள் நிரம்பிய மரமாகும். அருகிக் கொண்டு வரும் மரமாகும்.
இதன் பட்டை இரத்தத்தில் சக்கரையின் அளவை குறைக்க பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(v)** தேற்றா: ***Strychnous potatorum***



"தேற்றாவினால் தேற்றுக மைந்தரை" என்று கூறப்படும். தேற்றாங் கொட்டையானது உடல் வலிமையை அதிகரிக்க பயன்படுவதுடன் நீரிழிவு நோயாளிகளின் இரத்தத்தில் சக்கரையின் அளவை குறைக்க பயன்படுவதுடன் உடலுக்கு வன்மையையும் கொடுக்கும்.

ஆவாரை, கொன்றை, கடல்ராஞ்சில், நாவல் என்பவற்றின் பட்டைகளை கசாயமாக்கி குடித்து வர இரத்தத்தில் சக்கரையின் அளவு கட்டுக்குள் இருக்கும். அழிந்து வரும் மரங்களில் மிக முக்கிய இடத்தைக் கொண்டுள்ளது.

3. கழிச்சல், இரத்தப்போக்கு தீர பஞ்ச துவர்ப்பி

**(i)** ஆல்: ***Ficus bengalensis***



**(ii)** அரசு: ***Ficus religiosa***



**(iii)** இத்தி: ***Ficus tinctoria***



**(iv)** அத்தி: ***Ficus racemosa***



**(v)** நாவல்: ***Syzygium cumini***



ஆல், அரசு, அத்தி, இத்தி, நாவல் ஆகிய ஐந்து மரங்களின் பட்டைகள் துவர்ப்பு சுவை உடையதால் பஞ்சதுவர்ப்பி என்றழைக்கப்படுகின்றன.


இவற்றின் கசாயமானது, கிருமிகளை அழித்து கழிச்சல், வயிற்றோட்டம், மலத்துடன் சீதம் வெளியேறல், அதிசார நிலைகளையும் குணப்படுத்தும்.

மாதவிடாய் காலத்தில் ஏற்படும் அதிக இரத்தப்போக்கினையும் கட்டுப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


4. பெரு மரங்களின் பட்டைகள்

(i) மருது: ***Terminalia arjuna***



மருதம் பட்டை கசாயமானது இதயத்தை பலப்படுத்தும். இது ஒரு பெரு மரமாகும். இம் மரம் அதிகமாக நீர் நிலைகளிற்கு அருகிலேயே காணப்படும்.

(ii) வேம்பு: ***Azadirachta indica***



இதன் சகல பாகங்களும் உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன. இலை, பூ, பட்டை, வேர், காய், விதை என்பன பயன்படுகின்றன. வித்திலிருந்து பெறப்படும் எண்ணெய் ஆனது கிருமிகளால் வரும் அனைத்து வித தொற்றுக்களையும் தீர்க்கும் தன்மை உடையது.

5. நன்மை அளிக்கும் நடுத்தர மரங்கள்

(i) பூவரசு: ***Thespesia populnea***



முன்னைய காலங்களில் பெரும்பாலான வீடுகளில் வேலிகளாக இடப்பட்டிருந்த இம் மரமானது தற்போது அருகிக் கொண்டு வரும் மரங்களில் இடம்பிடித்துக் கொண்டது.

இதன் பட்டையானது கசாயமாக்கி புண் கழுவ பயன்படும். மிகச்சிறந்த தொற்று நீக்கியாகும். சவலோன் தொற்று நீக்கிக்கு இணையானது.

(ii) ஒதி: ***Odina woider***



முறிவு நெறிவுகளின் போது அசையாது வைத்து கட்ட இதன் பட்டை பயன்படும். இதன் பட்டை, இலை என்பன வலி, வீக்கம் என்பவற்றை குணப்படுத்தும்.

(iii) புங்கு: ***Pongamia pinnata***



இதன் பட்டை, வேர், விதை என்பன மருத்துவத்தில் பயன்படும்.

வேரானது அடிகாயத்தின் போதான வீக்கம், வேதனையை குறைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதையிலிருந்து பெறப்படும் எண்ணெய் புங்கம் எண்ணெய் எனவும், பட்டையிலிருந்து புங்கம் பட்டைத் தைலமும், பட்டையை துருவிப் பிழிந்த பாலுடன் தேங்காய்ப் பால் சேர்த்து பெறப்படும் எண்ணெய் புங்கம் பால் எண்ணெய் எனவும் அழைக்கப்படும். புங்கம் பால் ஆனது சலரோக நோயாளிகளில் ஏற்படும் புண்ணிற்கு சிறந்த தீர்வு அளிக்கக் கூடியது.

**(iv)** நொச்சி: ***Vitex negundo***



கழுத்திற்கு மேல் உள்ள உடலுறுப்புக்களில் ஏற்படும் பெரும்பாலான நோய்களிற்கு சிறந்த நிவாரணியாக அமைகின்றது. மூக்கடைப்பு, தலைவலி, தலைப்பாரம், பீனிசம் போன்றவற்றிற்கு மிகச் சிறந்த பலனை தருகின்றது. இலைகள் ஒத்தடம் பிடிப்பதற்கும், நொச்சித் தைலம் சுவாசப்பாதையையும் சீர்படுத்துகின்றது.

அத்துடன் மூட்டுவாத நோய் நிலைகளின் போது ஒத்தடம், வலி, நிவாரண தைலங்களில் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

சூழலில் வெயிற் காலங்களில் இத் தாவரத்திலிருந்து வெளியேறும் சுரப்புக்கள் கூட காற்றிலுள்ள கிருமிகளை அழிக்கும் தன்மை உடையதாகின்றது.

இவ்வாறாக எமது பிரதேசத்தில் இயற்கையாகவே தோன்றி எம்மை அறியாமலேயே எமது ஆரோக்கியத்தில் பங்கெடுக்கின்ற இவ்வாறான பெறுமதியான தாவரங்களை அவை வளரும் இடங்களிலேயே பேணிப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும்.

காட்டில், அதன் இயற்கை சூழலில் அவ் தட்ப வெப்ப மாற்றங்களிற்கு முகம் கொடுத்து, தக்கன பிழைப்பதற்காக தானாகவே சுரப்புக்களை சுரந்து தம்மை நிலைநிறுத்திக் கொள்ளும் தாவரங்களே மிகுந்த மருத்துவ குணங்களே சரியா ன விகிதத்தில் தன்னகத்தே கொண்டிருக்கும். இவையே மருத்துவத்திற்கு ஏற்புடையதாகும்.

எனவே எம்மால் இயலுமான வரையில் விழிப்புணர்வினை வழங்கி மரங்களை அழிப்பதனை தடுப்பதுடன், மர நடுகையையும் ஊக்குவிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சக்தி பதிப்பகம், மீசாலை – 0773160464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org